
# தமிழரசு

பிப்ரவரி 2005


மற்றும்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
தை – மாசி
மலர்: 36 இதழ்: 8
பிப்ரவரி 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்கிறேன் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை) ..... 2

★ மனிதநேயத்தோடு எப்போதும் விளங்கவேண்டியது காவலர்களின் கடமையாகும். ..... 15

★ சென்னையில் 56ஆவது குடியரசு தின விழா ..... 19

★ மீனவர்கள் இழந்துவிட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ..... 22

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, புதிய கட்டுமரம் வலைகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி ..... 24

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவி, மாநில அரசு மூலமாகத்தான் அளிக்கப்பட வேண்டும் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ..... 25

★ கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்திடும் எண்ணெய்ப்பனை சாகுபடி ..... 27

★ கோடையிலும் சென்னைக்குத் தண்ணீர் கிடைத்திட புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் ..... 29

★ பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் ..... 32

★ சுனாமிப் பேரழிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.137 கோடியில் புதிய தொகுப்பு உதவித் திட்டம் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு ..... 33

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விசைப்படகுகள் வாங்க மானிய உதவி - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள் ..... 36

★ ஒவ்வொரு நாளும் தமிழக முன்னேற்றம் – ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய பதிலுரை ..... 37

★ தோட்டக்கலை வளர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் ..... 49

★ 13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட – ஊராட்சி – வார்டு அளவிலும் சுனாமிப் பேரலை நிவாரணக் குழுக்கள் ..... 51

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணையின்படி சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்கம் ..... 55

★ சீர்மிகு சென்னை – சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ..... 57

★ சுனாமி நிவாரண உதவிகளில் சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதம் ..... 62

★ கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம் ..... 64

★ அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் ..... 66

★ திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் ..... 70

★ இந்தியாவிலேயே மிகப்பெரிய காற்றாலை ..... 72

★ தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதி உதவி ..... 80


### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை :** தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் உரையாற்றுதல்.

**இரண்டாம் பக்க அட்டை :** பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட – சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தல்.

**நான்காம் பக்க அட்டை :** இந்தியக் குடியரசுத்தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழா

*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., ஆணையர் மற்றும் இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்கிறேன்

மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

2005ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய மனமார்ந்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் வளமான வாழ்க்கைக்கும், இம்மாநிலத்தின் விரைவான வளர்ச்சியை உறுதி செய்யவும் நான் என்னுடைய அயராத ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிப்பேன் என்று உறுதி அளிக்கிறேன்.

2. வலுவான மனஉறுதியுடனும், அசையாத நம்பிக்கையுடனும், எடுத்த கடமையைத் திறம்பட நிறைவேற்றும் ஒருமித்த குறிக்கோளுடனும் செயல்படுவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்குச் சான்றாக அமைந்த மகத்தான வெற்றிகளைக் கண்ட குறிப்பிடத்தக்க ஆண்டாக கடந்த 2004ஆம் ஆண்டு அமைந்திருந்தது. பலரைக் கதிகலங்கச் செய்து வந்த கடத்தல் கொள்ளையன் வீரப்பனை 18.10.2004 ஆம் நாளன்று ஒழித்துக்கட்டியதும், சென்னைக்குக் குடிநீர் வழங்க 31.5.2004ஆம் நாளன்று புதிய வீராணம் திட்டத்தைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வந்ததும் நாம் அனைவரும் மகிழத்தக்க வரலாறு படைக்கும் சம்பவங்கள் ஆகும்.

3. காட்டுக் கொள்ளையன் வீரப்பன் தமிழ்நாட்டில் மட்டுமின்றி கர்நாடக மாநிலத்திலும், அரசுக்குச் சவாலாகவும் நவீன ஆட்சி முறைக்குப் பின்புலமாக விளங்கும் நெறிமுறைக் கோட்பாட்டிற்கே ஒரு கேள்விக்குறியாகவும் இருந்து வந்தான் என்பதை மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். வீரப்பனும், அவனுடைய கூட்டத்தினரும், அளித்துவந்த அச்சுறுத்தலை ஒழித்துக்கட்ட, சிறப்பு அதிரடிப் படையினருக்கு ஒரு தெளிவான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்திருந்தார்கள். இந்தச் சிறப்பு அதிரடிப்படை, கட்டுக்கோப்பாகவும், கர்நாடக அரசு இதற்கென அமைத்திருந்த சிறப்புப் படையுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைந்தும், முழு அதிகாரத்துடன், சுதந்திரமாகச் செயல்படுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்தார். இது, எதற்கும் துணிந்த வீரப்பன் மற்றும் அவனுடைய கூட்டத்தினரைப் பிடிக்க பத்தாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த தேடுதல் வேட்டையை, வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது கவனமாக உளவுப் பணியில் ஈடுபட்டு விரிவாகத் திட்டமிடப்பட்டு, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளினால் பழங்குடியினரைத் தோழமையாக்கிக் கொண்ட அணுகுமுறை மற்றும் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் தான் வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழிப்பது சாத்திய மாகியது.

4. சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும் பணியாளர்களும் தங்களுடைய இல்ல சுகங்களையும் பாதுகாப்புகளையும் துறந்து, பழி பாவங்களுக்கு அஞ்சாத கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் பிடிக்க, இயல்பான வாழ்க்கைக்கு இலாயக்கற்ற அடர்ந்த காடுகளில் பல ஆண்டுகள் இடையறாத வேட்டையில் தங்களுடைய வாழ்வை அர்ப் பணித்ததை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் பழங்குடியினர் மத்தியில், தாம் பழிவாங்கப்படுவோம் என்கிற அச்ச உணர்வை ஏற்படுத்தியதையும் சிறப்பு அதிரடிப்படை மற்றும் ஏனைய துறைப் பணியாளர்களைக் கொடூரமாகத் தாக்கிக் கொன்றதையும் கருதிப் பார்க்கையில் இந்த நினைவை விட்டகலாத மாபெரும் வெற்றி இரட்டிப்புப் பாராட்டுக் குரியதாகிறது.

5. நாட்டிலேயே மிகச்சிறந்த காவல் படை எனப் பெயரெடுத்த தமிழ்நாடு காவல் படையின் தொழில்ரீதியான அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவற்றின்மேல் அசையாத நம்பிக்கை வைத்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழித்துக்கட்டும் தனது இலட்சியத்தில் ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை. கொலை, கொள்ளை மற்றும் சொத்துக்களைச் சீரழித்தல் மேலும் விலை மதிப்பற்ற பாரம்பரியச் சொத்தான, வளமான நம்முடைய உயிரின வாழ்க்கைச் சூழலைச் சூறையாடுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு, தீர்வுகாண முடியாமல் இத்தனை காலம் நடமாடிய கொலை வெறிப்பிடித்த இந்தத் தீயச் சக்தியை நமது சமுதாயத்திலிருந்து அறவே ஒழித்துக் கட்டும் ஆபத்து மிகுந்த பணியில் வெற்றியின் சிகரத்தையே எட்டிப்பிடித்த சிறப்பு அதிரடிப்படையினரை நான் பாராட்டுகிறேன். இப்படையினரின் தீரம், அர்ப்பணிப்பு உணர்வு, தொழில் ரீதியான அணுகுமுறை ஆகியவற்றைப் போற்றி பாராட்டும் வகையில் அரசு அவர்களுக்கு அளித்த சிறப்பான வெகுமதிகளுக்கும் பாராட்டுகளுக்கும் அவர்கள் முழுத் தகுதியுடையவர்களாவர்.




6. எப்பொழுதும் போலவே, இந்த அரசு, சட்டம் ஒழுங்கு சீரியமுறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்து வருகிறது. மிகவும் இடர்ப்பாடான கால கட்டங்களிலும் இவ்வரசு சட்டத்தின் ஆட்சியையும், சட்டத்தின் மாட்சியையும் பேணிக்காத்து வருகிறது. ரூ.30 கோடி செலவில் காவல்துறைத் தலைவர் அலுவலக வளாகம் அமைப்பது, ரூ.48 கோடி செலவில் புதியதொரு காவலர் பயிற்சி நிலையம் அமைப்பது ஆகியன,

காவல் துறையை நவீனமயமாக்கி தக்க தளவாடங்களை வழங்கும் இந்த அரசின் முயற்சிகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

7. இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டிராத வகையில் வட கிழக்குப் பருவமழை 2003 ஆம் ஆண்டில் பொய்த்தது என்பதையும் இதனால், சென்னை மாநகரில் மிக மோசமான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது என்பதையும் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரில் மிகக்கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் நகரை விட்டே வெளியேறக் கூடிய நிலைமையும் உருவானது. ரூ.720 கோடி செலவில் 2004 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள்ளாக மிகக் குறுகிய காலத்தில், புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றித் தொடங்கி வைத்தது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் இந்த மாபெரும் தண்ணீர்ப் பஞ்சத்தைச் சமாளித்த பெருமை இந்த அரசையே சாரும். இந்தப் புதிய வீராணம் திட்டத்தின் கீழ் பண்ருட்டி நீர் ஊற்றுப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதன்மூலம் சென்னை மாநகருக்கு முதற்கண் நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது. இதனால், மாநகரின் நீர்த் தேக்கங்கள் அனைத்தும் முற்றிலுமாக வறண்டுபோன நிலையிலும், மிகத் துல்லியமாகத் திட்டமிட்டுச் சென்னை மக்களுக்கு நாளொன்றுக்கு மொத்தம் 205 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க முடிந்தது. 2003 பிப்ரவரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கிய போது, இத்திட்டம் வெற்றி பெறுமா எனும் சந்தேகம் எழுப்பப்பட்டது. இத்திட்டம்தான் சென்னை மாநகரைக் காப்பாற்றியது என்பது 2004ஆம் ஆண்டில் தெள்ளத் தெளிவாகியது. ஒவ்வொரு தெருவிற்கும் லாரிகள் மூலம் வாரத்தின் ஒவ்வொரு நாளும், குறிப்பிட்ட நேரத்தில் திறம்பட குடிநீரை எடுத்துச்சென்று வழங்கியதால் அடிப்படைத் தேவைகளுக்கு வேண்டிய அளவிற்கு குடிநீர் தொடர்ந்து மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய முடிந்தது. ரூ.316 கோடி செலவில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் மகத்தானதும் பொறுப்புமிக்கதுமான இப்பணியை, அரசு மேற்கொண்டது.

8. வீராணம் ஏரிக்குப் புதிய நீர் வரப்பெற்று, ஏரி விரைவாக நிரம்பிய பின்னர், புதிய வீராணம் திட்டத்தின் மூலம், 13.10.2004 அன்று சென்னைக்கு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுவது தொடங்கியது. அப்போது, சென்னையின் மூன்று நீர்த் தேக்கங்களும் முற்றிலுமாக வறண்டு காணப்பட்ட நிலையிலும், 13.10.2004 அன்றிலிருந்து மீண்டும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் பணி துவக்கப்பட்டது. புதிய வீராணம் திட்டத்தை முழுமையாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றி முடித்ததாலேயே இது சாத்தியமாயிற்று. கொள்ளிடம் நதியில் கல்லணையிலிருந்து அதிக அளவில் நீர் அனுப்பப்பட்டு, அதன்மூலம், வீராணம் ஏரியில் கூடுதலாக நீர் சேகரித்து வைக்கப்பட்டு, புதிய வீராணம் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டதால், விவசாயிகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலிருப்பது உறுதி செய்யப்பட்டது. கொள்ளிடம் ஆற்றுப் படுகையில் நீர் சேகரிப்புக் கிணறுகளை அமைத்து வீராணம் திட்டக் குழாய்களைப் பயன்படுத்தி சென்னை மாநகருக்கு கோடையில் தண்ணீர்



வழங்கும் வீராணம் விரிவாக்கத் திட்டம் ரூ.300 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், கொள்ளிடம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள கிராமங்களில் உள்ள விவசாயக் கிணறுகளைப் பாதுகாப்பதற்கு குறிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் உறுதிபடுத்தப்படும்.

9. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு நாளொன்றுக்கு 840 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. வடசென்னையிலுள்ள மூன்று நீர்த் தேக்கங்கள், வடசென்னையிலுள்ள கிணற்று வயல்கள்,

கிருஷ்ணா நதி நீர், புதிய வீராணம் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவற்றைக் கொண்ட கூட்டு நீராதாரத்தின் மூலம் இந்தக் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.10.2004 அன்று மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களை ஹைதராபாத்தில் சந்தித்து, சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இந்த முயற்சியின் பயனாக 28.11.2004 அன்று சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் வரப்பெற்றது. 12 டி.எம்.சி. கன அடி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டிய நிலையில், இதுவரை 2 டி.எம்.சி. கன அடி தண்ணீர் மட்டுமே வரப்பெற்றுள்ளது. கண்டலேறு நீர்த்தேக்கத்தில் தற்போதுள்ள சேமிப்பிலிருந்து சென்னை நகருக்கு இப்பருவ காலத்தில் அதிகபட்ச அளவு நீரை ஆந்திரப்பிரதேச அரசு விடுவிக்கும் என்று நம்பப்படுகிறது.

10. வடிவமைத்து, கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, மாற்றும் (DBOOT) அடிப்படையில் சென்னையில் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் பெருந்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இந்த அரசு, உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதையும், 16.2.2005க்குள் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படவிருக்கின்றன என்பதையும் அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் அளவு முடிவு செய்யப்படும். இத்திட்டத்தை 2006ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் படிப்படியாக நிறைவேற்ற இந்த அரசு கருதியுள்ளது. இத்திட்டம், புதிய வீராணம் திட்டத்தோடு இணைந்து, சென்னை மாநகரின் நீண்டகாலக் குடிநீர்த் தேவையை நிரந்தரமாகச் சமாளிக்கப் பேருதவியாக இருக்கும்.

11. தமிழ்நாட்டு மக்கள் இந்த மகத்தான வெற்றிகளின் மகிழ்ச்சியில் திளைத்திருந்தபோது, 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று "சுனாமி" ஆட்கொல்லிப் பேரலைகள் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி, தமிழ்நாட்டுக் கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன் எப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். 7,993 நபர்களின் உயிரைப் பறித்து, இலட்சக்கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்தி சிதைத்த இப்பேரலைகள், கடற்கரையோரம் நெடுகிலும் பேரழிவை ஏற்படுத்தின. இந்தப் பேரிடரினால் ஏற்பட்ட சேதத்தின் அளவை மதிப்பீடு செய்யவும், உடனடி நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடற்கரையோரப் பகுதி முழுவதையும் பார்வையிட உடனே விரைந்தார். முதல் நாளன்றே ராணுவத்தின் உதவி கோரப்பட்டது. நிவாரணப் பணிகள் தடையின்றி மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. காணாமல் போனவர்களைத் தேடுதல், மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோரைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தல், சடலங்களை எரிக்க/புதைக்க ஏற்பாடுகள் செய்தல் மற்றும் நிவாரண முகாம்களை அமைத்தல் ஆகியன முதல் கட்டத்தில் அடங்கும். உடனடி நிவாரண உதவி அளிப்பது இரண்டாம் கட்டமாகும்; நிரந்தர மறுவாழ்வு அளிப்பது மூன்றாம் கட்டமாகும். முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. மூன்றாம் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

12. ஒரே நேரத்தில் பல நாடுகளைப் பாதித்த இந்த சுனாமியினால் ஏற்பட்ட சோகச் சம்பவம், வரலாற்றில் முன் எப்போதும் நிகழ்ந்திராத மிக மோசமான பேரழிவாகும். சிக்கலான இப்பிரச்சினையைச் சமாளிக்க பல நாடுகள் தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், சுனாமி சோகச் சம்பவம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய கடுமையான சவாலைத் திறம்பட இந்த அரசு சமாளித்துள்ளது என்பது தற்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நான் கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது ஒருங்கிணைந்த முறையில் மிகச் சிறப்பாக நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை நானே நேரில் பார்த்தேன்.

13. மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் பேரில் மாண்புமிகு அமைச்சர்களின் பொறுப்பில் அலுவலர் குழுக்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாமல் எதிர்பாராத வகையில் இந்த நிகழ்வு நேர்ந்தபோதிலும், பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிருவாகங்கள் உடனடி நிவாரணப் பணிகளை மிகுந்த பொறுப்பு உணர்வுடனும், முழு ஈடுபாட்டுடனும் மேற்கொண்டன. மாநில முழுவதிலுமிருந்து துப்புரவுப் பணியாளர்களைத் திரட்டி, இறந்தோரின் சடலங்களை மீட்டு, அடையாளம் கண்டு, பின் அச்சடலங்களைப் புதைப்பதற்கு அல்லது எரிப்பதற்கான மிகப் பெரிய பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, மருத்துவர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் திறம்படச் செயலாற்றியதன் மூலம், பெருமளவில் தொற்றுநோய் பரவும்



அபாயம் தவிர்க்கப்பட்டது. இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் ஆடைகள் வழங்கப்பட்டன.

14. முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, பொதுநலனில் அக்கறை கொண்ட நல்ல எண்ணம் படைத்த மக்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதியுதவி அளித்துள்ளனர். மேலும், இந்தப் பேரிடரினால் உறைவிடங்களையும் வேலைவாய்ப்புகளையும் இழந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் விதமாக நேரடி நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டனர். நிதியுதவியாகவும், பொருளாகவும் அளிப்பதற்கு முன்வந்து, இந்த மாபெரும் நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணியில் பங்கேற்ற தனிநபர்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் இந்த அரசு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

15. முதலமைச்சர் அவர்கள், இறந்த ஒவ்வொருவரின் உடனடி உறவினருக்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1 இலட்சம் உடனடியாக வழங்க உத்தரவிட்டார். சுனாமியின் திடீர் தாக்குதலால், பெற்றோர் இருவரையும் இழந்து பல குழந்தைகள் அனாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு அனாதைகளாக ஆக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்யப்படும் என்று அரசு உடனடியாக அறிவித்தது. 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத அனாதையான ஆதரவற்ற ஒவ்வொரு பெண்ணின் பெயரிலும் ரூ.3 இலட்சம் வைப்பீடு செய்யப் படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பெண்களுக்கான சேவை இல்லங்கள் தொடங்கப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுடன் அளவளாவி, அவர்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்த மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் தன்னார்வப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்ட குழுக்கள் அனுப்பப்பட்டன. இத்தகைய முயற்சிகள் மறுவாழ்விற்கான மனோ தைரியத்தை அளிப்பதற்குப் பெரிதும் உதவியுள்ளன. உடல் உறுப்புகளை இழந்தோருக்கும், பல்வேறு வகையான காயமுற்றோருக்கும் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

16. வீடிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 60 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், மூன்று லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ரொக்கம் ரூ.4,000 ஆகியவற்றை உள்ளடக்கிய, ரூ.5,000 மதிப்பிலான உடனடி நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கப்பட்டது. மேலும் உறைவிடத்திற்குப் பாதிப்பு ஏற்படாவிடினும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும், இதே போன்ற பொருட்கள் மற்றும்

ரூ.2,000 ரொக்கம் உள்ளிட்ட சுமார் ரூ.3,000 மதிப்பிலான நிவாரண உதவி வழங்கப்பட்டது. வீடு இழந்த நபர்களுக்குக் குடும்பம் ஒன்றிற்கு, ரூ.8,000 செலவில் தற்காலிகக் குடியிருப்புக் கட்டும் பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இரும்பு டிரங்க்பெட்டி ஒன்று, மண்ணெண்ணெய் அடுப்பு ஒன்று மற்றும் எவர்சில்வர் குடம் ஒன்று ஆகியனவும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் அவர்களுடைய வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலை, மீண்டும் துவங்கும் பொருட்டு, கட்டுமரங்களையும், வள்ளங்களையும் பழுதுபார்க்கவும், சேதமடைந்த மீன்பிடி வலைகளுக்குப் பதிலாகப் புதிய வலைகள் வாங்கிக் கொள்ளவும் ரூ.65 கோடி மதிப்பிலான தொகுப்புதவித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டு ஓரளவு இயல்பு நிலை விரைவில் திரும்ப வகை செய்யப்பட்டுள்ளது.

17. மன உறுதியோடும் ஒருமித்த அர்ப்பணிப் புணர்வோடும் அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பன்னாட்டு நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய பொருளாதார குழுமம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுள்ளன. இது போன்ற பேரிடர் நிவாரணப் பணிகளில் அரசுடன் குடிமக்கள், தன்னார்வக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் நெருக்கமான ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இந்த அரசு, இத்தகு பணியில் அரசு மற்றும் தனியார் பங்கேற்புக்கான திட்டம் ஒன்றை வகுத்துப் பள்ளிக் கட்டடங்கள் போன்ற பொதுச் சொத்துக்களை மீண்டும் உருவாக்குதல், உறைவிடங்களைப் புனரமைத்தல் ஆகிய பணிகளில் பங்கேற்குமாறு பல்வேறு அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

18. ரூ.4,800 கோடி நிதியுதவியும், 54,000 மெட்ரிக் டன் அரிசியும் வழங்குமாறு கோரி, கோரிக்கை மனு ஒன்றை மாநில அரசு மத்திய அரசிடம் அளித்தது. 7.1.2005ஆம் நாளன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சருக்கும் மாண்புமிகு பிரதமருக்கும் இடையில் நடந்த கூட்டம் ஒன்றில் இது கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், முதலமைச்சர், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்குரோவ் காடுகள், கடற்தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் (groynes) ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.5,000 கோடி செலவிலான, கடற்கரைப் பாதுகாப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சிறிது அவகாசம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சுனாமி எச்சரிப்பு ஏற்பாடு ஒன்றினை நிறுவவேண்டுமென்பதையும் முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்கள். பிரதமர் அவர்கள் இந்த யோசனையை உடனடியாக ஏற்றுக்கொண்டார்கள். முதல் கட்டமாக ரூ.250 கோடிக்கான நிதியுதவியினை அறிவித்த பின்னர் மத்திய அரசு அண்மையில் மாநில அரசுக்கான தொகுப்புதவித் திட்டம் ஒன்றையும் அறிவித்துள்ளது. இந்தத் தொகுப்புதவியைக் கொண்டு, பாதுகாப்பான இடங்களில் நிலையான வீடுகளைக் கட்டுதல், சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளை மாற்றிக்கொடுத்தல், வாழ்வாதாரங்களை முழு அளவில் புதுப்பிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் நிரந்தரமாக மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகளை அரசு மேற்கொள்ளும். சிறிய மீன்பிடி படகுகளை மாற்றிக் கொள்வதற்காக மேலும் தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது. வணிக வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் மீனவர்கள் செலுத்த வேண்டிய அனைத்துக் கடன் பாக்கிகளையும், வட்டியுடன் சேர்த்துத் தள்ளுபடி செய்யப்படுமென அறிவிக்குமாறு, இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. கட்டமைப்பு வசதிகளை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும், வாழ்வாதாரங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்காகவும், கடலோரப் பகுதிகளுக்கு நிரந்தரமான பாதுகாப்பை அளிப்பதற்காகவும் மேலும் நிதி உதவி வழங்கப்படும் என்று நம்புகிறோம்.

19. பன்னிரண்டாவது நிதி ஆணையம், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தனது அறிக்கையை அளித்துள்ளது. தற்போது, மத்திய அரசு, அதன் பரிந்துரைகளைப் பரிசீலித்து வருகிறது. 2005–2010 ஆம் ஆண்டுக் கால அளவில், தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும், மத்திய நிதியிலிருந்து மாற்றப்படும் நிதி ஆதாரத்தின் அளவை நிர்ணயிப்பதில் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு, வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறுவதற்குக் கூடுதலான நிதியாதாரங்கள் இந்த பரிந்துரைகளின்மூலம் கிடைக்கப்பெறும் என்று நம்பப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதை ஆராய மூன்றாவது மாநில நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

20. இந்த அரசு பொறுப்பேற்றபோது நிலவிய நிதி நெருக்கடி, எவ்வாறு வளர்ச்சி நடவடிக்கைகளை முற்றிலும் முடமாக்கியது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். முன்னெப்போதும் இல்லாத வகையிலான நிதி நெருக்கடியினால் 2001–2002 ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.6,040 கோடியிலிருந்து ரூ.5,200 கோடியாகக் குறைக்கப்பட்டது என்பதை இந்த அவை நினைவுகூரலாம். இந்த அரசு மாநிலத்தின் நிதி நிலைமையைச் சீரமைத்ததோடு மட்டுமல்லாது, ஒட்டு மொத்த வளர்ச்சி நடவடிக்கைகளின் நம்பகத் தன்மையையும் மீண்டும் நிலை நிறுத்தியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.8,001 கோடி, முழு அளவில் எய்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையான நிதி செயல்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும், நிதிச் சீர்திருத்த உதவித் தொகையைத் தொடர்ந்து நான்காவது ஆண்டாகத் தமிழ்நாட்டிற்கு வழங்கியதன் மூலம் மத்திய அரசு இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பான பொது நிதி நிருவாகத்தினை அங்கீகரித்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமே இப்பெருமை கிடைத்துள்ளது.

21. இந்த வியத்தகு சாதனை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2005–2006 ஆம் ஆண்டில் அதிக மதிப்பீட்டிலான திட்டத்தை மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளது. மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் 30.11.2004 அன்று புதுடில்லியில் நடைபெற்ற ஆண்டுத் திட்டம் குறித்த விவாதத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.40,000 கோடி என்ற பத்தாவது ஐந்தாண்டு கால திட்ட ஒதுக்கீட்டை எய்த வழிவகுக்கும் விதமாக 2005–2006 ஆம் ஆண்டிற்கு சாதனை இலக்காக ரூ.9,100 கோடியைத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றுள்ளார். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாநிலத்தைக் கவ்வியிருந்த பொது நிதி மற்றும் வளர்ச்சியைப் பாதித்த நெருக்கடிகளிலிருந்து மாநிலம் மீட்கப்பட்டு, விரைவான மேம்பாடு மற்றும் உயர் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு மீண்டும் வீறு நடைபோடுவது மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

22. இந்த ஆண்டு 18 சதவிகிதம் என்ற அளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ள வணிகவரி வசூலில் சிறப்பான முன்னேற்றத்தின் பயனாகவும் இந்த நிதி நிலை மீட்சி சாத்தியமாயிற்று. தற்போது உள்ள வரி வீதங்களின் அடிப்படையிலேயே மேம்பட்ட முறையில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. சொத்து விற்பனை குறித்த பத்திரப் பதிவில் காணப்படும் நிலுவையைப் போக்கி கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நோக்கத்துடன் புதிய "சமாதானத்" திட்டம் ஒன்று 28.12.2004 அன்று துவக்கப்பட்டுள்ளது.

23. அனைத்து மாநிலங்களிலும் தற்போதுள்ள விற்பனைவரி முறைகளுக்குப் பதிலாகப் புதிய மதிப்புக் கூட்டு வரி திட்டத்தை 1.4.2005 முதல் அறிமுகப் படுத்துவதற்கான கருத்துரு பற்றி மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவார்கள். இது குறித்து எட்டப்பட்ட ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சட்டம் கொண்டுவர இந்த அரசு உத்தேசித்துள்ளது. இந்தப் புதிய வரி விதிப்பு முறையை செயற்படுத்துவதால் ஏற்படும் நிதி இழப்பினை, ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மத்திய அரசு ஈடுசெய்யும் என்பதன் அடிப்படையிலும், கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெறும்வகையில் மத்திய விற்பனை வரிச் சட்டத்திற்குத் தக்க திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்பதன் அடிப்படையிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.


24. உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட "புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள்" குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இவற்றை, இலக்கு ஆண்டான 2015க்கு முன்னரே எய்த இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏழ்மை நிலையைக் குறைப்பதில் நல்ல முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், 6 முதல் 10 வயது தொகுதியில் உள்ள பள்ளிக்குச் செல்லும் சிறார்களின் சதவிகிதம் 96 ஆக உயர்ந்துள்ளது. வரும் ஆண்டில் 100 சதவிகிதம் இலக்கும் எய்தப்பட்டுவிடும். மக்கள் தொகையில் 90 சதவிகிதத்தினருக்குப் பாதுகாப்பான குடிநீர் வசதி அளிக்கப்பட்டு, அனைவருக்கும் குடிநீர் வழங்கும் இலக்கை எய்துவதற்கான முன்னேற்றப் பாதையில் மாநில அரசு சென்று கொண்டிருக்கிறது. சுகாதாரப் பாதுகாப்பில், இந்த அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளின் பயனாக, சிறார்களிடையே ஊட்டச் சத்துக் குறைவை முற்றிலுமாக அகற்றுதல், சிசு இறப்பு வீதத்தைக் குறைத்தல் ஆகியவை தொடர்பான இரண்டு இலக்குகளையும் இம்மாநிலம் எய்திவிடும். கல்வியறிவு நிலையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே

காணப்படும் இடைவெளியைக் குறைப்பது என்ற ஆறாவது இலக்கை எய்த, மகளிருக்குக் கல்வியறிவு புகட்டுவதற்கான திட்டத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப் பட்டுள்ளது.

25. 2004 ஆம் ஆண்டு பருவநிலை, கடந்த பல ஆண்டுகளைக் காட்டிலும் மேம்பட்டதாக இருந்தது. இதனால் இந்த ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் அதிக வளர்ச்சி ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட வேளாண்மை உள்ளிட்ட முதன்மைத் துறையின் வளர்ச்சி விகிதம் 2004–2005 ஆம் ஆண்டில், 16 சதவிகிதத்தைத் தாண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். 2004–2005 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தி, 90 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விஞ்சிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியும் அடங்கும். இது, 32.23 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உள்ளிட்ட முந்தைய ஆண்டின் மொத்த தானிய உற்பத்தி அளவான 43.12 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விடக் கணிசமான அளவு அதிகம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். மேம்பட்ட பருவநிலைகளின் காரணத்தினால் ஊரகப் பகுதிகளில் மீண்டும் செழிப்பு ஏற்பட்டு அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சி உருவெடுத்துள்ளது.

26. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தி இஸ்ரேல் நாட்டில், வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுவரும் நடைமுறைகளின் அடிப்படையில், இம்மாநிலத்தில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முன்னோடித் திட்டங்களாக புதிய துல்லிய பண்ணை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்திலிருந்து கிடைக்கக் கூடிய அனுபவத்தின் அடிப்படையில் பெரும் திட்டம் ஒன்றை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில், 1.48 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் கால்நடைத் தீவன நாற்றுகள் உட்பட 58.35 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

27. காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு போன்ற குறைவாக நீர் தேவையுடைய மாற்றுப் பயிர் திட்டத்தை ஊக்குவிப்பதற்கான அரசின் கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். விவசாயிகளுக்கு விற்பனை



வாய்ப்புகளை உறுதி செய்து இந்தப் பயிர்ச் சாகுபடிகளை ஊக்குவிக்கும் பணிகளுக்காகப் பெரும் நிறுவன அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மை விரிவாக்க செயல்பாடுகளின் மூலம் இந்தப் புதிய பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு அரசு ஆதரவு அளித்து வருகிறது.


28. கடந்த காலத்தில், தொடர்ச்சியாக நிலவிய வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு முழு அளவில் ஆதரவு அளித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு அக்டோபர் – நவம்பர் திங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தக்க உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. புதிதாக நிதியாதாரங்களை வழங்கி, கூட்டுறவுக் கடன் அமைப்புகள் முற்றிலுமாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. 31.3.2004 ஆம் நாள் நிலவரப்படி, மொத்தம் ரூ.2,598 கோடி அளவிற்கு, கூட்டுறவு வங்கிகளுக்கு நிலுவையாக இருந்த பயிர்க் கடன்கள் மற்றும், அக்கடன்களுக்கான வட்டி, ஆகியவற்றின் திருப்பிச் செலுத்துவதற்கான காலக் கெடுவை மாற்றியமைத்து விவசாயிகள் புதிய பயிர்க் கடன்களைப் பெறுவதற்கு வகை செய்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். இரண்டாண்டு காலத்திற்கு கடன் திருப்பிச் செலுத்துவது ஒத்திவைக்கப்பட்ட 5 ஆண்டு கால கடன்களாக இது மாற்றியமைக்கப் பட்டுள்ளது. புதிய பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கான நிலுவைத் தொகை அனைத்தும் வழங்கப்படுவதை உறுதி செய்ததோடு, கரும்பிற்குரிய சட்டப்படியான குறைந்தபட்ச விலையை டன் ஒன்றுக்கு ரூ.695 என்பதிலிருந்து ரூ.730 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

29. தமிழ்நாடு நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்–II க்கான, செயற்குறிப்புகள் உலக வங்கியின்

ஒப்புதலை எதிர்நோக்கி இருக்கும் நிலையில், இந்த அரசு, தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில், மாதிரித் திட்டங்களை தொடங்கியுள்ளது. தீபகற்ப நதிகளான மகா நதியையும், குண்டாற்றையும் இணைத்தல் என்ற குறிப்பான கோரிக்கையுடன், நதிகள் இணைப்புத் திட்டத்தை, விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளார். 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தினால் இடர்பாடுகள் எழுந்துள்ளபோதிலும், இந்த அரசு, அனைத்துப் பண்ணை பம்பு செட்டுகளுக்கும் குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. வீட்டு உபயோகத்திற்கான மின்சாரக் கட்டணத்திற்குச் சலுகை வழங்கி, அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.910 கோடி அளவுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. விவசாயிகள் தங்களது பழைய செயல்திறன் குறைந்த பம்புசெட்டுகளுக்குப் பதிலாக குறைந்த அளவு மின்சாரம் செலவாகும் புதிய பம்புசெட்டுகளைப் பொருத்திக் கொள்வதற்குத் தக்க உதவிகளை அளிப்பதற்கான புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

30. ரூ.567.42 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு காடுகள் வளர்ப்புத் திட்டம்–II சர்வதேசக் கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். காடுகளை ஒட்டிய குடியிருப்புப் பகுதிகளில் வாழும் ஊரகப் பகுதி மக்களின் உணர்வுகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே நேரத்தில், இயற்கை வளங்கள் தக்க முறையில் பேணிப் பாதுகாக்கப் படுவதையும் இந்தத் திட்டம் உறுதி செய்யும்.

31. கால்நடைகளுக்கு மேம்பட்ட மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்படுவதற்கு, 234 கால்நடை சுகாதார துணை மையங்கள், அனைத்து வசதிகளையும் கொண்ட கால்நடை மருத்துவ நிலையங்களாக நிலை



உயர்த்தப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்கள் பயனடைவதை உறுதி செய்யும் வகையில் இந்த அரசு பாலின் கொள்முதல் விலையை 2004 ஜூன் முதல் மேலும் 1 ரூபாய் அதிகரித்துள்ளது. நுகர்வோருக்கு எவ்வித கூடுதல் சுமையும் ஏற்படாத வகையில் இது செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

32. சுனாமி பேரழிவின் பின்னணியில் மீனளத் துறையை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்து செயல்படுத்தும். இவ்வரசு, 3.66 இலட்சம் மீனவர்களையும், 78,809 மீனவப் பெண்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை ஏற்கெனவே செயற்படுத்தி வருகிறது. இந்த அரசு எப்போதுமே மீனவர்களுக்குப் பேராதரவு அளித்து வந்துள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.51 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்ற நிலையிலும், மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மீதான விற்பனை வரியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்திருப்பதிலிருந்து இது புலனாகும்.

33. ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அனைத்து ஊராட்சிகளையும் உள்ளடக்கும் வகையில் ரூ.200 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய "நமது கிராமம்" என்ற புதியதொரு திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. அனைத்து கிராமங்களுக்கும் இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், பொதுமக்களின் பங்கேற்புடன், பள்ளிகளில் 100 சதவிகித மாணவர் சேர்க்கை, வறுமைக் குறைப்பு, சிசு இறப்பைக் குறைத்தல், பெண் சிசுக் கொலையை முற்றிலுமாக ஒழித்தல், கிராமத் துப்புரவை மேம்படுத்தல் ஆகிய இலக்குகளை எய்துவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

34. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதுவரை, ரூ.132.26 கோடி முதலீட்டில் 204 தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. ரூ.103.32 கோடி முதலீட்டில் துவங்கப்பட்ட 158 தொழில்களில் உற்பத்தி விரைவில் துவங்கிவிடும். ரூ.109.70 கோடி முதலீட்டிலான மேலும் 145 தொழிற் திட்டங்கள் குறித்து நிதி நிறுவனங்கள் பரிசீலித்து வருகின்றன.

35. ஊரக துப்புரவுப் பணிகளில் மாநில அரசு குறிப்பிடத் தகுந்த வகையில் நன்கு செயலாற்றியுள்ளது.

2001ஆம் ஆண்டில் முறையான துப்புரவு வசதிபெற்ற மக்கள் தொகை 15 சதவிகிதமாக இருந்தது. நடப்பாண்டில் இது 43 சதவிகிதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், ரூ.154.31 கோடி ஒதுக்கீட்டில் 37,676 புதிய வீடுகள் கட்டுதல், 19,265 கச்சா வீடுகளை நிலை உயர்த்துதல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்படும்.

36. சுயஉதவிக் குழு இயக்கம் பெருமளவில் வலுவடைந்துள்ளது. 1.87 இலட்சம் சுய உதவிக் குழுக்களில் 31.43 இலட்சம் மகளிர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இவர்கள் ரூ.585.84 கோடி அளவிற்கு சேமித்துள்ளனர். மேலும் இவர்கள் ரூ.1020.48 கோடி அளவிற்கு கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.



37. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்கள், நிலம் மற்றும் ஏனைய விவசாய இடுபொருட்களை வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கும் வகையில் புதியதொரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 7,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின குடும்பங்கள் பயனடையும். வர்த்தக வங்கிகள் தேவையான கடன் வசதிகளை அளித்து இப்புதுமைத் திட்டத்திற்கு முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

38. முதலமைச்சர் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில், 49,31,757 குடும்ப அட்டைக்கான புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றுள் தகுதியான 37,70,446 விண்ணப்பதாரர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்படும். மேலும் போலி குடும்ப அட்டைகள் அனைத்தும் நீக்கப்படும்.

39. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்கு இந்த அரசு பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது துவக்கப்பட்ட 111 இலட்சம் பெண்களுக்கு இலவச சேலைகளும் 111 இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டிகளும் வழங்கும் மாபெரும் திட்டம், 2005ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போதும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம், வறியோருக்கு ஆடை கிடைப்பதை உறுதி செய்வதோடு பல்லாயிரக் கணக்கான நெசவாளர்களுக்கு வருமானப் பாதுகாப்பையும் அளிக்கிறது. 1.1.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவன (WTO) விதிமுறைகளின் கீழ் துணித் தொழில் துறைக்கான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளன. இச்சூழலில் உருவாகிவரும் புதிய வாய்ப்புகளைக் கண்டறியவும் அதற்குத் தக்க செயல்திட்டங்களை வகுக்கவும் பணிக்குழு ஒன்றை இவ்வரசு அமைக்கும். 76,096 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.98.93 இலட்சம் செலவில் ஒரு விரிவான ஈட்டுறுதிக் காப்புத் திட்டத்திற்கு இந்த அரசு அனுமதி அளித்துள்ளது.

40. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், தமிழ்நாட்டில் வித்திடப்பட்டு தற்பொழுது, கூடுதலாக வாரம் ஒருமுறை ஒரு முட்டை, உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் வழங்கப்பட்டு, மேன்மையுறச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 844.97 கோடி செலவு ஆகிறது. இதில் மத்திய அரசு ரூ. 287.17 கோடி வழங்குகிறது. முதலமைச்சர் அவர்கள், 30.11.2004 ஆம் நாளன்று ஆண்டுத் திட்டம் குறித்து விவாதிக்கையில், இத்திட்டத்திற்கு மத்திய அரசு கூடுதல் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

41. சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் நிலையினை உயர்த்தும் இயக்கத்தை வழிநடத்திச்

செல்வதில் முதலமைச்சர் அவர்கள் முன்னணியில் இருக்கிறார். பெரும் புகழ் பெற்றுள்ள பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, 23,000 பெண் குழந்தைகள் பயன்பெறும்வகையில் கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கல்வி கற்றலில் மாணவிகளுக்குச் சமவாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், அரசு, பதினோராம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் ஒரு முன்னோடித் திட்டத்தைத் துவக்கியது. இந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 49,194 ஆதிதிராவிட, பழங்குடியின மாணவிகள் பயன்பெறுவதோடு இத்திட்டத்தினை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவிகளும் பயனடையும்படி விரிவாக்கியதன் மூலம் இந்த சமுதாயங்களைச் சார்ந்த 2,96,000 மாணவிகளும் பயனடைவர் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். ஊரக பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மூன்றிலிருந்து ஆறாம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயிலும் 1,80,000 மாணவிகள் தற்போது பயன்பெற்று வருகின்றனர்.

42. ஆதிதிராவிட மாணவர்களுக்கான கல்விக் கடனுதவித் திட்டம் முழு மானியத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவர்களுக்கான மாணவரில்லங்கள் கட்டும் திட்டம் முடிவுறும் தருவாயில் உள்ளது.

43. இந்த அரசு நடப்புக் கல்வி ஆண்டில், 1,031 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியதன்மூலம், தொடக்கப் பள்ளிகளில் அனைவரும் சேர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்தது மட்டுமின்றி, நடுநிலைப் பள்ளிகளிலும் 100 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிசெய்து, இதன் மூலம் அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு மெய்ப்பொருள் வழங்கியுள்ளது. மாநிலத்தில் 11 தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.63.21 கோடி செலவில் உலக வங்கி நிதியுத வியுடன் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். 32 சட்ட நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் திட்டமும் துவக்கப்பட்டுள்ளது.

44. தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசாரிப்பள்ளம் ஆகிய மூன்று இடங்களிலும் துவங்கப்பட்ட புதிய மருத்துவக் கல்லூரிகளிலும், ஏனைய பிற மருத்துவக் கல்லூரிகளிலும் கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை ஏற்படுத்தித்தர



ரூ.241.40 கோடி செலவில் மாபெரும் திட்டமொன்று துவங்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தின் வரையறைகளின்படி இந்த மருத்துவக் கல்லூரிகள் அமைவதற்கு இத்திட்டம் பேருதவியாக இருக்கும். ரூ.104.47 கோடி செலவில் 1,650 படுக்கைகள் வசதி கொண்டு சென்னை பொது மருத்துவமனை வளாகத்தில் உருவாகிவரும் மாபெரும் இரு கோபுரக் கட்டடங்களும் விரைவில் திறந்து வைக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். சென்னை மாநகர், நாட்டின் “மருத்துவப் பணிகளின் தலைநகராக” உருவெடுத்துள்ளது. சுமார் ரூ.600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதாரப் பணிகள் திட்டத்திற்கு உலக வங்கி தனது ஒப்புதலை அண்மையில் அளித்துள்ளது. உலக வங்கி உதவியுடன் ரூ.426 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை இந்த அரசு விரைவில் துவக்கவுள்ளது. ஊனமுற்றோர் மறுவாழ்வில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளது. உடல் உறுப்பு பாதிக்கப்பட்டோரின் நலம் காக்கும் செயல்பாடுகளுக்காக, இம்மாநிலம், தேசிய அளவிலான பதினான்கு விருதுகளைப் பெற்றுள்ளது.

45. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் குடிசைப்பகுதி மக்களின் மறுவாழ்விற்காக ரூ. 49 கோடி செலவில் 5,172 குடியிருப்புகளைக் கட்டும் திட்டம் ஒன்றை இவ்வரசு செயற்படுத்தி வருகிறது. ரூ.93.20 கோடி செலவில் மேலும் 10,632 வீடுகளைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி இந்த நிதியாண்டில் முடிக்கப்படும். மேலும் ரூ.19 கோடி செலவில், தற்போதுள்ள குடியிருப்புகளில் இருப்பிட வசதிகளை மேம்படுத்துவதற்கான பழுதுபார்ப்புப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

46. ரூ.2,172 கோடி மதிப்பீட்டுச் செலவில் 15,442 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளிலும், 104 நகரங்களிலும் உள்ள 1.4 கோடி மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய 256 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் சேடப்பட்டி – ஆண்டிப்பட்டி, மணப்பாறை – மருங்காபுரி ஒன்றியம் ஆகியவை


உள்ளிட்ட 40 கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டங்கள் முடிக்கப் பட்டுள்ளன என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். ரூ.844 கோடி மதிப்பீட்டுச் செலவில் 16,500 ஊரகக் குடியிருப்புப் பகுதி ஒவ்வொன்றிலும் மின்விசை பம்பு அமைக்கும்



திட்டத்தை இந்த அரசு செயற்படுத்தியுள்ளது. ரூ.202 கோடி செலவில் 33,821 கைப்பம்புகளை சிறு விசைப் பம்புகளாக மாற்றும் திட்டத்திற்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத் தயாரிப்புப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

47. ரூ.1,050 கோடி செலவில் மாநில நெடுஞ்சாலைகளையும், முக்கிய மாவட்டச் சாலைகளையும், ஏனைய மாவட்டச் சாலைகளையும் மேம்படுத்துவதற்கும் பாலங்களை மீண்டும் கட்டுவதற்கும் வகை செய்யும், ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அடுத்த நிதியாண்டின் இறுதியில் முடிக்கப்படும். ரூ.2,160 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் சென்ற ஆண்டு இவ்வரசால் துவங்கப்பட்ட தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தின் கீழ் பணிகள் வெகு விரைவாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

48. கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் திருவாரூருக்கு அருகே ஒரு பேருந்தின் பழுதடைந்த நிலையின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் ஒரு பெண் குழந்தை தனது அரிய உயிரை இழக்க நேரிட்டது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். பயன்பாட்டிலுள்ள அனைத்துப் பேருந்துகளையும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கவும், பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் வாங்குவதற்குமான விரைவுத் திட்டமொன்றை உடனடியாக இந்த அரசு மேற்கொண்டது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில் 1,325 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குகின்றன என்பதையும் அடுத்த நிதியாண்டில் மேலும் 2,000 பழைய பேருந்து களுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதையும் அறிவதில் மதிப்பிற் குரிய பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். 4,848 பழுதடைந்த பேருந்துகள் ரூ.30.48 கோடி செலவில் சரி செய்யப்பட்டுச் சாலைப் போக்குவரத்திற்கும் பாதுகாப்பான பயணத்திற்கும் உகந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை முழுமையாக மேம்படுத்தப் பட்டுள்ளது. மத்திய அரசு, டீசல் விலையைக் கடுமையாக உயர்த்தியதால் தாங்கமுடியாத நிதிச் சுமை ஏற்பட்டுள்ளபோதிலும், பயணக் கட்டணங்களை



உயர்த்தாமலேயே சேவைகளின் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.


49. ரூ.62.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்ட டைசல் உயிரி–பூங்காவைக் கடந்த 10.11.2004 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். மத்திய அரசால் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உயிரி–தகவல் தொழில் நுட்பப் பூங்காவினைச் சென்னையில் அமைக்க வேண்டுமென இவ்வரசு கோரியுள்ளது. 2003 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய தொழிற் கொள்கையினைத் தொடர்ந்தும், அதனால் முதலீட்டுச் சூழலில் ஏற்பட்ட மேம்பாட்டினாலும் பல புதிய முதலீடுகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

50. சென்னை மற்றும் தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கான முதலீடுகளுக்கு விருப்பத் தேர்வு இடங்களாகத் திகழவேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் கனவு நனவாகி வருகிறது என்பது நாஸ்காம் (NASSCOM) மற்றும் கார்ட்னர் (GARTNER) நிறுவனங்கள் அண்மையில் நடத்திய ஆய்வுகளிலிருந்து புலனாகிறது. மிகப் பெரிய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள், சென்னையைத் தங்களது மையங்களை நிறுவுவதற்கான அனைத்து வசதிகளும் படைத்த இடமாகக் கருதுகின்றன. மிகப் பெரிய இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தங்களது தொழில்களைப் பெரிய அளவில் விரிவுபடுத்தி வருகின்றன. அறிவு சார் தொழில் நகரியம் (Knowledge Industry Township) விரைவிலேயே உருவாக்கப்படும். இந்நகரியத்திற்குச் செல்ல 6 வழி தடத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை அமைக்கும் பணிகள் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

51. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அமைந்துள்ள 6,275 கோயில்களை ரூ.15.69 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பழனி கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 3.11.2004 அன்று ஒரு புதிய 'கம்பிவட ஊர்தி' (Rope Car) சேவையைத் தொடங்கி வைத்தார்கள்.

52. வீடியோ திருட்டை ஒழிப்பதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவது உள்பட, இம்மாநிலத்தில் திரைப்படத் துறைக்குப் புத்துயிரூட்டுவதற்கான பல்வேறு தொகுப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. கேளிக்கை வரி அமைப்பு முழுவதையும் அரசு மாற்றியமைத்துள்ளது; வரி விகிதங்களும் குறைக்கப் பட்டுள்ளன. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் அளிக்கப்படும் உதவித் தொகையை அரசு 2003 ஆம் ஆண்டு முதல் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாக உயர்த்தியுள்ளது. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. 3.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்கள். இந்த நடவடிக்கைகளினால், திரைப்படத் தொழில் புத்துயிர் பெற்றுள்ளது.

53. புதுமையான மின் ஆளுகை நடவடிக்கைகளின் மூலம் நல்லாட்சி வழங்குவதில் இந்த



அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் 30–ஆவது மாவட்டமாகக் கிருஷ்ணகிரி மாவட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.2.2004 அன்று துவக்கிவைத்தார்கள்.

54. இந்த அரசின் கொள்கைகளையும் திட்டங் களையும் பற்றி நான் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். 2004 ஆம் ஆண்டில் இந்த அரசின் மகத்தான சாதனைகளை எண்ணி நியாயமான பெருமிதம் கொள்வதோடு, 2005 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் மகத்தான சாதனைகள் படைக்கப்படும் என எதிர்நோக்குவோம். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை வளம் பெறத் தேவையான மிகவிரைந்த முன்னேற்ற நடவடிக்கைகளைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அவையில் நடக்கும் விவாதங்கள் நடுநிலைமை கொண்டதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், பொருளார்ந்த தாகவும் அமையும் என நான் நம்புகிறேன்.

**வணக்கம்.**

**ஜெய்ஹிந்த்**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
31.1.2005 அன்று மேதகு தமிழக ஆளுநர்
திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# மனிதநேயத்தோடு எப்போதும் விளங்கவேண்டியது காவலர்களின் கடமையாகும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**



இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று பதக்கங்களை வழங்கியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை, சிறைத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகிய சீருடைப் பணிகளில் ஏற்றமிகு பணி புரிந்தும், வீர தீரச் செயல் புரிந்தும், பதக்கங்கள் பெற்றுள்ள அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கடமை உணர்வைப் பாராட்டுவதும், வீர உணர்வைப் போற்றுவதும், அந்தப் பண்புகளை மேலும் வளர்க்கும் என்பதால் அவ்வாறு பாராட்டுவதும் போற்றுவதும் நமது கடமை என்று நான் எப்போதும் நினைக்கிறேன். எனவேதான் உரிய காலத்தே காவலர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நான் முனைப்பாக உள்ளேன். பதக்கங்கள் வழங்கப்படும் இந்த விழா 26.12.2004 அன்றே நடத்தப்பட முடிவு செய்யப்பட்டது. ஆனால், முன்னாள் பாரதப்பிரதமர் திரு.பி.வி. நரசிம்மராவ் அவர்களின் மறைவினால் அரசு முறை துக்கம் அனுசரிக்கப்பட்டதன் காரணமாக இந்த விழா ஒத்தி வைக்கப்பட்டு இன்று நடத்தப்படுகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு காவல்துறை வரலாற்றிலேயே மறக்க முடியாத ஆண்டு. ஏன், தமிழக வரலாற்றிலேயே மறக்க முடியாத ஆண்டு. கொடுமையின் வடிவமாக இருந்து மனித உயிர்களை மலிவாகக் கருதிக் கொன்று குவித்த காட்டுக் கொள்ளைக்காரன் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் ஒழித்துக்கட்டிய வீரச் செயல் நடந்த ஆண்டு. அந்த வீரச் செயலை நிகழ்த்திய அதிரடிப் படையினரைப் பாராட்டி மகத்தான விழா ஒன்றை எனது தலைமையிலான அரசு 30.10.2004 அன்று நடத்தியது.

தமிழக மக்களின் நன்றி உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், தமிழ்நாடு அரசால் அன்று நடத்தப்பட்ட விழாவில், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை உயர் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் அவர்களோடு இணைந்து பணியாற்றிய வனத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கியும், வீரப் பதக்கங்கள் வழங்கியும் நான் கௌரவித்தேன். அதைப்போலவே வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கையில் கடந்த காலத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும், அவரவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கும் இந்த விழாவில் சிறப்புச்

செய்யப்படும் என்று நான் அறிவித்தேன். அவ்வாறே அவர்களுக்கு இன்று உரிய பரிசுகளை வழங்கி இருக்கிறேன்.

இதன்மூலம் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட எவரும் பரிசளிக்கப் படாமல் விட்டுவிடப் படவில்லை என்பதை மன நிறைவோடு இந்த வேளையில் உங்களிடம் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

என்ற புகழையும் நாம் அடைந்துள்ளோம் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவலர்கள் நலமாக இருந்தால்தான் அவர்கள் தங்கள் கடமையை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும். எனவே காவலர் உடல் நலன் காப்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. 1995ஆம் ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட காவலர் நல்வாழ்வு நிதியின் மூலம், மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படும் காவலர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியத்திற்கு ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் மானியம் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 17.6.2002 முதல் மருத்துவ உதவியின் அளவை 1 இலட்சம் ரூபாயிலிருந்து ஒன்றரை இலட்சம் ரூபாயாக உயர்த்தி நான் ஆணையிட்டேன். 2004–ம் ஆண்டு மே முதல் இதுவரை, மொத்தம் 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் அளவிற்கு 722 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் உதவியைப் பெற்று இருக்கிறார்கள் என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்க வேண்டும் என்றால் இரவு பகல் பாராமல் கடமை உணர்வுடன் பணியாற்றும் காவலர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் வசிக்கும் குடியிருப்புகள் கூட நேர்த்தியாக அமைய வேண்டும் என்று நான் ஆணையிட்டேன். அதன்படி, காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்பின் பரப்பளவு, இதற்கு முன்னர் இருந்த 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் தற்போது மிக விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2001ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் தற்போது வரை 6,354 குடியிருப்புகள் மொத்தம் 226 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 1,945 குடியிருப்புகள் 78 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில், காவல் துறையினருக்குக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் தமிழ்நாட்டில் மிகச்சிறந்த அளவில் அமைந்துள்ளன

காவல்துறையினருக்கு உரிய வசதிகள் கிடைப்பதற்கு முக்கியத்துவம் அளித்துவரும் எனது அரசு அதே வேளையில் காவலர்கள் தங்களது பணியைச் சிறப்பாக ஆற்றுவதற்கு ஏற்ற வகையில் அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாறிவரும் காலத்திற்கு ஏற்பவும், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்பவும், மாறிவரும் சூழல்களுக்கு ஏற்பவும் பணியாற்றும் வகையில் காவலர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். எனவே, அதற்குத் தேவையான வாகன வசதி, ஆயுதங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், தடய அறிவியல் கூடங்கள், கணினி வசதிகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றைக் காவல்துறைக்கு எனது அரசு வழங்கி வருகிறது. 2001–ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் 427 கோடியே 59 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மனிதர்களின் போக்கை அறிந்து கொள்ள வேண்டிய திறமை மற்றவர்களைக் காட்டிலும் காவலர்களுக்கு மிகவும்

தேவை. அவ்வாறு மனிதர்களின் மனப்போக்கை அறிந்து கொள்கின்ற திறமை நமது காவலர்களுக்கு நிறையவே உண்டு. அதே நேரத்தில், மனித நேயத்தோடு எப்போதும் விளங்க வேண்டியதும் காவலர்களின் கடமை ஆகும். மனித நேயம் என்ற உடன் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு கோயில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு தங்கத் தட்டு கோயில் முற்றத்தில் விழுந்தது. 'தகதக' என மின்னும் அந்தத் தங்கத் தட்டைப்





பார்த்ததும், எல்லோரும் அதை நோக்கி ஓடினார்கள். யாருக்கு அந்தத் தங்கத் தட்டு? கோயிலுக்கா, இல்லை பக்தர்களில் ஒருவருக்கா?

கோயில் நிர்வாகி வந்தார். தட்டைக் கையில் எடுத்தார். அதிலே ஏதோ வாசகம் காணப்பட்டது. 'அன்பில் சிறந்தவர் யாரோ, அவருக்கு ஆண்டவன் பரிசு' என்று அந்தத் தங்கத் தட்டில் எழுதப்பட்டிருந்தது. "அன்பில் சிறந்தவர் யார்? – "அவரா? இல்லை இவரா?, "நான் தான்" நான் தான்!" என்று ஏராளமான குரல்கள் எழுந்தன.

கோயில் நிர்வாகி ஓர் அறிவிப்பைச் செய்தார்! அடுத்த நாள் பகல் 12 மணிக்கு பக்தர்கள் வந்து தாங்கள் செய்த அன்புச் செயலைச் சொல்லி தங்கத் தட்டைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அறிவிப்பைக் கேட்டுவிட்டுப் போன மக்களில் பலருக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. என்ன சொல்லித் தங்கத் தட்டைத் தட்டிச் செல்லலாம் என்பதே எல்லோருடைய சிந்தனையாகவும் இருந்தது.

மறு நாள் பகல் 12 மணி! எள் போட்டால் எள் கீழே விழாதபடி ஏகப்பட்ட கூட்டம். ஒவ்வொருவரும் தங்களது அன்புச் செயலை விவரிக்க வந்தார்கள்.

ஒரு பணக்காரர் வந்தார்! "நான் எனது சொத்தில் ஏராளமான பங்கை ஏழைகளுக்குத் தர்மம் செய்து வருகிறேன்" என்றார்.

அவருடைய அன்பு நெஞ்சத்தை உணர்ந்த கோயில் நிர்வாகி, அவருக்கே தங்கத் தட்டை அளித்தார்.

சிலருக்குச் சந்தேகம்! அதைச் செய்தேன் இதைச் செய்தேன் என்று பொய் சொல்லிக்கூடத் தங்கத் தட்டைத் தட்டிச் சென்றுவிடலாமே! இந்தப் பணக்காரர் ஏராளமாகத் தானம் செய்கிறார் என்பதை எப்படி நம்புவது? அதற்கு என்ன சாட்சி?

இப்படி, அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தபோதே பணக்காரர் கையில் இருந்த தங்கத் தட்டு திடீரென்று தகரத் தட்டாக மாறிவிட்டது.

"ஓகோ! தகுதியில்லாதவர் கைக்குப் போனால், தங்கத் தட்டு இப்படித் தகரத் தட்டாகப் போய்விடும் போலும்!" என்று எல்லோரும் பேசத் தொடங்கினார்கள்.

அந்த ஊருக்குப் பெரும் பணக்காரர்கள் எல்லாம் வந்து அங்கே இருந்த ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கினார்கள். அடித்தது யோகம் பிச்சைக்காரர்களுக்கு! அந்தக் கோயிலை நோக்கி அடுத்த நாட்டுப் பிச்சைக்காரர்களும் வரத் தொடங்கினார்கள். ஏழைகள் எல்லோருக்கும் பொருள் ஏராளமாகக் கிடைத்தது; எந்தக் குறைவும் இல்லை! பாவம்! பணக்காரர்கள் தான் வந்து வந்து பணத்தைத் தந்து தந்து, நொந்து போனார்கள். அவர்கள் கையில் சென்றதுமே தங்கத் தட்டு தகரத் தட்டு ஆனது!

நாட்கள் நகர்ந்தன. பல நாட்கள், பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், தகுதியான ஒருவர் வரவும் இல்லை; தங்கத் தட்டைப் பெறவும் இல்லை. ஆனால், தினசரி கோயிலில் கூட்டத்துக்கு மட்டும் குறைச்சலே இல்லை.

ஒரு நாள் கிராமத்தான் ஒருவன் வந்தான். அவனுக்கு இந்தத் தங்கத் தட்டுச் சமாச்சாரம் எதுவும் தெரியாது.

கோயிலில் சாமி கும்பிட வந்தவன் வெளியில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரர்கள் கூட்டத்தைப் பார்த்து, "ஐயோ! என் நாட்டில் இத்தனை ஏழைகளா? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே'' என்று சொல்லி அழுதான்.

கை கால் இழந்தவர்கள், கண் பார்வை இல்லாதவர்கள், ஊமைகள் – இவர்களை எல்லாம் பார்த்து அவன் உள்ளம் உருகிற்று. அவன் கதறி அழுதான். கோயிலில், சாமியைப் பார்த்து இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் விமோச்சனமே இல்லையா என்று கேட்க உள்ளே ஓடினான். உள்ளே கோயில் நிர்வாகி இருந்தார். அவரது கையில், தங்கத் தட்டு இருந்தது. அப்போது, கோயில் நிர்வாகி கூட்ட நெரிசலில் தங்கத் தட்டைத் தவறவிட்டார். கீழே வந்து நின்ற கிராமத்தான் கையில் விழுந்தது தங்கத் தட்டு! உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தங்கத் தட்டு தகரத் தட்டாக ஆகவில்லை! முன்னைவிட மூன்று மடங்கு ஜொலித்தது. கோயில் நிர்வாகிக்கு மட்டற்ற மகிழ்ச்சி! "ஐயா, நீ தான் உண்மையான அன்பின் வடிவம், உனக்குத் தான் இந்தத் தங்கத் தட்டு சொந்தம்'' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

யாருடைய உள்ளம் ஏழை எளியவர்களுக்காக உருகுகிறதோ, யாருடைய நெஞ்சம் மனிதாபிமானத்தின் ஊற்றுக் கண்ணாக இருக்கிறதோ, அவரே அன்பிற் சிறந்தவர் என்பதுதான் இந்தக் கதையின் கருத்து.

நான் கூறிய கதை, மனிதாபிமான உணர்வே தலை சிறந்தது என்பதை வலியுறுத்துகிறது. அந்த மனிதாபிமான உணர்வை, மனிதாபிமானச் செயல்பாட்டை, உங்களிடம் நான் நிறைய எதிர்பார்க்கிறேன்.

தமிழகக் காவல் துறை கடமையில் சிறந்தது; வீரத்தில் சிறந்தது; விவேகத்தில் சிறந்தது. அதைப் போலவே, தமிழகக் காவல் துறை மனிதாபிமானத்திலும் சிறந்தது என்னும் பெருமையைப் பெற வேண்டும் என்பது தான் எனது எதிர்பார்ப்பு.

இந்த வகையிலும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, தமிழக காவல்துறை விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கு பதக்கங்களையும், பரிசுகளையும் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் மீண்டும் தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்!

– 18.2.2005 அன்று சென்னை
ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு
அரங்கில் நடைபெற்ற இந்தியக்
குடியரசுத் தலைவர் மற்றும்
தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள்
வழங்கும் விழாவில்
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
அவர்கள் ஆற்றிய உரை.

# குரல்

நாம் எவ்வாறு குரல் எழுப்புகிறோம் தெரியுமா? நம் தொண்டையின் அடிப்புறத்தில் குரல்வளை என்ற உறுப்பு இருக்கிறது. நாம் மூச்சை உள்ளே இழுக்கும்போது குரல்வளை வழியாகத்தான் காற்று உள்ளே செல்கிறது; வெளிவிடும்போது குரல் வளையின் வழியாகவே வெளியேறுகிறது. குரல்வளையில் குரல்நாண்கள் என்ற இரண்டு மெல்லிய தோல்கள் இருக்கின்றன. குரல்வளையின் வழியாகக் காற்று செல்லும்போது குரல்நாண்கள் V–வடிவில் விரிந்து கொடுக்கின்றன. நாம் பேசும்போது இந்தக் குரல் நாண்களின் தசைகள் நெகிழ்ந்து விடுகின்றன. நுரையீரல்களிலிருந்து வரும் காற்று குரல் நாண்களை அதிரச் செய்கிறது. குரல் நாண்களின் அதிர்வால் ஒலி உண்டாகிறது.

இவ்வாறு பிறக்கும் ஒலி வலுவற்று மெலிந்து இருக்கும். இதைக் குரல்வளை, மூக்கு, வாய், மார்பு முதலியவை ஒத்ததிர்வு (Resonance) முறையால் மாற்றி, பெருக்குகின்றன.

ஒலியை மிருகங்களும் எழுப்புகின்றன. ஆனால் மனிதனால் மட்டுமே பேச முடியும். பேசும் வார்த்தைகளை உருவாக்க உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் தேவை. குரல்வளையிலிருந்து வாயின் வழியே வெளிவருவது உயிரெழுத்து. குரல்வளையால் உருவாக்கப்பட்ட ஒலி நாக்கு, பல், உதடு, மேல்வாய், மூக்கு முதலியவைகளால் மாற்றமடைந்து வெளிவருவது மெய்யெழுத்து. இவைகளை கட்டுப்படுத்தி இயக்குவது மனிதனின் மூளை.

# சென்னையில்
# 56ஆவது குடியரசு தின விழா




தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைச் சுனாமி பேரலைகள் அண்மையில் கடுமையாகத் தாக்கியதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்பைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு குடியரசு நாள் விழாவை எளிமையான முறையில் கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள்.

அதன்படி சென்னை மெரீனா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே எளிமையான முறையில் குடியரசு தின விழாவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**26.1.2005** அன்று காலை காவல்துறையினர் அணி வகுத்து முன் செல்ல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடற்கரை சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்களைப் பார்த்து கையசைத்து வாழ்த்து தெரிவித்தார்கள். குடியரசு தினவிழா நிகழ்ச்சியினை காணவந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கரவொலி எழுப்பி வரவேற்றனர்.

காலை **7.54** மணிக்கு காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் மேதகு ஆளுநர் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டார். மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றார்கள். ஆந்திரம், தமிழ்நாடு,



கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமை படைத்தலைவர் மேஜர் ஜெனரல் திரு. பரம்ஜித்சிங், விஎஸ்எம்., கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் திரு. டி.ஹரி, ஏவிஎஸ்எம்., தாம்பரம் வான்படை அதிகாரி ஏர் கமோடர் திரு.எம்.எஸ். அலுவாலியா, தமிழக காவல்துறை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்–ஒழுங்கு) திரு.கே.வி.எஸ்.மூர்த்தி, இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு. ஆர். நடராஜ், இ.கா.ப., ஆகியோரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சரியாக காலை 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். பின்னர் நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.. அதனைத் தொடர்ந்து காவல்துறை மற்றும் பல்வேறு துறைகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

மேஜர் திரு. நிசாந் பாரியர் தலைமையில் இராணுவப் படை அணிவகுப்பும் மற்றும் ஹவில்தார் திரு. சதீஸ்குமார் தலைமையில் இராணுவ கூட்டுக் குழல் முரசு இசைக்கும் அணிவகுப்பையும் தொடர்ந்து, இராணுவ ஊர்தி, ஹவில்தார் திரு. விக்ரம் சிங் தலைமையில் வந்தது.

லெப்டினன்ட் கிரண் குமார் தலைமையில் கடற்படை அணிவகுப்பும், வான்படை – I, II முறையே பிளைட் லெப்டினன்ட் திரு. அனுஜ் பரத்வாஜ், பிளைட் லெப்டினன்ட் திரு.சேத்தன் சிங், தலைமையில் அணிவகுப்பும், வான்படை கூட்டுக் குழல் முரசிசை திரு. ஏ.எஸ்.பிள்ளை தலைமையில் இசைக்க வான்படை ஊர்தி – I மற்றும் போர் விமானங்கள் திரு. டி.என்.மணிகண்டன் தலைமையில் அணிவகுத்து வந்தது.

பின்னர், தபேதார் திரு. ஆனந்தராஜ் தலைமையில் முன்னாள் ராணுவத்தினர் படைப் பிரிவு அணி வகுப்பும், திரு. சைலேந்திரயாதவ் தலைமையில் சி.ஆர்.பி.எப். படைப்பிரிவு அணிவகுப்பும், உதவி பாதுகாப்பு ஆணையர் திரு. டபிள்யு தங்கராஜ் தலைமையில், ரயில்வே பாதுகாப்புப் படை அணிவகுப்பும் நடைபெற்றது.


காவல்படை முதன்மைத் தளவாய் துணை ஆணையர் திரு. ஆசீர்வாத உடையார் தலைமையில் தமிழக காவல் துறை அணிவகுப்பு நடைபெற்றது. இதில் முதலில் சென்னை மாநகர காவல் உதவி ஆணையர் திரு. எஸ்.சிவானந்தம் காவல்படை அணிவகுத்துச் செல்ல, சென்னை மாநகர காவல் கூட்டுக் குழல் முரசிசை அணிவகுப்பை தலைமைக் காவலர் திரு. பெருமாள் நடத்தி வந்தார்.

இதனைத் தொடர்ந்து காவல் குதிரைப்படை தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (ஆண்கள்), தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (பெண்கள்), ரெஜிமெண்டல் மைய கூட்டுக் குழல் முரசிசை, பெண்கள் கமாண்டோ படை, கடலோரப் பாதுகாப்புக் குழு, தமிழ்நாடு கமாண்டோ படை (ஆண்கள்), நீலகிரி காவலர் படைப் பிரிவு, தமிழ்நாடு தீயணைப்புத் துறை முரசிசை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை, ஊர்க்காவல் படை (ஆண்கள்), ஊர்க்காவல் படை (பெண்கள்), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (தரைப் படை), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (வான்படை), தேசிய மாணவர் படை கூட்டுக் குழல் முரசிசை, தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (கடற்படை), தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (பெண்கள்), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (பெண்கள்), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (கூட்டுக் குழல் முரசிசை), சாலைக் காப்பு சுற்றுக் காவல் (ஆண்கள்) படைப் பிரிவு அணிவகுப்பு நடைபெற்றது.

இறுதியாக ஒட்டுமொத்த பாரத சாரண சாரணியர் இயக்க முதன்மைத் தளவாய் திரு. எம். கருப்பையா தலைமையில் பெண்கள், ஆண்கள் பிரிவு அணிவகுப்பு நடைபெற்றது.

## அண்ணா விருது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வீரதீரச் செயல்புரிந்த 4 பேருக்கு அண்ணா விருதினை வழங்கினார்கள். இவ்விருது காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மண்டல துணை வட்டாட்சியர் மறைந்த ஏ.ஆர்.வெங்கடேசன் மனைவி நிர்மலா, திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் மறைந்த ஜி. புண்ணிய கோட்டி மனைவி ஆதிலட்சுமி, காஞ்சிபுரம் வட்ட வருவாய் ஆய்வாளர் மறைந்த ஆர். சண்முகசுந்தரம் மனைவி சுலோச்சனா, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.எஸ்.நடராஜன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



இவ்விருது பெற்றோருக்கு ரூபாய் 2 ஆயிரம் மதிப்புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ. 10 ஆயிரத்திற்கான காசோலையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

## கோட்டை அமீர் விருது

மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்ட திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சாகுல் அமீதுக்கு (வயது 56) கோட்டை அமீர் விருதினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். இவ்விருது ரூபாய் இரண்டாயிரம் மதிப்புள்ள பதக்கத்தையும், ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் சான்றிதழும் கொண்டதாகும்.

## மகாத்மா காந்தி காவல் பதக்கம்

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதில் ஆற்றிய சிறப்புமிக்க பணியினைப் பாராட்டி, செங்கை கிழக்கு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்குப் பிரிவு) செல்வி பி.கே. செந்தில்குமாரி, விழுப்புரம் மாவட்டம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்குப் பிரிவு) திருமதி. எஸ். லட்சுமி, கோவை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் (மது விலக்குப் பிரிவு) திரு. ஆ.சி. நந்தகுமார்,



சென்னை மத்தியப் புலனாய்வுப் பிரிவு (மதுவிலக்கு) ஆய்வாளர் திரு. இரா. சுசீல்குமார் ஆகியோருக்கு மகாத்மா காந்தி காவல் பதக்கமும், தலா ரூ. 10 ஆயிரத்திற்கான ரொக்கத் தொகையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

விழா இறுதியில் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது.

❖ ❖ ❖

# மீனவர்கள் இழந்துவிட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தல்**



சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார மறுவாழ்வுக்கானத் திட்டங்களுக்கு அளிக்கப்படும் மானியம் அளிக்கும் பிரச்சினை குறித்த தங்களது 31.1.2005 தேதியிட்ட கடிதம் முன்னதாக பேக்ஸ் மூலம் கிடைக்கப் பெறவில்லை. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு– தலைமைச் செயலகத்தில் இருந்து திரும்பிய பின் நேற்று மாலைதான் தபால் மூலம் கிடைத்தது. இன்று காலை (4.2.2005) சட்டப்பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கப் புறப்படும்போதுகூட எனக்குக் கிடைக்கப் பெறவில்லை.

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், 3.2.2005 அன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் மற்றவர்களுக்கும் 3 மாதங்களுக்கான நிவாரணத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்தேன். அப்போது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 தேதியிட்ட உத்தரவின்படி மீனவர்களுக்கான மறுவாழ்வுக்கான மானியத் தொகை முழுவதும் மாநில அரசால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததை சட்டப்பேரவையில் தெரிவித்தேன். இந்த உத்தரவு, தமிழக அரசின் நிலையை ஏற்றுக்கொண்டு, 30.1.2005 தேதியிட்ட எனது கடிதத்தைப் பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்தது.

மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் உத்தரவை சட்டப்பேரவையில் மீண்டும் 4.2.2005 அன்று படித்தேன். அந்த உத்தரவின் 4ஆவது பத்தியில் மீனவர்களுக்கான மானியத் தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.356.54 கோடியையும் முழுமையாக மாநில அரசால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அனைத்து உதவிகளும் மாநிலங்களிடமே வழங்கப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் நிலைப்பாட்டை ஒப்புக்கொள்வதாகவே அந்த உத்தரவு அமைந்திருந்தது.

தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைத் தாங்கள் பாராட்டி வரவேற்றுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 31.1.2005 அன்றைய மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவு கடைப்பிடிக்கப்படும் என்றும் நம்புகிறேன். திடீரென சுனாமிப் பேரழிவு ஏற்படுத்திய பாதிப்பைக் கருத்தில் கொண்டு, மீனவர்கள் இழந்துவிட்ட உடைமைகளைத் திரும்பவும் அளிக்கும் வகையில் தங்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் ஆகியவற்றுக்கு மத்திய அரசு நூறு சதவிகித மானியத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மீனவர்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்ட இந்த சூழ்நிலை முற்றிலும் வழக்கத்திற்கு மாறானது என்பதால், மீன்பிடிப் படகுகள், வலைகள் ஆகியவைகளை மாற்றிக் கொடுத்தல், சீர்செய்து கொடுத்தல் மற்றும் நிலை உயர்த்துதல் ஆகியவற்றுக்கான முழுச் செலவையும் மானியமாக வழங்கும் வகையில் உதவித் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளேன்.

எப்படியிருப்பினும், எந்தவொரு உதவித் தொகையாக இருந்தாலும் மாநில அரசாங்கம் புறக்கணிக்கப்படக்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை தலைமைச் செயலகத்தில் 27.1.2005 அன்று இந்தியாவிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையின் (ஆம்காம்–இந்தியா) தமிழகத் தலைவரும், ஃபோர்டு நிறுவன நிருவாக இயக்குநருமான டேவிட் ஃபிரைட்மேன் உள்பட 13 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத்தூதர் டாக்டர் ரிச்சர்ட் ஹெய்ன்ஸ் தலைமையில் சந்தித்துப் பேசினார்கள்.

கூடாது என்பது மிகவும் முற்றிலும் அவசியமானதாகும். இதுகுறித்து 30.1.2005 அன்று தங்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளேன். மீனவர்களுக்கு வங்கிகள் கடன் வழங்கத் திட்டமிட்டால் கூட அதற்கான மானியம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசால் மட்டுமே பெறப்பட்டு அதன்பிறகு கடன் வழங்க விரும்பும் வங்கிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். இதுதான் மாநிலங்களில் மத்திய அரசால் அமல்படுத்தப்படும் பெரும்பாலான திட்டங்களுக்கு இருந்து வந்த நடைமுறையாகும்.

மீனவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களுக்கு மட்டும் தனியானதொரு நடைமுறை பின்பற்ற வேண்டிய அவசியம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. தனியானதொரு நடைமுறை பின்பற்றப்படுவதற்கான எந்த அவசியமும் இல்லை என்பதோடு, முழுத்தொகையும் மாநிலங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதை மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 உத்தரவு நிரூபிக்கிறது. தமிழக சட்டப்பேரவையில் இந்த விவரம் குறித்து தெளிவாக விளக்கியிருக்கிறேன்.

மத்திய அமைச்சரவைச் செயலரிடம் இருந்து வந்த அழைப்பின் பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலாளரும், அதிகாரிகள் குழுவும் டெல்லியில் 4.2.2005 அன்று அவரைச் சந்தித்துள்ளனர். மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 அன்றைய உத்தரவில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளபடி மானியத் தொகை முழுவதும் மாநில அரசிடம் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை நூறு சதவிகிதம் மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளதையும் மத்திய அமைச்சரவைச் செயலரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

மீனவர்களின் மறுவாழ்வுக்கான திட்டத்தில் நாம் கவ்னம் செலுத்த வேண்டிய நிலையில் இதுபோன்ற தேவையற்ற சர்ச்சைகள் வளர மத்திய அரசு அனுமதிப்பது ஏன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மீனவர்களுக்காக வழங்கப்படும் முழுத்தொகையும், 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மாநிலங்களால் அமல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை தனிப்பட்ட மீனவர் ஒருவர் வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்து அதைப் பெற்றால் அதற்கான மானியத்தை சம்பந்தப்பட்ட வங்கிக்கு கொடுக்கத் தேவையான ஏற்பாடுகளை மாநில அரசு செய்யும்.

எனவே, 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மாநிலங்களுக்கே அனைத்து நிதியையும் வழங்குவதுதான் பொருத்தமானதாகும். எனவே, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மீனவர்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கு அளிக்கப்படும் தொகை மாநிலங்களுக்கே முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்பதைத் தாங்கள் உறுதிசெய்ய வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ❖

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, புதிய கட்டுமரம், வலைகள் வாங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி



தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை 26.12.2004 அன்று சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோர கிராமங்களில் வசித்து வந்த மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்த துயர நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் உடனடியாக தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று, கடலுக்குள் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக மீனவர்களுக்கான தொகுப்பு உதவித் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங்களுக்காக 65 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரணத் தொகை உதவித் திட்டம் ஒன்றை 28.12.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மேலும், 396 கோடி ரூபாய் செலவில் கூடுதல் தொகுப்பு உதவிகளை வழங்கிட 29.1.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, பாதிக்கப்பட்ட மீனவர்கள் முழுமையாகச் சேதமடைந்த தங்களது மரத்திலான கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டு மரங்களையோ அல்லது கண்ணாடி இழையிலான கட்டுமரங்களையோ தங்களது விருப்பப்படி வாங்கிக்கொள்ள அரசு மானிய உதவி வழங்கும் என்றும், அதன் அடிப்படையில் புதிய மரக்கட்டுமரங்களை வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுமையும் அரசு மானியமாக வழங்கிடவும் அல்லது சேதமுற்ற மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக கண்ணாடி இழை கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு கண்ணாடி இழை கட்டுமரம், மோட்டார் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலை ஆகியவை வாங்க 35 சதவிகிதம் மானியம் வழங்கிடவும், இதற்கு அதிகபட்சமாக 52,500 ரூபாய் மானியம் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

முழுவதுமாகச் சேதமடைந்த தங்களது மரக்கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரம் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, மரக்கட்டுமரம் மற்றும் வலையின் விலையாக 32,000 ரூபாய் முழுமையும், அரசு மானியமாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டவாறு 2.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட திரு. பச்சை என்பவரது மகன் திரு. பாஸ்கர், திரு. சின்னப்பிள்ளை என்பவரது மகன் திரு. செல்வக்குமார், திரு. சின்னமாணிக்கம் என்பவரது மகன் திரு. தேவன், திரு. ஆறுமுகம் என்பவரது மகன் திரு. புலேந்திரன், திரு. ஏழுமலை என்பவரது மகன் திரு. நாகூரான் ஆகிய 5 மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புதிய கட்டுமரம் மற்றும் வலை வாங்குவதற்காக அதன் மொத்த விலையான 32,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்த மீனவர்கள் தங்களது வாழ்வு ஆதாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் வழங்கப்பட்ட முழு மானிய நிதி உதவிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. எம். ராதாகிருஷ்ணன், கால்நடை மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் திரு. எ.விஷ்வநாத் ஷெகாவ்கார்,இ. ஆ. ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு. எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

☐ ☐ ☐

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவி, மாநில அரசு மூலமாகத்தான் அளிக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 24.2.2005



**26**.12.2004 அன்று சுனாமி பேரலையின் கோரத் தாக்குதலால் விளைந்த துயரச் சம்பவங்களை அடுத்து, தமிழக அரசு, துரிதமாகச் செயல்பட்டு, மிகச் சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளையும், மறுவாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செவ்வனே செயல்படுத்தியதை அனைவரும் அறிவர். இந்த உயிர்க்கொல்லிப் பேரலை எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி, தமிழகக் கடலோரப் பகுதிகளைத் திடீரெனத் தாக்கி, அளப்பரிய நாசத்தையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்திய போதிலும் ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் ஒருங்கு திரட்டப்பட்டு அதிவேகத்தில் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நான் உறுதி செய்தேன். முதல் கட்ட நடவடிக்கையான, தேடுதல், மீட்பு, மீட்கப் பட்டவர்களை பத்திரமான இடங்களில் தங்க வைத்தல், சடலங்களை புதைத்தல் / எரித்தல், நிவாரண முகாம்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றி சாதனை படைக்கப்பட்டது. உடனடி நிவாரணம் அளிப்பதான இரண்டாம் கட்டப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், தமிழக அரசு மேற்கொண்ட நிவாரண மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன.

நாம் தற்போது நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்தில் உள்ளோம். இதனை முன்னிட்டே நான், 4.1.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் ஒரு விரிவான கோரிக்கை மனு அளிக்கப்படுவதை உறுதி செய்தேன். இந்தக் கோரிக்கை மனுவில், அனைத்து நிவாரண மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஏதுவாக, மாநில அரசுக்கு, 4,800 கோடி ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட வேண்டும் என மத்திய அரசிடம் கோரப்பட்டது. இச்செயற் குறிப்புகள் குறித்தும், குறிப்பாக, மீனவர்களுக்கான மறுவாழ்வு தொகுப்பு உதவி பற்றியும், 7.1.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடனான சந்திப்பிலும், பின்னர் அன்றே, மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடனான சந்திப்பிலும் விரிவாக விவாதிக்கப் பட்டது. மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் குறித்து நான் மீண்டும் 15.1.2005 அன்று மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருடன் விவாதித்தேன். மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்காக, அவர்களுக்கு 100 சதவிகித மானிய உதவி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். நிரந்தர மறுவாழ்வுப் பணிகளுக்கான நிதி உதவி, மாநில அரசிடம் அளிக்கப்பட வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்தினேன்.

இயந்திரப் படகுகள் மற்றும் 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடிக் கலன்களை புதுப்பித்துக் கொள்ளவும், மீள வாங்கிக் கொள்ளவும், மானிய உதவி அளிப்பது உட்பட, மீனவர்களுக்கான நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக, தமிழ்நாடு அரசுக்கு, 356.54 கோடி ரூபாய் அனுமதித்து, மத்திய உள்துறை அமைச்சகம், 31.1.2005 அன்று விரிவான ஆணைகள் வெளியிட்ட போதிலும், மத்திய நிதியமைச்சர் இதற்கான நடைமுறைகளைத் திடீரென மாற்றி ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதாவது, இந்த இரண்டு வகை மீன்பிடிக் கலன்களுக்கான மானியத் தொகை மாநில அரசிடம் வழங்கப்படாமல், நேரடியாக, பொதுத் துறை வங்கிகளிடம்

வழங்கப்படும் என்று அறிவித்தார். நான், உடனடியாக, மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்கு 100 சதவிகித மானியம் வழங்கப்பட வேண்டும் என்றும், அந்த மானியமும் மாநில அரசின் மூலமாகத் தான் அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி 4.2.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

இதனை அடுத்து, 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடி கலன்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகையில், மானியத்தின் அளவு 35 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படும் என்றும், அந்தத் தொகை, மாநில அரசு மூலமாக வழங்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதற்கிடையில் துரதிருஷ்டவசமாக, மீண்டும், மத்திய அரசு, சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்குப் பதிலாக வேறு படகுகள் வாங்கிக் கொள்வதற்கு அளிக்கப்படும் மானியத்தின் அளவு தொடர்ந்து 35 சதவிகிதமாகவே இருக்கும் என்றும், அந்த மானியமும் மாநில அரசு மூலமாக அல்லாமல் பொதுத் துறை வங்கிகள் மூலமாகவே வழங்கப்படும் என்றும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதனைக் கேள்வியுற்றதும் நான், உடனடியாக, மீண்டும் 17.2.2005 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இதனை அவரது கவனத்துக்கு எடுத்துச் சென்றேன். இப்பிரச்சினை மேலும் நீடித்துக் கொண்டே செல்ல அனுமதிக்கக் கூடாது என்றும், 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள சிறிய மீன்பிடிக் கலன்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே நடைமுறை, இயந்திரப் படகுகளின் நேர்விலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும், இந்த நிதி உதவி மாநில அரசுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நான் கேட்டுக் கொண்டுள்ளேன். இது தொடர்பாக, மத்திய அரசின் முடிவான கருத்து என்ன என்று இன்னமும் தெரியவில்லை.

இவ்வரசு முழு வீச்சில் நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மத்திய அரசு அறிவித்த இந்த நடைமுறை மாற்றத்தால் நிரந்தர மறுவாழ்வுப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது துரதிருஷ்டவசமானது. மத்திய அரசு, 31.1.2005 அன்று நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தை அறிவித்து மூன்று வாரங்களுக்கு மேலாகி விட்டது. மீனவர்கள் இயன்ற விரைவில், மீண்டும் தங்களுடைய இயல்பான வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஏதுவாக, மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இப்பிரச்சினையில் மேலும் காலந்தாழ்த்தக்கூடாது. எனவே, 17.2.2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில், மாநில அரசுக்கு ஏற்படுகின்ற செலவை மத்திய அரசு ஈடு செய்யும் என்ற நம்பிக்கையுடன், இயந்திரப் படகு மீனவர்கள் உள்ளிட்ட அனைத்து வகை மீனவர்களுக்குமான நிரந்தர மறுவாழ்வு தொகுப்பு உதவித் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு செயல்படுத்துவது என நான் முடிவு செய்துள்ளேன்.

அதன்படி, தமிழக அரசு, மீனவர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட தொகுப்பு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தும். இத்திட்டத்தின்படி, சிறிய மீன்பிடி கலன்கள் மற்றும் இயந்திரப் படகுகளுக்காக பின்வரும் உதவிகள் வழங்கப்படும்.

★ உயர் அளவாக 1.5 இலட்சம் ரூபாய் வரை விலையுள்ள, முற்றிலுமாகச் சேதமடைந்த கண்ணாடி இழை கட்டுமரம் மற்றும் வள்ளங்களுக்குப் பதிலாக மாற்றுக் கலன்கள் வாங்கிக் கொள்ள 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சம் 75,000 ரூபாய் ஆக இருக்கும்.

★ முழுமையாகச் சேதமடைந்த / இழந்துவிட்ட இயந்திரப் படகுகளுக்கு மாற்றாக புதிய இயந்திரப் படகுகளை வாங்கிக் கொள்ள மொத்த விலையில் 35 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் மானியம் படகு ஒன்றுக்கு அதிகபட்சம் 5 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

★ பழுதுபட்ட இயந்திரப் படகுகளைச் செப்பனிட, மதிப்பிடப்பட்ட சேதத்தில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். இயந்திரப் படகு ஒன்றுக்கு இவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சம் 3 இலட்சம் ரூபாயாக இருக்கும்.

★ பாதிக்கப்பட்ட மீனவர் ஒவ்வொருவருக்கும் நேரடியாக மானியத் தொகை வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும். வாழ்வாதாரங்கள் உடனடியாக வாங்கப்படுவதை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்கள் விரும்பினால், பொதுத்துறை வங்கிகள் எஞ்சியத் தொகையைக் கடனாக வழங்குவதற்கு ஏதுவாக, அவர்களுடைய விண்ணப்பங்களை வங்கிகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறாக, அத்தகைய இனங்களில், மானியத் தொகை, வங்கிக் கடனோடு இணைந்ததாக இருக்கும்.

சுனாமி பேரழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள், தங்களின் நிரந்தர மறுவாழ்வுக்கு வழிகோலும் இந்த அறிவிப்பினைப் பெரிதும் வரவேற்பார்கள். இந்தத் தொகுப்பு உதவியையும் சேர்த்து, மீனவர்களின் நிரந்தர மறுவாழ்வுக்காக இதுவரை மொத்தம் 550.27 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ❖

வளமான நாட்டிற்கு வலிமையான வேளாண்மை தேவை. வேளாண்மையை மையமாகக் கொண்டுதான் ஒவ்வொரு நாடும் முன்னேற்றம் காண இயலும். தமிழ்நாட்டில் வேளாண்மையில் முக்கிய இடம் பெற்றிருப்பது நெல், வாழை, கரும்பு போன்ற பயிர்களாகும். ஆனால் அவ்வப்போது ஏற்படும் காலச் சூழ்நிலை, நீர் வளம், சமுதாயத் தேவையைப் பொறுத்து சாகுபடி முறைகளும் மாறுபடுகின்றன.

எண்ணெய்ப் பனைக்கு நீர்வளம் அதிகம் தேவையில்லை. இது வறட்சிப் பகுதியிலும் பயிராகும் தன்மையுடையது. தற்போது தமிழ்நாட்டில் பர்வலாக எண்ணெய்ப் பனை பயிரிடப்படுகிறது. இதற்கு அதிக முதலீடு தேவையில்லை.

போதிய மழையின்மையால் பாதித்த கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயிகள் பிழைப்பைத் தேடி




# கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்திடும் எண்ணெய்ப்பனை சாகுபடி

அந்த வகையில் காலச் சூழ்நிலையைப் பார்க்கும் போது, முன்பிருந்ததை விட தற்போது மழையின் அளவு குறைந்து விட்டது. இதனால் நிலத்தடி நீர் வளமும் குறைந்து விட்டது. எனவே நீர்வளம் குறையும்போது அதற்கேற்றவாறு பயிர்ச் சாகுபடி முறையிலும் நாம் மாற்றம் காண வேண்டும். சாகுபடியில் நாம் மாற்றம் காண முற்படும்போது நமது தேவையையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

தற்போது சமையல் எண்ணெய்ப் பற்றாக்குறை நம்மைச் சூழ்ந்துள்ளது. சமையலுக்காக நாம் காலம், காலமாகப் பயன்படுத்தி வருவது கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய். இது போன்றே சமீப காலமாக ''பாமாயில்'' என்கிற எண்ணெய் சமையலுக்குப் பயன்படுத்த அறிமுகப்படுத்தப்பட்டுத் தற்போது வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பனை மரத்தின் ஒரு வகையான எண்ணெய்ப் பனை மரத்திலிருந்து ''பாமாயில்'' உற்பத்தி செய்யப்படுகிறது.

நகரங்களை நாடுகிறார்கள். இதனால் கிராமப் பொருளாதாரம் ஓரளவு பாதிக்கப்படுகிறது. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், போதிய நிலத்தடி நீர் இன்மையால் வாடும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தவும், எண்ணெய்ப் பனை உற்பத்தியை அதிகப்படுத்த, விவசாயிகளைத் தமிழக அரசு ஊக்குவிக்கிறது.

பாமாயில் அதிகமாகப் புழக்கத்திற்கு வந்துவிட்ட படியால் இதன் தேவை அதிகமாகி விட்டது. ஆனால், உற்பத்தி குறைவாக உள்ளது. இந்த அதிகத் தேவையைச் சரிசெய்ய நாம் வெளிநாட்டிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கு மாற்றாக நாம் நம் நாட்டிலேயே எண்ணெய்ப் பனை உற்பத்தியை அதிகப்படுத்தினால் நம் கிராமப் பொருளாதாரமும் மேம்படும். விவசாயிகள் மகிழ்ச்சியுடனும், வளமுடனும் வாழலாம். இந்த உயரிய நோக்கில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்பவர்களுக்குச் சலுகைகள் அறிவித்துள்ளார்கள்.

அந்தச் சலுகைகள் பற்றிய விவரங்களையும், அதன் பயனையும் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்பவர்கள் அறிந்துகொள்ளும் வகையில், திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை. பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்களும் கலந்து கொண்ட கருத்தரங்க நிகழ்ச்சி 9.12.2004 அன்று நடைபெற்றது.

கருத்தரங்கில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் தொழில்நுட்பக் கையேட்டை வெளியிட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் "இந்தியாவில் எண்ணெய்ப் பற்றாக்குறை உள்ளது. உணவுக்குப் பயன்படும் எண்ணெய் மற்றும் வாகனங்களுக்கு எரிபொருளுக்குப் பயன்படும் எண்ணெய்த் தேவையில் பாதியைக் கூட சுயமாக உற்பத்தி செய்யாததால் நமது பணம் அந்நிய நாட்டுக்குச் செல்கிறது'' என்று தெரிவித்தார்.

மேலும், அவர் தொடர்ந்து, "வல்லரசு நாடுகளைப் போல் நாம் முன்னேற முடியவில்லை. எனவே, அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த எண்ணெய்யை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும்.

ஒரு மனிதனுக்கு ஒரு ஆண்டுக்குச் சராசரியாக 8 கிலோ உணவு எண்ணெய் தேவைப்படுகிறது. இதில் 4 கிலோ எண்ணெய்தான் நாம் உற்பத்தி செய்கிறோம். 103 கோடி மக்கள் தொகையின் பாதி தேவையைத்தான் நாம் உற்பத்தி செய்கிறோம்.

மீதி எண்ணெய்யை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். மற்றப் பயிர்களைவிட எண்ணெய்ப் பயிரில் கூடுதல் வருமானம் கிடைக்கிறது. இந்தியாவில் 8 இலட்சம் எக்டேரில் எண்ணைய்ப் பனை பயிராகிறது. தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 344 எக்டேரில் எண்ணைய்ப் பனை சாகுபடி செய்கிறோம்.

கிராமப்புறங்களில் விவசாய உற்பத்திப் பொருளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காததால் கிராம மக்கள் பெருமளவில் நகரங்களில் குடியேறி விட்டனர். இதைத் தடுக்க கிராமப்புறப் பொருளாதாரத்தை உயர்த்த ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கவும், உற்பத்திப் பொருளுக்குக் கூடுதல் விலை கிடைக்கவும், எண்ணைய்ப் பனை பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.23,000 வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மானியத் தொகை வழங்குகிறார்.

கூட்டுப் பண்ணைத் திட்டம் மூலம் எண்ணைய்ப் பனை வளர்ப்புக்கு உரிய அறிவிப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிக்க இருக்கிறார். மத்திய அரசு கடந்த ஆட்சியின்போது பாமாயில் இறக்குமதி வரியைக் குறைத்ததால் உள்நாட்டில் உற்பத்தியாளர்களுக்கும், கொள்முதல் நிலையங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

தற்போது உள்ள மத்திய அரசு பாமாயில் இறக்குமதி வரியை 75 சதவிகிதத்தில் இருந்து 150 சதவிகிதமாக உயர்த்தினால்தான் தமிழ்நாட்டில் எண்ணைய்ப் பனை சாகுபடி செய்யும் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்'' என்று தெரிவித்தார்.

மேலும், எண்ணைய் பனை உற்பத்தியில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன் அவர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

கருத்தரங்கில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி அவர்கள்,

"தமிழ்நாட்டில் எண்ணெய்ப் பனை உற்பத்தி 1993ஆம் ஆண்டே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்றாலும், 1996 – 2006 வரையிலான ஆட்சிக்காலத்தில் இத்திட்டம் உரிய கவனம் பெறவில்லை. அதனால் சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது'', என்று தெரிவித்தார்.

கருத்தரங்கில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் தலைவர் திரு. மு. பரஞ்சோதி, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஆர். சரோஜா, திருமதி. மல்லிகா சின்னசாமி, திரு.எஸ்.எம். பாலன், மற்றும் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. என். நெடுமாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

– ச. பாண்டியன்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
திருச்சிராப்பள்ளி

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (28.1.2005)

# கோடையிலும் சென்னைக்குத் தண்ணீர் கிடைத்திட புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம்

**த**மிழகத்தின் தலைநகரான சென்னை மாநகர் பல ஆண்டுகளாகச் சந்தித்து வருகின்ற ஒரு பெரும் பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை ஆகும். சென்னை மாநகரத்தில் வசித்து வரும் ஏறத்தாழ 60 இலட்சம் மக்கள் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் மற்றும் பிற பயன்பாடுகளுக்குமாக தினசரி 840 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவை உள்ளது.



இந்த நீர்த் தேவையை நிறைவு செய்ய, சென்னை நகருக்கு நீர் வழங்கி வரும் பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளில் மழைக்காலங்களில் தேங்கும் நீர் போதுமானதாக இல்லை. மேலும் பருவமழை குறைவாகப் பெய்யும் ஆண்டு களில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்கிட நிறைவேற்றப்பட்ட தெலுங்கு கங்கைத் திட்டமும், கடந்த ஆண்டுகளில் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. தமிழ்நாடு ஆந்திர மாநிலங் களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் 12 டி.எம்.சி. நீர் மாநில எல்லையில் கிடைக்க வேண்டும். ஆனால் அதிகபட்சமாக 2000–ஆம் ஆண்டில் 3.591 டி.எம்.சி நீர் மட்டுமே கிடைத்தது. 2003–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் நீர் எதுவும் கிடைக்கவில்லை. 2004–2005 ஆம் ஆண்டில் 2.055 டி.எம்.சி. நீர் மட்டுமே இதுவரை சென்னை நகருக்குக் கிடைத்துள்ளது.

எனவே, பல ஆண்டுகளாக சென்னை மாநகரைப் பாதித்துள்ள கடுமையான தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்று உணர்ந்து, 1991 ஆம் ஆண்டில் முதல் முறையாக நான் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதுமே ஒரு புதிய நீர் ஆதாரத்தை உருவாக்க விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, அதன் நடைமுறைச் சாத்தியக் கூறுகளை நன்கு ஆராய்ந்து, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த 1993 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்ததுடன், இதை நிறைவேற்று வதற்குத் தேவையான நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு உலக வங்கியின் ஒப்புதலையும் பெற்றேன். ஒப்பந்தங்கள் கோரிப் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட இருந்த நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக அடுத்து வந்த ஆட்சியினரால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

மீண்டும் கடந்த 2001–ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், சென்னை மாநகரை வாட்டி வரும் கடுமையான நீர்ப் பற்றாக் குறையைச் சமாளிக்கும் வகையில் நீர் ஆதாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டேன். அதன்படி 2003–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதிய வீராணம் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தேன். மிகத் துரிதமாக இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. 2004ஆம் ஆண்டு மே மாதத்தில் பண்ருட்டி நிலத்தடி நீர்ப் படுகையில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தினசரி 90 மில்லியன் லிட்டர் வரை நீர் எடுக்கப்பட்டு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மற்றும் கட்டமைப்புகள் மூலமாக சென்னை நகருக்குக் கொண்டு வரப்பட்டு, கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை சமாளிக்கப்பட்டது. இவ்வாறு வீராணம் திட்டத்தின் மூலம் தண்ணீர் பெறப்பட்டிருக்கவில்லை என்றால் சென்னை

நகரை விட்டே மக்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார்கள்.


பின்னர் 2004 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் வீராணம் ஏரியில் நீர்வரத்து அதிகரித்து ஏரி நிரம்பிய நிலையில் கடந்த 13.10.2004 முதல் புதிய வீராணம் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தினசரி கிடைக்கும் 180 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.


2004 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரை பண்ருட்டி நிலத்தடி நீர்ப்படுகையில் இருந்து நீர் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறையவில்லை என்பதும், நீரின் தன்மை மாறவில்லை என்பதும் புள்ளி விவரங்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல கடந்த அக்டோபர் முதல் வீராணம் ஏரியில் இருந்து சென்னை நகருக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்ட போதும், அப்பகுதி விவசாயிகளுக்கு எந்தவிதமானப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

கோடைக் காலங்களில் சென்னைக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் வீராணம் விரிவாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள நிலத்தடி நீர்க் குழுமம், நீர் ஆராய்ச்சி நிலைய பொறியியல் வல்லுநர்கள், தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியம் ஆகியவற்றின் பொறியியல் வல்லுநர்கள் அடங்கிய குழு கொள்ளிடம் ஆற்றில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. கடந்த 50 ஆண்டுகளில் கொள்ளிடம் ஆற்றில் நீர் வரத்து, நீர் மட்டம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு தண்ணீரை எடுப்பதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் எவ்வகையிலும் குறையாது என்பதை உறுதி செய்து தொழில் நுட்ப அறிக்கை வழங்கியது. அதன் அடிப்படையில் குறைவாக மழை பெய்யும் ஆண்டுகளிலும், கோடைக் காலத்திலும் புதிய வீராணம் திட்டத்திற்கான நீர் ஆதாரத்தினை மேலும் உறுதி செய்யும் வண்ணம் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினேன்.

மேலும் கொள்ளிடம் ஆற்றின் இருபுறங்களிலும் அமைந்திருக்கும் விவசாய நிலங்களின் நீர்ப்படுகைகள், கொள்ளிடம் ஆற்றின் உட்பகுதி நீர்ப்படுகையை சார்ந்திருக்கவில்லை என்பதும் வல்லுநர் குழுவால் கண்டறியப்பட்டது. கொள்ளிடம் ஆற்றின் மேற்பரப்பிலும், ஆற்றின் அடிமட்டத்திலும் கிடைக்கப் பெறும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 2,360 மில்லியன் லிட்டர் எனவும், தொழில் நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு 150 மில்லியன் லிட்டர் நீரையும் சேர்த்து, மொத்தம் தினசரி 350 மில்லியன் லிட்டர் நீர் மட்டுமே இப்பகுதியிலிருந்து எடுக்கப்படும். இவ்வாறு 350 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதால் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் வற்றி விடும் என்பதற்கோ, அல்லது நீரின் தன்மை மாறி உப்பு நீர் ஆகிவிடும் என்ற அச்சத்திற்கோ எந்த வித அடிப்படை ஆதாரமும் இல்லை.

விவசாயிகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ எந்தவிதப் பாதிப்பும் எதிர் காலத்திலும் நேராது என்று உறுதி செய்த பிறகே 14.12.2004 அன்று பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருப்பு இல்லாத காலங்களில் மட்டுமே கொள்ளிடம் ஆற்றில் வீராணம் விரிவாக்கத் திட்டத்தின்





கீழ் அமைக்கப்படவுள்ள நீர் சேகரிப்புக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்படும் என்பதையும் இந்த நிலத்தடி நீரை எடுப்பதன் மூலம் இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர் அளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்பதை அந்த அரசு விழாவில் நான் தெளிவாக எடுத்துக் கூறினேன்.

ஆனால், "கரைக்கின்ற படி கரைத்தால் கல்லும் கரையும், அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதைப் போல, ஒரு சிலரது தூண்டுதலின் பேரில் பல வகையான தவறான பிரச்சாரங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, இப்பகுதி விவசாயிகளின் ஒரு பிரிவினரிடையே இத்திட்டம் பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தை முழுமையாக நீக்கும் வகையிலும், இத்திட்டம் குறித்த சரியான விவரங்கள் பொதுமக்களிடமும், விவசாயிகளிடமும் தெளிவாக எடுத்துக் கூறும் வகையிலும், கடந்த டிசம்பர் மாதம் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் இப்பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவர்கள் இக்கிராமங்களிலுள்ள விவசாயிகளை நேரில் சந்தித்து புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை விளக்கினார்கள். அதே நேரத்தில், இதன் மூலம் சென்னைக் குடிநீர்த் தேவையை ஓரளவுக்கு நிறைவு செய்ய முடியும் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். அப்போது இப்பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள் தங்களது ஒரு சில கோரிக்கைகளை எனது கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு அக்கோரிக்கைகளை அமைச்சர்களிடம் வழங்கி உள்ளனர். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் தங்களது அச்சம் விலக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். விவசாயிகளின் இந்தக் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து விரிவாகவும், விளக்கமாகவும் நான் ஆய்வு மேற்கொண்டேன். அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நான் ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

1. கல்லணைக்குக் கீழே 42ஆவது மைல் (ஏலக்குறிச்சி) 54/4ஆவது மைல் (அறங்கோட்டை) மற்றும் 60ஆவது மைல் (வாழக்குறிச்சி) ஆகிய மூன்று இடங்களில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ஒவ்வொன்றும் சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று தடுப்பணைகள் உடனடியாகக் கட்டப்படும். மொத்தம் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள இந்த மூன்று தடுப்பணைகளிலும் தேக்கப்படுகின்ற மழை நீரின் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் பாதுக்காக்கப்படும் என்பதுடன், நிலத்தடி நீர் மட்டம் உயரவும் வாய்ப்பாக அமையும். இதனால் விவசாயிகளின் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் மட்டம் உயர வாய்ப்பு ஏற்படுத்தப் படுகிறது. இது தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பணிகளை விரைந்து நிறைவேற்றும்படி பொதுப்பணித்துறை உயர் அலுவலர்களுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.
2. காவிரி டெல்டா பகுதியில் தற்போது முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மின்சார மோட்டார்கள் மூலமாக நிலத்தடி நீர் எடுத்து விவசாயம் செய்வதால் விவசாயத்திற்கான செலவு குறையும் என்பதால், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு மற்றும் பாபநாசம் ஆகிய காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள நடைமுறையைப் பின்பற்றி, பெரம்பலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனம் பெறும் டி.பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதன் அடிப்படையில், 31.12.2004 வரை மின் இணைப்புக் கோரி பதியப்பட்டு நிலுவையிலுள்ள 4,886 விண்ணப்பங்களும் உடனடியாக தமிழ்நாடு மின் வாரியத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்புகள் உடனடியாக வழங்கப்படும்.
3. ஆற்றில் மணலின் ஆழம் அதிகமாக இருந்தால் அப்பகுதியில் அதிகமாக நீர் தேக்கி வைக்க இயலும். கொள்ளிடம் ஆற்றில் தற்போது மணல் எடுக்கப்படுவதால், அந்த ஆற்றின் உட்பரப்பில் தேங்கக்கூடிய நீரின் அளவு குறைந்து விடும் என்ற அச்சம் இப்பகுதி விவசாயிகளிடையே உள்ளது. இந்த அச்சத்தைப் போக்கும் விதமாக, கல்லணைக்கும் கீழணைக்கு இடைப்பட்ட ஆற்றுப் பகுதியில் மணல் எடுப்பது முற்றிலுமாக உடனடியாக நிறுத்தப்படும்.

இப்பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன்கள் எக்காலத்திலும் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இப்பணிகளை உடனடியாக நிறைவேற்றிட நான் ஆணையிட்டுள்ளேன். எனவே, இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வகையான தவறான வழிகாட்டுதலுக்கும் ஆட்பட்டுவிடாமல் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* * *

# பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது**

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.1.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் (+1 மற்றும் +2) பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன், தமிழ்நாட்டில் உள்ள மாணவியர் கல்வி கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி அதாவது, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை 2001ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.9.2001 அன்று தொடங்கி வைக்கப்பட்ட இந்த இலவச சைக்கிள் வழங்கும் திட்டம், மாணவிகள் தங்களது பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கம் அளிப்பதுடன், சமுதாயத்தில் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தருவதால், இதனை மேலும் விரிவுபடுத்தி தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துப் பள்ளிகளிலும், மேல்நிலைக் கல்வி அதாவது 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.1.2005 அன்று தலைமைச்



செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

சென்னை கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, சைதாப்பேட்டை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலுகின்ற எம். அனீஷாபானு, எம். சுசீலா, ஜி. அனிதா, கே.சி.எஸ். சங்கரலிங்க நாடார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஏ. பல்கீஸ் பேகம், முருக தனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் வி.சுதா, ஜெய்கோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் என். தங்கமலர் ஆகிய மாணவிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இலவச சைக்கிள்களை வழங்கி இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதே நிகழ்ச்சியில் சென்னையின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மேல்நிலைக் கல்வி பயிலும் மேலும் 120 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின்படி தமிழகத்திலுள்ள 2,254 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 2,49,750 மாணவிகள் பயன்பெறுவார்கள். இதற்கான மொத்தச் செலவினம் 44 கோடியே 76 இலட்சம் ரூபாய் ஆகும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம.வேலுசாமி, தலைமைச் செயலாளர் திருமதி. லட்சுமி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என்.நாராயணன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.ஏ. நாகராஜன் இ.ஆ.ப., மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் திரு. என்.பி. குப்தா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திரு.ஈ. தசரதன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ❑

# சுனாமிப் பேரழிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.137 கோடியில் புதிய தொகுப்பு உதவித் திட்டம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
3.1.2005 அன்று சட்டப்பேரவையில் அறிவிப்பு



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

26.12.2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களைச் சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டு மொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர்.

சுனாமியால் வீடுகள் மற்றும் உடைமைகள் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், சமைப்பதற்குத் தேவையான பருப்பு, எண்ணெய் முதலான பொருட்கள் வாங்க 1,000 ரூபாய், பாத்திரங்கள், அடுப்பு முதலியன வாங்குவதற்கு 1,000 ரூபாய் மற்றும் தற்காலிகக் குடிசைகள் அமைப்பதற்காக 2,000 ரூபாய் ஆக மொத்தம் 5,000 ரூபாய் மதிப்பில் உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 28.12.2004 அன்று ஆணையிட்டேன்.

சுனாமியால் வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சிறு வியாபாரிகள் மற்றும் கடல்சார் தொழில்களை நம்பி இருந்த, சுமார் 1.5 இலட்சம் குடும்பங்களுக்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், மளிகைச் சாமான்கள், பாத்திரங்கள் முதலியவற்றை வாங்க 2,000 ரூபாய், ஆக 3,000 ரூபாய் மதிப்பிலான உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 31.12.2004 அன்று ஆணையிட்டேன். இந்த இரண்டு தொகுப்பு உதவித் திட்டங்களுக்காக 120 கோடி ரூபாய் செலவிட ஆணையிட்டேன்.

சுனாமியால் வாழ்வு ஆதாரங்களை முற்றிலுமாக இழந்த மீனவர்களின் துயர நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக, 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட 28.12.2004 அன்றே நான் ஆணையிட்டேன்.

மீனவர்கள், சேதமடைந்த தங்களது கட்டு மரங்களையும், வள்ளங்களையும், விசைப் படகுகளையும் பழுது பார்க்கவும் புதிய படகுகள் வாங்குவதற்கும் மற்றும் சுனாமியால் வாழ்வாதாரங்களை இழந்த இதர குடும்பங்கள், தங்களது தொழிலை முழுவதுமாகத் தொடங்குவதற்கும் ஏறத்தாழ இன்னும் மூன்று மாதங்கள் ஆகும்.

எனவே, அதுவரை இக்குடும்பங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திட தக்க உதவிகள் வழங்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, சுனாமியால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் உடனடி நிவாரண உதவித் தொகுப்பினைப் பெற்ற சுமார் மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் மேலும் ஒரு நிவாரண உதவித் தொகுப்பை வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். **இந்த தொகுப்பு உதவித் திட்டத்தின்படி மேற்குறிப்பிட்ட சுமார் மூன்று இலட்சம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி; மற்றும் 350 ரூபாய் மதிப்புள்ள, 3 லிட்டர் மண்ணெண்ணெய், பாமாயில், துவரம் பருப்பு, மஞ்சள் பொடி, புளி, மிளகாய் வத்தல், சாம்பார் பொடி, அயோடின் கலந்த உப்பு, சர்க்கரை, தேயிலைத் தூள் ஆகிய பொருட்களும்; 1,000 ரூபாய்**

**ரொக்க உதவியும், மேலும் மூன்று மாதங்களுக்கு வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,526 ரூபாய் மதிப்புள்ள இந்தத் தொகுப்பு உதவி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். இந்த உதவித் திட்டம் சுமார் 137 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

சென்ற மாதம் இந்த அரசு வழங்கிய நிவாரண உதவித் தொகுப்பைப் பெற்ற ஒரு சில குடும்பத் தலைவர்கள் அந்த உதவிகளைத் தங்களது இல்லங்களுக்கு முழுமையாகக் கொண்டு போய் சேர்க்கவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தகைய உதவித் தொகுப்பை அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்களிடம் நேரடியாக வழங்கினால் இது போன்ற புகார்கள் அறவே எழாது என்று நான் கருதுகிறேன். எனவே, தற்போது வழங்கப்படும் நிவாரணத் தொகுப்பு உதவிகளை சம்பந்தப்பட்ட குடும்பங்களின் இல்லத் தலைவிகளிடம் நேரடியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி அந்தந்தக் குடும்பத் தலைவரின் மனைவி அல்லது தாய் அல்லது அவரது மூத்த மகளிடம் இந்த உதவிகள் வழங்கப்படும்.

தற்போது வழங்கப்படும் இந்த நிவாரண உதவிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக அந்தந்த கிராமங்களில்/வார்டுகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரண ஆலோசனைக் குழுக்களின் முன்னிலையில் வழங்கப்படும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், பொதுச் சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை சீர்ப்படுத்தவும், 4,800 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கும்படியும்; கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர், தூண்டில் வளைவுகள் ஆகியவை கட்டுவதற்காக மேலும் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு அளிக்கவும் மத்திய அரசை நான் கோரியிருந்தேன். இதில் மீனவர்கள் மறுவாழ்வுக்கும், மீன்பிடித் துறைமுகங்களை மீளக் கட்டுவது போன்ற உள்கட்டமைப்புக்காகவும், மத்திய அரசிடம் கோரப்பட்ட மொத்தத் தொகை 1,030.93 கோடி ரூபாய் ஆகும். இத் தொகையில் மீனவர் மறுவாழ்விற்காக மட்டும் கோரப்பட்ட மானியத் தொகை 907.53 கோடி ரூபாய் ஆகும்.

19.1.2005 அன்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற பின் மத்திய நிதி அமைச்சர் மற்றும் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் அளித்த பத்திரிகைப் பேட்டியில் மத்திய அரசால் மீனவர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு உதவி பற்றி தெரிவித்தார்கள். எனினும் மத்திய அரசிடமிருந்து அது பற்றிய அதிகாரபூர்வமான ஆணைகள், 29.1.2005 அன்று வரை பெறப்படாத நிலையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தேவையான, வாழ்வாதாரத் தொகுப்பு உதவிகள் வழங்குவதில் மேலும் தாமதம் ஏற்படுவது, மிக விரைவாக நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு ஒரு பின்னடைவாக அமைந்துவிடும் என்பதால், 19.1.2005 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட மாநிலங்களுக்கான நிதி உதவி குறித்த தகவலின் அடிப்படையில், மீன்பிடிக் கலன்களை புதிதாக வாங்கிக் கொள்வது உள்ளிட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங்களுக்காக 396 கோடி ரூபாய் அளவுக்கு கூடுதல் தொகுப்பு உதவித் திட்டத்தை நான் 29.1.2005 அன்று அறிவித்தேன்.

இந்நிலையில், 29.1.2005 அன்று மத்திய நிதியமைச்சர் அவர்கள் பொதுத்துறை வணிக வங்கிகளுக்கு ஒரு ஆணை பிறப்பித்துள்ளதாக பத்திரிகை செய்தி வெளியானது. இதில் மீனவர்களுக்கு சிறு படகுகள், விசைப் படகுகள் புதிதாக வாங்குவதற்கும், விசைப் படகுகள் பழுது பார்ப்பதற்கும், மானியத் தொகை மற்றும் கடன், பொதுத் துறை வணிக வங்கிகள் வாயிலாக மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இது மாநில அரசை புறக்கணித்து விட்டு செயல்படுத்தும் திட்டமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அதே நேரத்தில், மாநில அரசின் தலைமைச் செயலர், நிவாரண ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், மீனவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று பொதுத் துறை வணிக வங்கிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நேரடியான ஆணையும் வெளியிடப்பட்டிருந்தது. மாநில அரசு என்ற ஒன்று இருப்பதாகவே கருதாமல் அது அறவே புறக்கணிக்கப்படும் வகையில் உள்ள இச்செயல் சரியான அணுகுமுறையாக அமையாது என்று 30.1.2005 அன்றே விளக்கமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் மூலமாக எடுத்துரைத்தேன்.

தற்போது, மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்திலிருந்து சுனாமி நிவாரண உதவிகள் பற்றிய தெளிவான அரசாணை 31.1.2005ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டுள்ளது. 29.1.2005 அன்று மத்திய நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையிலிருந்து 31.1.2005 நாளிட்ட ஆணை மாறுபட்டுள்ளது. அதாவது, மத்திய நிதி அமைச்சர் மீனவர்களுக்கு வழங்கக்கூடிய படகுகளுக்கான மானிய உதவி, பொதுத் துறை வங்கிகள் வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அதற்கு நேர் மாறாக, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 30.1.2005 அன்று எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி இந்த மானியத் தொகை மாநில அரசு வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று 31.1.2005 நாளிட்ட ஆணையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மீனவர் வாழ்வாதாரங்களுக்கு 356.54 கோடி ரூபாய் மானிய உதவியாக வழங்கும் என்றும் இது மாநில அரசுக்கு வழங்கப்படும் என்றும் அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, நான் எடுத்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசிற்கு உரிய அதிகாரம் மற்றும் பொறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், முழுவதுமாகச் சேதமடைந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய்

முழுவதும் மானியமாக வழங்கப்படும் திட்டத்தை நான் நேற்று அதாவது – 2.2.2005 அன்று துவக்கி வைத்தேன். அடுத்த கட்டமாக, முழுவதுமாகச் சேதமடைந்த விசைப் படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப்படகுகள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, அதிகபட்ச மானியத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை நாளை, அதாவது – 4.2.2005 அன்று நான் தொடங்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைப்படகுகள் பழுது நீக்கம் செய்வதற்கும், கண்ணாடி இழைக் கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப்படகுகள் ஆகியவற்றைப் புதிதாக வாங்குவதற்கும் மானியம் போக எஞ்சியுள்ள தொகை வங்கிகள் மூலம் கடனாகப் பெறப்பட வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு முழு மானியத் தொகை எதிர்பார்த்த மீனவர்களுக்கு முழு திருப்தி அளிக்கவில்லை. மீனவர்களின் மீன்பிடிக் கலன்களுக்கும், அவர்களது வீடுகளுக்கும் ஏற்பட்டுள்ள பெரும் இழப்பைக் கருத்தில் கொண்டு, எவ்வித கடனோடும் இணைக்காமல் முழுத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசிடம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறேன். மத்தியக் குழுவிடமும் இது குறித்து நான் வலியுறுத்தினேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்த போதும், மத்திய உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்த போதும், தொடர்ந்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருடன் கலந்து ஆலோசித்த போதும், மீண்டும் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சரோடு நடந்த கூட்டத்தின் போதும், மீனவர்களுக்கு முழு மானியத்துடன் மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தினேன். தற்போது 31.1.2005 நாளிட்ட மத்திய அரசின் ஆணையில் மானியம் மற்றும் கடனுடன் தான் மீனவர்களுக்கான மறுவாழ்வு நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மீனவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை முழுவதுமாகத் திரும்பப் பெறத் தேவையான மொத்தத் தொகை 923.01 கோடி ரூபாய் என கணக்கிடப் பட்டுள்ளது. இதில் மத்திய அரசு 356.54 கோடி ரூபாய் மானியமாக தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அதாவது – National Calamity Contingency Fund-லிருந்து வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாநில அளவிலான பேரிடர் நிவாரண நிதி, அதாவது, Calamity Relief Fund, முழுவதும் செலவிடப்பட்டுவிட்ட நிலையில் தான் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்த நிவாரணத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். இது போன்ற அசாதாரண பேரிடருக்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும். எனவே பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். □

## செஞ்சிலுவைச் சங்கம்

## RED CROSS SOCIETY

செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாக இருந்தவர் சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த 'ஹென்றி டுனான்ட்' (Henry Dunant) என்பவர் ஆவார். 1859இல் பிரான்ஸுக்கும் ஆஸ்திரியாவுக்குமிடையே நடந்த போரில் மருத்துவ உதவியின்றி உயிரிழந்த வீரர்களின் நிலையைக் கண்டு இவர் வருந்தினார். துணைக்குச் சிலரை அழைத்துக் கொண்டு சாகும் நிலையிலிருந்த பல வீரர்களுக்கு, மருந்து கொடுத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றினார். இந்நிகழ்ச்சியை விவரித்து இவர் எழுதிய ஒரு நூல், செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது.

ஹென்ரி டுனான்ட்டின் திட்டத்தைச் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டு 1864இல் ஒரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டில்தான் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்க முடிவு எடுக்கப்பட்டது. இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளன. இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 1920ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பன்னாட்டுச் சங்கத்தின் தலைமைச் செயலகம் சுவிட்ஸர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் உள்ளது. உலகெங்கும் இதன் கிளைகள் இருக்கின்றன. இச்சங்கத்தின் கொடியில் வெள்ளைப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை பொறிக்கப்பட்டிருக்கும். அதனால் இது செஞ்சிலுவைச் சங்கம் என அழைக்கப்படுகிறது. முஸ்லிம் நாடுகள் சிலவற்றில் சிலுவைக்குப் பதிலாகப் பிறை சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் இவை செவ்விளம்பிறைச் சங்கம் (Red Crescent Society) என்ற பெயரில் இயங்குகின்றன. போரில் கைதிகளாகப் பிடிபட்ட வீரர்களின் நலனையும் இது பாதுகாக்கிறது. போர் இல்லாத காலத்தில் இது பொதுமக்களின் சுகாதாரத்தைக் கவனித்து, மருத்துவ வசதிகளை அளிக்கிறது. புயல், வெள்ளம், பூகம்பம் போன்றவை நிகழும் போது இது மக்களுக்குத் தொண்டாற்றுகிறது.

# ஒவ்வொரு நாளும் தமிழக முன்னேற்றம் ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை



சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் பதிலுரை
7.2.2005

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைக்கின்ற சாதனைகளைக் கடந்த ஆண்டில் தமிழக அரசு படைத்திருக்கிறது.

குறுகிய காலத்தில் எத்தனை எத்தனை சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்கு நாட்டுக்கு நாம் நல்லதொரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறோம்.

எந்தச் சாதனையும் எளிதாக நிறைவேற்றப் படவில்லை. அவ்வாறு நிறைவேற்ற மற்றவர்கள் விடவும் இல்லை. அளவிலாத பொறுமை, ஓய்விலாத உழைப்பு, முடிவிலாத முயற்சி – இந்த மூன்றால், முடிக்க முடியாது என்று பிறர் முடிவு செய்தவற்றை, நாம் முடித்துக் காட்டியிருக்கிறோம்.

எதிர்ப்புகளே நமக்கு ஊக்கம் அளித்திருக்கின்றன. ஏளனங்களே நமக்கு உரம் ஊட்டியிருக்கின்றன. ஏகடியங்களே நமக்கு வலிமை அளித்திருக்கின்றன.

நாம் அயரவில்லை; அயர மாட்டோம். 'எதையும் தாங்கும் இதயம்' என்று பேறிஞர் அண்ணா சொன்னாரே அந்த இதயம் நமக்கே உண்டு. இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் நாம் தாண்டினோம். 2004–ஆம் ஆண்டு ஒரு விசித்திரமான ஆண்டு!

பல வெற்றிகளைத் தந்த இந்த ஆண்டு விடை பெறும் நேரத்தில் நம்மைச் சோகத்திலும் ஆழ்த்தியது! சுனாமி ஆழிப் பேரலைகளின் ஊழித் தாண்டவத்தால் ஏற்பட்ட இழப்புகள் எத்தனை! எத்தனை!

எத்தனை இழப்புகளையும் ஈடு செய்யலாம்; எத்தனை அழிபாடுகளையும் மறு நிர்மாணம் செய்து கொள்ளலாம்!

ஆனால் அன்பிற்கினிய நமது மக்களை இழந்தோமே – அந்த இழப்பை எப்படி ஈடு செய்வது ? மறக்க முடியுமா, அந்த மாபெரும் அழிவை ?

கடலோரத் தமிழகத்தைச் சுனாமி சின்னாபின்னம் ஆக்கியது ஒரு பக்கம்!

எந்தப் பக்கமும் நகர முடியாதபடி, ஆக்கப் பணிகளில் அக்கறை இல்லாத அடாவடித்தனங்களின் தடை ஒரு பக்கம்!

இவற்றுக்கு நடுவே நாம் படைத்த சாதனைகள், இதயம் இருப்போரால் பாராட்டப்படுகின்றன. ஆனாலும் கூட, இன்னும் சில பேரால் இவற்றை ஒப்புக் கொள்ள முடியவில்லை.

நல்லதை நடக்க விடாமல் தடுக்க முயன்றோர் –

நன்மையைத் தீமை என்று தலைகீழாகப் பார்த்துத் தர்க்கம் செய்தோர் –

நாளொரு பொய்யும் பொழுதொரு புளுகும் ஆக அவதூறு பரப்பியோர் –

இவர்களை எல்லாம் தாண்டித்தான் நாம் சாதனை படைத்தோம் என்பதை நாடறியும்; நல்லவர்கள் அறிவார்கள்!

இந்தியாவின் அமைதிப் பூங்கா எது ? தமிழகம் தானே! இது எல்லோரும் அறிந்தது! ஆனால், அமைதியை அராஜகம் என்று அர்த்தப்படுத்திக் கொள்கிற அரசியல் தலைவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எதற்காகப் போராடுகிறோம் என்பதே தெரியாமல் போராட்டத்துக்காகவே போராட்டம் நடத்துகிற பொறுப்பற்ற மனிதர்களுக்கும் தமிழகத்தில் பஞ்சமில்லை.

இந்த இயற்கை இடர்களையும், செயற்கைத் தடைகளையும் தாண்டிய வளர்ச்சி வரலாறே இந்த ஆட்சியின் வரலாறு என்பதை இந்தப் பேரவையில் கூறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

எனக்கும் எனது அரசுக்கும் ஒரே குறிக்கோள் – அது தமிழக முன்னேற்றம்!

'இந்தியாவில் முதன் மாநிலமாகத் தமிழகத்தை ஆக்குவோம்' என்பது உணர்ச்சி முழக்கம் அன்று – கண்ணெதிரே உருவாகி வரும் சரித்திரம்!

இதைக் காண முடியாதவர்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். காணமாட்டேன் என்று அடம் பிடிப்போர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன்.

கோடானு கோடி மக்களின் நம்பிக்கைக்கு உரியது இந்த அரசு. அந்த நம்பிக்கை தருகிற சக்திதான் எங்களது அசைக்க முடியாத வலிமை என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

**சுனாமி நிவாரணப் பணிகள்**

26.12.2004 அன்று தமிழகம் இதுவரை சந்தித்திராத சுனாமிப் பேரலைகள் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களைத் தாக்கியதில் ஏறத்தாழ 8,000 பேர் தங்களது இன்னுயிரை இழந்ததுடன் லட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் மற்றும் தங்களது வாழ்வு ஆதாரங்களையும் முற்றிலுமாக இழந்து விட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் இந்த இயற்கைச் சீற்றத்திலிருந்து மீண்டு தங்கள் இயல்பு வாழ்க்கையை மீண்டும் அடைய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மூன்று கட்டங்களாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது முதல் இரண்டு கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டைப் போலவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பிற நாடுகளிலும், பிற மாநிலங்களிலும் முதற் கட்டப்பணிகள் முடிக்கப்படாமல், அவை போராடிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இவை முடிக்கப்பட்டு, உடனடி நிவாரண உதவி வழங்கும் இரண்டாம் கட்டப் பணிகளை 30.12.2004 அன்றே நாம் தொடங்கி விட்டோம்.

சுனாமிப் பேரலைகளின் தாக்குதலுக்கு இலக்கான மக்கள் இயல்பு வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான பல்வேறு உதவித் தொகுப்புகளை நான் தொடர்ந்து வழங்கி உள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாகப் பல்வேறு உதவித் தொகுப்புகளின் கீழ்



இதுவரை மொத்தம் 398.37 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரங்களை மீண்டும் பெற்றிடும் வகையில் 461 கோடி ரூபாய் மதிப்பிலான உதவித் தொகுப்பை வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தற்போது, நாம் மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரும் பணி சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களும் மற்றும் ஏனையோரும் அவர்களது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்யும் மூன்றாம் கட்டப் பணிகளாகும். இதன்படி, அவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தர வேண்டும்; வாழ்வு ஆதாரங்களை அவர்கள் திரும்பப் பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசுடன் அனைத்துத் தரப்பினரும், அரசு சாரா அமைப்புகளும் இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மீனவர்கள் தங்கள் வாழ்வு ஆதாரங்களைத் திரும்பப் பெற்றிட மானியம் மற்றும் கடனுடன் இணைந்த நிவாரண உதவி வழங்கப்படுவது மீனவர்கள் மனதில் முழு திருப்தியை ஏற்படுத்தவில்லை. ஆகவே மீனவர்களுக்கான வாழ்வு ஆதார உதவிகளை 100 சதவீதம் முழு மானியத்துடன் வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

நான் 4.2.2005 அன்று இந்த அவையில் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் 31.1.2005–ஆம் தேதியிட்ட ஆணை 30.1.2005 அன்று நான் பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு ஒரு பதிலாக அமைந்துள்ளது என்றும் இந்த ஆணையில் மீனவர்கள் மறுவாழ்விற்காக வழங்கப்பட்டுள்ள மொத்த மானியத் தொகையும் மாநில அரசுக்கே வழங்கப்படும் என்று குறிப்பிட்டு இருந்ததையும் தெரிவித்தேன்.

30.1.2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்குப் பாரதப் பிரதமரின் 31.1.2005 தேதியிட்ட பதில் கடிதம் 4.2.2005 அன்று மாலை தான் அஞ்சல் தபால் மூலம் எனக்குக் கிடைக்கப் பெற்றது. அந்தக் கடிதத்தில், 31.1.2005 தேதியிட்ட உள் துறை அமைச்சகத்தின் ஆணைக்கு நேர்மாறான ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கடன் மற்றும் மானியம் வழங்கப்படும் இனங்களில் அவை வங்கிகள் மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தக் கடிதத்திற்கு நான் 4.2.2005 அன்றே பதில் எழுதியுள்ளேன். இதில் நான் இந்த மாமன்றத்தில் 3.2.2005 மற்றும் 4.2.2005 அன்று தெரிவித்துள்ள அனைத்துக் கருத்துக்களையும் எடுத்துக் கூறி சுனாமி நிவாரணப் பணிகளை முழு வீச்சுடன் செயல்படுத்த வேண்டிய இத்தருணத்தில் தேவையில்லாமல் இப்பிரச்சனை சர்ச்சையாக ஏன் வளர்க்கப்படுகிறது என்பது புரியவில்லை என்றும்; மத்திய உள்துறை அமைச்சகத்தின் 31.1.2005 தேதியிட்ட ஆணையின்படி மாநில அரசுக்குத் தான் மொத்த மானியத் தொகையும் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். மேலும், இந்தக் கடிதத்தில் 4.2.2005 அன்று மத்திய அமைச்சரவைச் செயலாளர் விடுத்த அழைப்பின் பேரில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் இதர அலுவலர்கள் டெல்லியில் கலந்து கொண்ட கூட்டத்தில் மீனவர்களுக்கு வழங்கும் உதவித் தொகை முழு மானியமாக வழங்கப்பட வேண்டும் என்று

வலியுறுத்தியதோடு, மொத்த மானியத் தொகையும் மைய அரசின் ஆணைப்படி மாநில அரசுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினர்.

எங்கள் கோரிக்கை, மீனவர்களுக்கு வழங்கக் கூடிய உதவித் தொகை முழு மானியமாக இருக்க வேண்டும் என்பதும் வழங்கக் கூடிய மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். ஒரு வேளை, மானியத் தொகையுடன் வங்கிக் கடன் பெற வேண்டிய அவசியம் நேரிட்டால் அப்பொழுதும் கூட அந்த மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். நான் மீண்டும் கூற விரும்புவது, தேவையில்லாமல் இதனை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சனையாக மேலும் வளர்க்கக் கூடாது என்பதும் நான் 4.2.2005 அன்று விடுத்துள்ள கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

தமிழகம் சந்தித்துள்ள இந்த இயற்கைச் சீற்றம் தமிழக மக்கள் இதுவரை கண்டும் கேட்டும் இராத ஒரு பேரிடர் ஆகும். இதில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களது இயல்பு வாழ்க்கையை மீண்டும் நிலை நிறுத்தித் தர எனது அரசு திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசின் துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதல் இறுதி நிலையில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள் வரை உள்ள அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகிறார்கள்.

சுனாமிப் பேரலைகளால் தாக்குண்டு இறந்தவர்களின் உடல்களை – மணலிலும், புதர்களிலும், இடிபாடுகளிலும் சிக்கிக் கிடந்த சடலங்களை – மீட்டு அடக்கம் செய்யும் பணியில், மாநிலம் முழுவதும் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் சிறப்பு ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் 4,799 துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் வழக்கமாகத் தாங்கள் ஆற்றும் கடமைக்கு அப்பாற்பட்டு மிகுந்த சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி உள்ளனர். இதனைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம் இந்த 4,799 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மொத்தம் 1.2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும் அரசியல் என்பது கிஞ்சித்தும் இல்லாத வகையில் செயல்பட்டு வருகிறோம். எனவே, தேவையற்ற அரசியல் சாயம் பூசி அந்தப் பணிகளைக் கொச்சைப்படுத்திட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கட்சி மாச்சரியங்களை மறந்து, மன வேறுபாடுகளைத் துறந்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மகத்தான பணியில் அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.


**வீரப்பன் கொடுமைக்கு முடிவு**

வீரத்திலும் தீரத்திலும் சிறந்தது தமிழ்நாடு. இந்த உண்மை, வரலாற்றில் காலந்தோறும் நிரூபிக்கப்படுகிறது. அவ்வாறு அண்மையில் நிரூபிக்கப்பட்ட நிகழ்ச்சிதான் வீரப்ப வதம்.

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன் – மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் – யானைகளை இரக்கமின்றிக் கொன்று குவித்த அசுரன் – ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் – தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல் கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு – இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பனின் கொடுமைகளுக்கு எல்லாம் 18.10.2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும், அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மனித வேட்டை இதன் மூலம் ஒரு முடிவுக்கு வந்தது.

அசாதாரண ஆற்றலோடு, அசாதாரணப் பொறுமையுடன், அசாதாரண விவேகத்தின் துணையோடு, அசாதாரண வீரத்தால், அசாதாரண வெற்றியைப் படைத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனை, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் ஆகியவற்றை நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு அளித்தேன். மேலும், சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து பணியாற்றிய வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உரிய பரிசுகளை வழங்கியுள்ளேன்.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் வீரப்பனை வீழ்த்திய அதிரடிப்படை வீரர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர் என்ற செய்தியை இம்மாமன்றத்தில் பகிர்ந்து கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.



சிறப்பு அதிரடிப்படை வீரர்களுக்கு பாராட்டும், பரிசும் வழங்கக்கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொது நல வழக்கில் 2.2.2005 அன்று தீர்ப்பு வழங்கிய மாண்புமிகு நீதியரசர் திரு. எம். கற்பகவிநாயகம் மற்றும் நீதியரசர் திரு. ஏ.ஆர்.ராமலிங்கம் ஆகியோர் –

"We also applaud the action of the Government, in arranging the function to give away the awards, in appreciation of the services rendered by the police personnel. In our view, the efforts made by the Tamil Nadu STF, which proved the success, has gained a good name not only for Tamil Nadu Police, but has secured fame and name for whole India, at the International level.....

"In our view, the Tamil Nadu STF deserves every appreciation not only by the Government of Tamil Nadu, but also the Government of India." என்று கூறியுள்ளனர்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்திய சாதனை சாதாரண சாதனை அல்ல. அனைவராலும் பாராட்டப்படவேண்டிய சாதனை. ஆனால், இந்தச் சாதனைக்கு மத்திய அரசிடமிருந்து உரிய பாராட்டுக் கிடைக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. வீரப்பன் தமிழ்நாட்டை மட்டுமே பீடித்திருந்த கேடு அல்ல; இரண்டு மாநிலங்களைப் பிடித்து இருந்த சாபக்கேடு அவன். ஒட்டு மொத்த இந்தியாவுக்குமே அவன் ஒரு களங்கமாக இருந்தான். அப்படிப்பட்ட ஒரு தீயவனைத் திட்டமிட்டு ஒழித்துக் கட்டிய தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசின் காவல் துறையையும், காவல் துறை அதிகாரிகளையும் மத்திய அரசு பாராட்ட வேண்டாமா? ஆனால், அதற்கு நேர் மாறாக மத்திய அரசு செய்தது என்ன?

வீரப்பனை வீழ்த்திய இந்த அரிய சாதனையை நிகழ்த்திய தமிழக காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஒரு படி பதவி உயர்வை நான் வழங்கினேன். இந்தியக் காவல் பணி, அதாவது I.P.S. அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் பதவி உயர்வை மத்திய அரசுதான் உறுதி செய்ய வேண்டும். எனவே, அதிரடிப்படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்குக் காவல் துறை தலைமை இயக்குநர்–DGP என்ற நிலைக்கும்; திரு. செந்தாமரைக்கண்ணன் மற்றும் திரு. சண்முகவேல் ஆகியோருக்குக் காவல் துறை துணைத் தலைவர்–DIG என்ற நிலைக்கும் பதவி உயர்வு வழங்கி அதற்கான ஒப்புதல் வழங்க மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். ஆனால், மத்திய உள்துறைச் செயலர் தனது 4.1.2005 நாளிட்ட கடிதத்தின் மூலம் இந்தப் பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை நிராகரித்துத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்குக் கடிதம் எழுதி உள்ளார். அவர்களது பதவி உயர்வு ஆணைகளை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதன் பின்னர் நான் மத்திய உள்துறை அமைச்சருக்கு 27.1.2005 அன்று எழுதிய கடிதத்திற்கு இதுவரை எந்த பதிலும் பெறப்படவில்லை.

தங்களது உயிரைத் துச்சமாக மதித்துக் கருத்தூன்றி கடமை ஆற்றியவர்களுக்குத் தக்க மரியாதையும், கவுரவமும் அளிக்க வேண்டியது நமது கடமை ஆகும். அவ்வாறு செய்யவில்லை என்றால், அவர்களது உண்மை

உழைப்பை அவமானப்படுத்துவதாக ஆகி விடும். தமிழகத்தில் மட்டும் அல்லாமல், இந்தியா முழுவதிலும் உள்ள காவல் துறையினருக்கு மனச்சோர்வு அளிப்பதாக இது அமைந்து விடும். மாநில அரசு பதவி உயர்வு அளித்து அவர்களுக்கு உரிய மரியாதையை வழங்கிய நிலையில் மத்திய அரசு அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கூறுவது, உணவு பரிமாறப்பட்ட பந்தியில் உட்கார்ந்த ஒருவரை அவர் சாப்பிட எத்தனிக்கும் தருணத்தில் எழுப்பி வெளியேற்றுவதற்குச் சமம் ஆகும். இது மிகவும் வருந்தத்தக்கதும் துரதிர்ஷ்டவசமானதும் ஆகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர்களே மத்திய அரசு, தமிழ்நாடு அதிரடிப் படை வீரர்களுக்கு சிறப்புச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டதை மத்திய அரசு கருத்தில் கொள்ள வேண்டும். இப்போதாவது மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு உரிய பதவி உயர்வு அளித்து தக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையை நிகழ்த்திய அதிரடிப்படை வீரர்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டும். ஆனால், மத்திய அரசோ இது பற்றி சிந்தனை செய்ததாகவே தெரியவில்லை. மத்திய உள்துறை அமைச்சர் திரு.சிவராஜ் பாட்டீல் அவர்கள் ஒருவரைத் தவிர இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளில் உள்ள வேறு எவரும் மத்திய அரசைச் சார்ந்த வேறு எவரும் பாராட்டுக் கடிதமும் அனுப்பவில்லை, குறைந்த பட்சம் தொலைபேசியில் கூட வாழ்த்தோ, பாராட்டோ தெரிவிக்கவில்லை.

வீரப்பனை ஒழித்துக் கட்டி சாதனைப் படைத்த அதிரடிப்படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து இந்தச் சாதனை படைக்க காரணமாக இருந்த காவல்துறை அதிகாரிகளுக்கும் இந்த ஆண்டு தேசிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக நான் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தேன். அதிரடிப் படைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்களுக்கு 'பத்மஸ்ரீ' விருதும்; திரு.செந்தாமரைக் கண்ணன் அவர்களுக்கு 'அசோக சக்ரா' விருதும்; அதிரடிப்படை வீரர்கள் திரு.எஸ். வெள்ளதுரை, திரு.எம். சரவணன், திரு. வி. குமரேசன் ஆகியோருக்கு 'கீர்த்தி சக்ரா' விருதும் வழங்கிட வேண்டும் என்று பரிந்துரைத்து எனது அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியது. ஆனால், மத்திய அரசு குடியரசு தினத்தன்று அறிவித்த விருதுகள் பட்டியலில் அதிரடிப்படை வீரர்கள் எவரது பெயரும் இடம் பெறவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. குடியரசு தின விருதுகள் யார் யாருக்கோ வழங்கப்பட்ட நிலையில் அதிரடிப்படை வீரர்கள் விருதுகளுக்குத் தகுதியற்றவர்களா என்பதை இந்த மாமன்றம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வீரப்பனை வீழ்த்திய சாதனை தமிழகக் காவல்துறை வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும். இந்தச் சாதனையை நிகழ்த்தத் துணை புரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை இந்தப் பேரவையில் மறுபடியும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**வீராணம் திட்டம்**

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கும், அதனை நிறைவேற்ற மேற்கொண்ட தளராத முயற்சிக்கும் கிடைத்த தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

அயராத உழைப்பும், குலையாத உறுதியும் ஒன்று சேர்ந்தால், இயலாத செயல் என்ற ஒன்று எப்போதும் இல்லை என்ற தத்துவத்திற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

சென்னை மாநகரில் ஏற்படக் கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சனையைச் சமாளிக்க வேண்டும் எனில் கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை 1993–ஆம் ஆண்டிலேயே நான் உணர்ந்த காரணத்தால், அதற்கு ஒரு தீர்வு காண நான் புதிய வீராணம் திட்டத்தை உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த முனைந்தேன். தமிழகத்தில் 1996ல் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. குறுகிய அரசியல் மாச்சரியங்களுக்காக இத்திட்டத்தைக் கைவிட்டது.

2003–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை நான் தொடங்கி வைத்தேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று வீம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்களது இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப்பாடுகளைத் தவிடுபொடியாக்கி புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால்தான் 2004-ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் 2004 ஜுன் மாதத்திலிருந்து தண்ணீரின் அளவைப் படிப்படியாக அதிகரித்து நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் அளவில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது.

13.10.2004 அன்று முதல் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்துச் சென்னைக்கு வழங்கப்பட்டு வருகிறது.



கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீர் சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. ஆகையால், வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

கோடைக் காலத்தில் வீராணம் ஏரியில் நீரின் அளவு குறையும்போது கொள்ளிடம் ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட இருக்கின்ற 6 நீர் சேகரிக்கும் கிணறுகளிலிருந்து புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்க வகை செய்யும் வகையில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தப் புதிய வீராண விரிவாக்கத் திட்டம் செயல் படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கோ, கொள்ளிடம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரின் அளவுக்கோ எந்தவித பாதிப்பும் நேராது என்பதைப் புள்ளி விவரங்களுடன் கடந்த 2, 3 மற்றும் 4–ஆம் தேதிகளில் இந்த அவையில் நடந்த விவாதத்தின் போது நான் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன்.

விவசாயிகள் நலனைக் காப்பதில் வேறு எவரைக் காட்டிலும் அதிக அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விவசாயிகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாத வகையில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்று நான் உறுதியிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள காவேரிப் பாசன விவசாயிகளிடையே திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தை ஒரு சிலர் மேற்கொண்டதால் ஏற்பட்ட அச்சத்தைப் போக்கிட, தற்போது, கல்லணைக்குக் கீழே மூன்று இடங்களில் மொத்தம் 75 கோடி ரூபாய் செலவில் மூன்று தடுப்பணைகள் கட்டவும்; டி.பழூர் மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கவும்; மற்றும் கொள்ளிடம் ஆற்றில் கல்லணை முதல் கீழணை வரை மணல் எடுக்கப்படுவதை நிறுத்தவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

எனவே, அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வகையான தவறான வழிகாட்டுதலுக்கும் ஆட்பட்டுவிடாமல் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இந்த அவையின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

### விவசாயிகள் நலன்

கடந்த மூன்று ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாகவும், காவேரி நீரில் நமக்குரிய பங்கைக் கர்நாடக அரசு விடுவிக்க மறுத்த காரணத்தாலும் தமிழகத்தில் வேளாண்மை உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. 1.6.2004 முதல் 3.2.2005 வரை கர்நாடக அரசு விடுவித்திருக்க வேண்டிய 196.331 டி.எம்.சி. அடி (TMC ft.) தண்ணீருக்குப் பதிலாக 158.271 டி.எம்.சி. அடி (TMC ft.) தண்ணீரே மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நீரும் காவேரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெரு மழை பெய்து கபினி அணை நிரம்பிய காரணத்தால்தான் நமக்குக் கிடைத்துள்ளது. உரிய நேரத்தில் கர்நாடக அரசு காவேரி நீரை விடுவிக்காத காரணத்தால் குறுவைச் சாகுபடியை நாம் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

காவேரி நதி நீர் பிரச்சனையில் தமிழகத்தின் உரிமையை நிலை நிறுத்தவும், தமிழக விவசாயிகளின் நலனைக் காப்பாற்றுவதிலும் எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் துன்பத்திற்கு உள்ளாகும் போதெல்லாம் அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக எனது அரசு விளங்கி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது



பல்வேறு நிவாரண உதவிகள் எனது அரசால் வழங்கப்பட்டதை நினைவுகூற விரும்புகிறேன்.

நடப்பாண்டில் வடகிழக்குப் பருவமழை நன்றாக பெய்துள்ள காரணத்தால் உணவு தானிய உற்பத்தி 90 லட்சம் டன் ஆக உயரும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்க்கும் நடவடிக்கையாக விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் அதே நேரத்தில், காட்டாமணக்கு, இனிப்புச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இதற்காகத் தொழில் முனைவோர் விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தக்க தொழில் நுட்பங்களையும், இடு பொருட்களையும் வழங்குவதோடு விளை பொருட்களை வாங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புற மேம்பாட்டு வளர்ச்சிக்காகப் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிராமப்புற வேலை வாய்ப்பு வசதிகள் பெருகி உள்ளன. கிராமப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை மேம்பாட்டிற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கு என 15 மாவட்டங்களில் தனித்த வர்த்தகப் பெயர்கள் மாவட்ட வாரியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுடன் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் உடல் நலனிலும், சுற்றுப்புறச் சூழலிலும் இவ்வரசு மிகுந்த அக்கறையும் ஆர்வமும் செலுத்தி வருகிறது. முழுமையான சுகாதார இயக்கம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் முழுமையான சுகாதாரத் திட்டத்தை ஒரு இயக்கமாகச் செயல்படுத்த ஊக்கமளிக்கும் நோக்கத்தோடு, சுத்தமான கிராம இயக்க விருது - Clean Village Campaign Award என்ற பெயரில் நான் ஒரு விருதை ஏற்கெனவே ஏற்படுத்தி சிறந்த ஊராட்சிகளுக்கு இவ்விருதினை வழங்கி வருகிறேன்.

தற்போது மத்திய அரசு தேசிய அளவில் முழுமையான சுகாதாரத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய 38 கிராம ஊராட்சிகளையும் 1 ஊராட்சி ஒன்றியத்தையும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுக்காக Nirmal Gram Puraskar Award–க்காகத் தெரிவு செய்துள்ளது. இவற்றுள், தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 13 ஊராட்சி அமைப்புகள் – 12 கிராம ஊராட்சிகள் – மற்றும் 1 ஊராட்சி ஒன்றியம் – தெரிவு

செய்யப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. 24.2.2005 அன்று புது தில்லியில் நடைபெற உள்ள விழாவில் இவ்விருதுகள் வழங்கப்பட்டு விருது பெற்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் / தலைவிகள் ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உள்துறை**

சட்டம் – ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்படும் மாநிலம்; தொடர்ந்து அமைதி காக்கப்படும் மாநிலம், மக்களிடையே நல்லிணக்கத்தைப் பேணிக் காக்கும் மாநிலம்; இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாகத் திகழும் மாநிலம் – அதுவே நம் தமிழகம்.

"கள்வர் இலாமைப் பொருள் காவலும் இல்லை"

– என்ற இலக்கணம் கம்பர் பெருமான் காட்டுகின்ற அன்றைய அயோத்திக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நாடு உலகத்தின் எந்த மூலையிலும் இருக்க வாய்ப்பில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

குற்றங்கள் நடக்கலாம்; அந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றம் புரிந்தோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் ஆற்றல் உள்ளதாகக் காவல் துறை இருக்க வேண்டும்; குற்றங்கள் குறைய நடவடிக்கை எடுக்கும் ஆற்றல் உள்ளதாக இருக்க வேண்டும். அத்தகையதொரு காவல் துறைதான் தமிழ்நாடு அரசின் காவல் துறை.

குற்ற நிகழ்வுகளில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் விருப்பு வெறுப்பு எதுவுமின்றி, வேண்டியவர் வேண்டாதவர் என்று வேறுபடுத்திப் பார்க்காமல் சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தந்தால்தான் காவல் துறை தன் கடமையைச் சிறப்புற ஆற்றியதாகக் கருத முடியும். தமிழகக் காவல்துறை அவ்வாறு சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை நான் பெருமையுடன் இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக் கொள்ள முடியும்.

இதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் கூற விழைகிறேன். 2.11.2004 அன்று வடபழனி அருகே கொலை முயற்சி நடத்தப்பட்டதில் தாக்கப்பட்டவர் 3.11.2004 அன்று இறந்து விட்டார். இந்தக் கொலை வழக்கை விசாரித்த காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 44 நாட்களில் அதாவது 16.12.2004 அன்று விரைவு நீதிமன்றம் இக்குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட 4 குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்கியுள்ளது. இவ்வாறு, ஒரு கொலைக் குற்றத்தில் 44 நாட்களிலேயே தண்டனை பெற்றுத் தந்தது இந்தியாவிலேயே இது முதல் முறை என்பதை இந்த மாமன்றத்துக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் 2.2.2005 அன்று பேசியபோது, காவல் துறையில் ஒரு புதிய போக்கைப் பார்ப்பதாகவும் குற்றப் பத்திரிகையைக் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்று தாக்கல் செய்வதற்கு முன்னால் கோயிலுக்கு எடுத்துச் சென்று பூஜை செய்கின்ற ஒரு புதிய முறையை பார்ப்பதாகவும், இது யாருடைய உத்தரவின் பேரில் நடைபெறுகிறது என்று கேட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் நாத்திகவாதி அல்ல, அவர் ஒரு கடவுள் பக்தர் என்றே நான் நம்புகிறேன். அதனால்தான் இதனை அவர் தெரிந்து தான் பேசினாரா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. முக்கியமான எதையும் செய்வதற்கு முன்னால் ஆண்டவனின் அருள் வேண்டி வணங்குவது நமது நாட்டின் பாரம்பரியம் என்பதை அவர் மறந்து விட்டாரா ? மாணவ–மாணவிகள் தாங்கள் தேர்வு எழுதப் போவதற்கு முன் தாங்கள் சார்ந்துள்ள சமயத்தின்படி கோவில்களுக்கோ, தேவாலயங்களுக்கோ, மசூதிகள் அல்லது தர்காக்களுக்கோ சென்று வணங்கி வழிபடுகின்றார்கள். அதே போல, வணிகர்கள் புதிய வியாபாரங்களைத் தொடங்கும் போதும், தொழில் அதிபர்கள் புதிய தொழில்கள் தொடங்கும் போதும் தாங்கள் நம்பிப் பின்பற்றும் மதங்களைச் சார்ந்த கடவுள்களை வணங்கித்தான் தொடங்குவது வழக்கம். எடுத்த காரியம் யாவினும் வெற்றி அருள்க என்று ஆதிசக்தியாம் மஹா காளியின் பாதம் பணிந்து மகாகவி பாரதியே பாடல் இயற்றியுள்ளார். ஆக, தாங்கள் மேற்கொள்கின்ற செயல் வெற்றிகரமாக அமைந்திட வேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணுவதும் அதன் அடிப்படையில் ஆண்டவனின் அருள் வேண்டுவதும் இயற்கை இல்லையா ? இந்த வகையில் பார்த்தால் ஒரு காவல் துறை அதிகாரி, தான் மேற்கொண்ட புலனாய்வில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் முன் தான் நம்புகின்ற கடவுளை வணங்கி அந்தப் பணியைத் தொடர்வதில் என்ன தவறு இருக்க முடியும் ?

இது அரசின் உத்தரவா என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி கேட்டார். காவல் துறை வழக்குகளில் சட்டம் தன் கடமையைச் செய்யுமே தவிர, யாரும் யாருக்கும் எந்த உத்தரவும் பிறப்பிப்பதில்லை. மக்கள் தங்களது கடவுள் நம்பிக்கைக்குரிய திருத்தலத்திற்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் எந்த சட்டமும் இல்லை. மசூதிக்கோ, தர்காவுக்கோ ஒரு முஸ்லிம் செல்வதையோ, குருதுவாராவுக்கு ஒரு சீக்கியர் செல்வதையோ, மாதா கோவிலுக்கு ஒரு கிறித்துவர் செல்வதையோ, தவறு என்று எவரும் சொல்வது கிடையாது. அதே போல, ஒரு இந்துவும், தான் விரும்புகின்றபடி கோவிலுக்குச் செல்வது அவரது தனிப்பட்ட உரிமையாகும்.

**மதச்சார்பின்மை என்ற கொள்கையை கொலை செய்ததற்கு ஒப்பான செய்கை இது என்று சட்டமன்ற உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி அவர்கள் கூறினார். மதச்சார்பின்மை என்பதற்கு என்னதான் பொருள் ?**

மதச்சார்பின்மை என்பது மதங்களை மறுப்பதோ அல்லது கடவுளை மறுப்பதோ அல்ல. மதச்சார்பற்றவர் என்றால் அவர் நாத்திகவாதி என்று பொருள் ஆகாது. மதச்சார்பின்மை என்றால் இப்படித்தான் என்று பலர் தவறான கண்ணோட்டத்தில் இருக்கிறார்கள். மதச்சார்பின்மை என்பது அனைத்து மதங்களும் ஒன்றே என்று எண்ணுவதுதானே தவிர, மதங்களை மறுப்பதோ, கடவுள்களை மறுப்பதோ அல்ல. தான் வணங்குகின்ற தெய்வத் திருத்தலத்திற்கு ஒருவர் செல்வதை விவாதத்திற்கு உரிய ஒன்றாக ஆக்கக் கூடாது.

காவல் துறை அதிகாரிகளோ, காவலர்களோ தங்களது தெய்வத் திருத்தலத்திற்குச் செல்லக் கூடாது என்று தடுத்திட சட்டம் எதுவும் கிடையாது. காவலர்களும் நாட்டின் மற்ற குடிமக்களைப் போன்றவர்கள்தான். தாங்கள் நம்புகின்ற தெய்வத் திருத்தலத்திற்குச் செல்ல அவர்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4.2.2005 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் பேசும் போது, தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளன என்று ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறினார். 2004-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன என்பதுதான் உண்மை. கொலைக் குற்றங்கள் 4.6 சதவீதமும், கூட்டுக் கொள்ளை 17 சதவீதமும், கன்னக் களவு மற்றும் திருட்டு 10 சதவீதத்திற்கு மேலும் குறைந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள், 2004 ஆம் ஆண்டில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 2.7 சதவீதம் அதிகரித்துள்ளது என்று ஒரு செய்தி வெளிவந்துள்ளதாகக் கூறியுள்ளார். கற்பழிப்பு, மானபங்கம், ஆட்கடத்தல், வரதட்சணைக் கொலை, கணவராலும், உறவினராலும் துன்புறுத்தப்படுதல், பெண்களைக் கடத்துவது, வரதட்சணைக் கொடுமைச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் ஆகியவை பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்று வரையறுக்கப்படும். இவை இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் ஆகும். உண்மையில் 2004–ஆம் ஆண்டில் இக்குற்றங்களின் எண்ணிக்கை 0.68 சதவீதம் குறைந்துள்ளது.

பாலியல் துன்புறுத்துதல், அதாவது, sexual harassment என்பது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்னும் வகைப்பாட்டின் கீழ் வராமல் தனிப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இழைக்கப்படும் இந்தத் தீங்கு எனது அரசால் இயற்றப்பட்ட '2002 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற திருத்தச் சட்டத்தின்' கீழ் வகைப்படுத்தப்பட்ட தண்டனைக்குரிய குற்றம் ஆகும். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் காவல் நிலையங்களில் பெண் காவலர் பணி அமர்த்துதல் போன்ற பெண்களின் பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்தும் பல நடவடிக்கைகள் என்னுடைய அரசால் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, பாலியல் துன்புறுத்துதல் நடைபெறும் போது அது காவல் நிலையத்தில் புகார் செய்யப்படுவது ஊக்குவிக்கப்படுகிறது. பெண்கள் தைரியமாகச் சென்று புகார் செய்கிறார்கள். மேலும், காவல் துறையினர், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்தில், பேருந்து நிறுத்தங்கள், பெண்கள் கல்லூரிகள், மற்றும் திரை அரங்குகள் அருகில் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டு இக்குற்றங்களில் ஈடுபடுவோர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கின்றனர். இதன் அடிப்படையில் தான் இந்தப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட புகார்கள் 2003 ஆம் ஆண்டில் 881 ஆக இருந்தது 2004 ஆம் ஆண்டில் 1081 ஆக உயர்ந்துள்ளது. எனவே, இந்தப் பிரிவில் புகார்கள் பதிவு செய்யப்படுவது அதிகரித்திருப்பதை ஒரு குறைபாடாகக் கருத இயலாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் கூறியது போல் மகளிருக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கையுடன் இதனையும் சேர்த்துக் கணக்கிட்டு ஒப்பிடுதல் சரியான அணுகுமுறையாக இருக்காது. எனது தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசு, பெண்களைப் பாதுகாப்பதிலும், பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கும் போது சரியான முறையில் ஒப்பீடு செய்யாமல் குற்றம் சுமத்துவது அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**ஆதி திராவிடர் நலன்**

அடித்தளத்து மக்களின் வாழ்வு மேம்பாடு அடைய மகத்தான முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் வண்ணம் அவர்களுக்கான பல்வேறு புதிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் நோக்குடன் 2 இலட்சம் ரூபாய் மதிப்பில், 50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் கடனாகவும் வழங்கி, ஆதி திராவிட மகளிர் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தை 2004–ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நான் அறிமுகப்படுத்தினேன்.

2004 ஜனவரி திங்களில் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் பயன்பெற இதுவரை 11,077 மகளிர் விண்ணப் பித்துள்ளனர். இதுவரை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள 6,970 விண்ணப்பங்களில் 818 விண்ணப்பங்களுக்கு மட்டுமே வங்கிகள் இதுவரை ஒப்புதல் அளித்துள்ளன. இது போன்ற பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வங்கிகள் உடனடியாகக் கடன் வழங்க முன் வர வேண்டும். வங்கிகளது ஒத்துழைப்புடன் நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் 7,000 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்படும்



என்பதைப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன் தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பள்ளிக்கு வருவதைப் பாதியிலே நிறுத்துகின்ற நிலையைத் தவிர்த்து தாங்கள் தொடர்ந்து கல்வி பயில வேண்டும் என்ற ஊக்கத்தை அவர்களுக்கு அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 2001–ஆம் ஆண்டில் நான் கொண்டு வந்தேன். கடந்த 2001 முதல் 2004 வரையிலான மூன்று ஆண்டுகளில் மொத்தம் 1,54,410 மாணவிகளுக்கு 22.52 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 8.8 கோடி ரூபாய் செலவில் 49,194 சைக்கிள்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

சிறந்த கல்வி அறிவை அளிப்பதன் மூலம் ஆதி திராவிட, பழங்குடி மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தர மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதால் கல்வி வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளிக்கிறது. எனவே, மாணவ / மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகள், அவர்கள் கல்வி கற்க ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புற அமைய வேண்டும் என்பதில் நான் தனிக் கவனம் செலுத்தி வருகிறேன்.

ஆதிதிராவிட மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகளின் மொத்த எண்ணிக்கை 1,076 ஆகும். 2001–ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இதில் தனிக் கவனம் செலுத்தி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த 574 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் அமைய வேண்டும் என முடிவெடுத்து கடந்த நான்கு ஆண்டுகளில் 155.30 கோடி ரூபாய்.செலவில் 493 விடுதிக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொண்டேன். இதில் 264 விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டின் முடிவில் சொந்தக் கட்டடங்கள் அற்ற ஆதி திராவிட மாணவ மாணவிகள் விடுதிகளே இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்தவர்களின் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் தங்களது பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கமளித்து அவர்கள் சமுதாயத்தில் சுதந்திரமாகவும் தன்னம்பிக்கையுடனும் துணிவோடும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தரும் வகையில், மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்பு படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும் இலவச சைக்கிள்களை வழங்கும் திட்டத்தை நான் சமீபத்தில் தொடங்கி வைத்தேன். 2004–2005–ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 2,254 மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலுகின்ற 2,49,750 மாணவிகளுக்கு 44.76 கோடி ரூபாய் செலவில் இலவச சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலுகின்ற பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவ–மாணவிகள் தங்கும் வசதிக்காக மொத்தம் 972 விடுதிகள் இயங்குகின்றன. கடந்த 2001–ஆம் ஆண்டு நான் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போது இவற்றில் 202 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. மீதமுள்ள 770 விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் தான் இயங்கி வந்தன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அத்தனை விடுதிகளுக்கும் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட நான் ஆணையிட்டேன். இதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 99.99 கோடி ரூபாய் செலவில் 314 விடுதிகள் கட்ட

ஆணையிட்டு, 190 விடுதிகளின் கட்டடப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 124 விடுதிகளின் கட்டுமானப் பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் தற்போது ஆணையிட்டு உள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடும், உள்ள நிறைவோடும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 100 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் இந்தப் பணி 2005–2006–ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன்**

ஒரு மாநிலம் மனித வளத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் எனில், அங்குள்ள மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

'அனைவருக்கும் நல்வாழ்வு' என்ற எங்கள் இலட்சியத்தை இன்னும் முனைப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்றால், அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் மருத்துவர் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டு இருக்க வேண்டும்.

எனவே தான், இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது காலியாக உள்ள 2,322 மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நான் ஆணையிட்டு உள்ளேன். இப்பணியிடங்கள் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நிரப்பப்பட்டுவிடும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் ஏதோ சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த திமுக மட்டும்தான் மிகுந்த ஆர்வம் கொண்டு உள்ளது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார். நான் ஏற்கெனவே இத்திட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்று விரிவாகக் கூறியுள்ளேன். இத்திட்டத்திற்கு வித்திட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். நானும் ராஜ்ய சபாவில் உறுப்பினராக இருக்கும்போது இதனைச் செயல்படுத்த வலியுறுத்தி இருக்கிறேன். தற்போது இத்திட்டம் செயல்படுத்த வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய சுற்றுப்புறச் சூழல் அனுமதி பெற வேண்டும். இது சம்பந்தமான பொது மக்களின் கருத்துக்களை நேரடியாகக் கேட்டறியும் கூட்டங்கள் முழுவதுமாக நடைபெற்று முடிந்துவிட்டன. தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து வரக்கூடிய அறிக்கையின் அடிப்படையில் மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதனைப் பரிசீலிக்க வேண்டும். இதுதான் தற்போதைய நிலை.

தமிழக மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் எங்களது பணி தொடர்கிறது. மக்களின் கனவுகள் எங்களால் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. திட்டங்கள் உடனடியாகச் செயல்வடிவம் பெற்று வருவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். அதைவிட முக்கியமாகச் செயலாக்கம் பெற்ற திட்டங்களின் பயன்கள் உரியவர்களைச் சென்று சேர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இலக்குகளை நிர்மாணிக்கிறோம்! அந்த இலக்குகளை அடைவதற்குக் கணக்கியல் நுட்பத்தோடு, அதாவது, Mathematical precision-ஒடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

எதையும் திறம்படச் செய்வதே எங்களது இலட்சியம்! அதை விரைவில் செய்ய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்!

மனம் கலங்காது, ஆராய்ந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல், காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும் – இது தெய்வத் திருமறை வழங்கிய திருவள்ளுவப் பெருமானின் வாசகம்:

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்

இந்தக் குறளின் பொருளே எனது செயல்பாட்டின் கோட்பாடு.

'தூக்கங் கடிந்து செயல்' என்பதற்கு 'காலம் தாழ்த்தாமல்' என்பது பொருள். அந்த வரியின் வார்த்தைப் பொருளில் in the literal sense of the term எடுத்துக் கொண்டால் தூக்கத்தை நீத்துச் செயல்பட வேண்டும் என்று சொல்லப்படுவதாக எடுத்துக் கொள்ளலாம். அப்படித்தான் நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் நான் கண்விழித்துச் செயல்படுகிறேன். அதிலே மகிழ்ச்சியும் அடைகிறேன்.

காரணம், ஒவ்வொரு நாளும் தமிழகம் முன்னேற வேண்டும்; ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை கிடைக்க வேண்டும் என்பதே எனது இதயத் துடிப்பாக என்றும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

# தோட்டக்கலை வளர்ச்சியில் சிவகங்கை மாவட்டம்



சிவகங்கை மாவட்டத்தில் 2.20 இலட்சம் எக்டேர் பரப்பளவில் 16,500 எக்டேரில் மட்டும் தோட்டப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் மலர்ப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

### முந்திரி அபிவிருத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் முந்திரிப் பயிர் பரப்பு விரிவாக்கத்திற்காக ரூ.14,40,000 பெறப்பட்டு 450 எக்டேர் பரப்பளவில் ஒரு எக்டேருக்கு ரூ.3,200 மானியத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மத்திய அரசு திட்டங்களின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள முன்னோடி விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சிக்கு வெளிமாநில மற்றும் மாநிலத்தில் உள்ள பயிற்சி நிலையங்களிலும், அழைத்துச் செல்லப்பட்டு நவீன சாகுபடித் திட்டங்கள் குறித்துப் பயிற்சி அளித்து திட்டங்கள் பெறப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### தேவகோட்டை அரசு தோட்டக்கலைப் பண்ணை

தேவகோட்டை அரசு தோட்டக்கலைப் பண்ணை 1985ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 200 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆண்டுதோறும் 4.30 இலட்சம் ஒட்டுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் செடிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் முக்கியமாக முந்திரி ஒட்டுச் செடிகள் 2,75,000 எண்கள், மா ஒட்டுச் செடிகள் 40,000 எண்கள், சப்போட்டா ஒட்டு 25,000 எண்களும், நெல்லி ஒட்டு 20,000 எண்கள், கொய்யா, பதியன்கள் 30,000 எண்கள், புளி ஒட்டு 10,000 எண்கள் மற்றும் பொருளாதார அழகுச் செடிகள் 30,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 2002–03 ஆம் ஆண்டு மாநிலத்திலேயே சிறந்த முதல் பண்ணையாகத் தேர்வு செய்யப்பட்டு அதற்காகக் கேடயமும், சான்றிதழும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப் பட்டுள்ளது. இப்பண்ணையில் தினமும் 150 தினக்கூலி பணியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

### நேமம் அரசு தோட்டக்கலைப் பண்ணை

நேமம் அரசு தோட்டக்கலைப் பண்ணை 1982 – 83ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையில் ஆண்டுதோறும் 1,80,000 செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டு ஆண்டு வருமானமாக ரூ.23 இலட்சம் பெறப்பட்டு நிகர லாபமாக ரூ. 3 இலட்சம் வரை ஈட்டப்படுகிறது. முக்கியமாக மா ஒட்டு 20,000 எண்களும், சப்போட்டா ஒட்டு 15,000 எண்களும், பலா ஒட்டு 3,000 எண்களும், புளி ஒட்டு 2,000 எண்களும், கொய்யா பதியன்கள் 15,000 எண்களும், முந்திரி ஒட்டு 25,000 எண்களும், நெல்லி ஒட்டு 20,000 எண்கள் மற்றும் இதரப் பழ, பொருளாதார அழகுச் செடிகள் 80,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள 50 தினக்கூலிப் பணியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது



**அரசின் மூலம் நடைபெறும் திட்டங்கள்**

அரசுத் திட்டத்தின் கீழ் பழச் செடிகளுக்காக ரூ.6,26,000மும் காய்கறி விதைக்காக ரூ.6,47,900மும் செலவிடப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பழப்பயிர் சாகுபடியில் 95 எக்டேர் பரப்பளவு அதிகரிக்கவும் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு காய்கறி பரப்பளவு 679 எக்டேர் பரப்பில் 4.95 மதிப்பில் அதிகரிக்கவும் நடப்பு ஆண்டு திட்டம் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நடப்பு மாதம் பெய்த மழையினைப் பயன்படுத்தி 64 சதவிகிதம் வரை சாதனை அடையப்பட்டுள்ளது.

பழப்பயிர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 12,15,500 மதிப்பில் 461 எக்டேர் பரப்பில் 25 சதவிகிதம் மானியத்தில் மா, எலுமிச்சை மற்றும் கொய்யா பழப் பயிர்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

சுவை தானியப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் மானியத்தில் விவசாயப் பயிர் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம் 100 எக்டேர் பரப்பளவில் ரூ.50,000 மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வணிக மலர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாதிரித் திடல் அமைத்திட 8 விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியமாக ரூ.65,000 வழங்கப் பட்டுள்ளது.

மூலிகை மற்றும் நறுமணப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாதிரித் திடல் அமைத்திட 53 விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியமாக ரூ.1,30,000 வழங்கப்பட்டுள்ளது.

கிழங்குப் பயிர் உள்ளடக்கிய காய்கறிப் பயிர் அபிவிருத்தித் திட்டமானது ரூ.4,80,000 மதிப்பில் 55 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 25 சதவிகிதம் மானியமாகும்.

புதுமைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்வி நிறுவனங்களில் ரூ.10,000 மானியத்தில் தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

காளான் வளர்ப்பில் 50 நபர்களுக்கு ரூ.25,000 செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

– **ஆ. கோபாலன்,**
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சிவகங்கை.*

**குறிஞ்சி மலர்**

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரில் 200 வகைகள் உள்ளன. தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மலரும் குறிஞ்சி மலர் நீலம் அல்லது வெண்மை நிறத்தில் இருக்கும். சிறுசெடியாகவோ, குறுமரமாகவோ இது வளரும்.

# 13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட - ஊராட்சி - வார்டு அளவிலும் சுனாமிப் பேரலை நிவாரணக் குழுக்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
24.1.2005

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை, 26.12.2004 அன்று சுனாமி பேரலைகள் பெரும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 8,000 பேர் உயிரிழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார்கள். இதுபற்றிய விவரம் கிடைத்தவுடனேயே நான் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாகப் பார்வையிட்டு தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ஆணையிட்டேன்.



சுனாமி நிவாரணப் பணிகளில் முதற்கட்டப் பணிகளான தேடுதல், மீட்பு, சடலங்களைப் புதைத்தல் மற்றும் எரியூட்டுதல், தப்பிப் பிழைத்தவர்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்து உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள் வழங்குதல் ஆகியப் பணிகள் அனைத்தும் 30.12.2004–க்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

இதனையடுத்து மீட்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் இரண்டாம் கட்டப் பணியை 30.12.2004 அன்று நான் தொடங்கி வைத்தேன். இந்த உதவிகள் தற்போது வழங்கப்பட்டு விட்டன.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் மூன்றாம் கட்டப் பணிகளை முழு வீச்சுடன் மேற்கொள்ள பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுக்குத் தகுந்த ஆணைகளையும், அறிவுரைகளையும் வழங்கி உள்ளேன். இதன்படி, பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாகத் தற்காலிகக் குடியிருப்புகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணி முடிய முடிய பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அந்தத் தற்காலிக வீடுகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து, சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முழுமையான மறுவாழ்வு அளிக்கும் வகையில் நிரந்த வீடுகள் கட்டவும், தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்கவும், தக்க நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முனைப்புடன்

மேற்கொண்டுள்ளது. அரசு சாராத அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச மறுவாழ்வு அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் துணையுடனும் மறுவாழ்வுப் பணிகளைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சுனாமி தாக்குதலையடுத்து, மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் சுணக்கமின்றி, சீராக நடைபெறுவதை நான் உறுதி செய்துள்ளேன். அமைச்சர்களுடனும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனும் தொடர்ந்து ஆலோசித்து தேவையான ஆணைகளை அவ்வப்போது பிறப்பித்து வருகிறேன். தமிழக அரசு மேற்கொண்டு வரும் சுனாமி நிவாரணப் பணிகள் எவ்வித குறைகளும் இன்றி செவ்வனே நடைபெற்று வருகின்றன. நிவாரணம் வழங்கும் பணிகளில் எந்த ஒரு முறைகேட்டுக்கும் இடம் கொடுக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான உதவி கிடைக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் நடைபெறுகின்ற நிவாரணப் பணிகளை அனைத்துத் தரப்பினரும் பாராட்டி வருகின்றனர். சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய அரசின் உயர் மட்ட அலுவலர் குழு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகள், தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரும் தமிழக அரசு செயல்படுத்தி வரும் நிவாரணப் பணிகளை மனதாரப் பாராட்டி உள்ளனர்.

தமிழகம் இதுவரை சந்தித்திராத சுனாமி பேரலைகளால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீண்ட கால மறுவாழ்வு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து 7.1.2005 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி அவர்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டு அறிந்தேன். இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவித்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் பேரிடர் மேலாண்மை ஆணையம் (State Disaster Management Authority) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையத்தில் மாநில நிவாரண ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் செயலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். சுனாமி நிவாரணப் பணிகள் மேற்கொள்வதைத் தீவிரமாகக் கண்காணிக்கும் பொறுப்பு இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்திட மிகுந்த முனைப்போடும், உத்வேகத்தோடும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகின்ற நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுத்திட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் தகுந்த ஆலோசனைகளை வழங்கிட, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஏற்படுத்தியதைப் போன்ற ஆலோசனைக் குழுக்கள் அமைத்திட நான் முடிவெடுத்துள்ளேன். இக்குழுக்கள் மாவட்ட அளவிலும், ஊராட்சி / வார்டு அளவிலும் அமைக்கப்படும்.

இதன்படி, சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் மாவட்ட அளவிலான சுனாமி பேரலை நிவாரணக் குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழுக்களில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராகவும், அந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர், சம்பந்தபட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை அதிகாரிகள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிந்தெடுக்கப்படும் இரண்டு அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு சுனாமி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, தகுந்த ஆலோசனைகளை வழங்கும்.

இதே போல், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும்/ வார்டிலும், ஊராட்சி / வார்டு அளவிலான சுனாமி பேரலை நிவாரணக் குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் / வார்டு உறுப்பினர் இருப்பார். அந்தந்தப் பகுதியைச் சார்ந்த மீனவர் பஞ்சாயத்து சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிந்தெடுக்கப்படும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஊராட்சி / வார்டு அளவிலான இந்தக் குழுக்கள் தேவைக்கேற்ப அவ்வப்போது கூடி பணிகளை ஆய்வு செய்யும்.

* * *


# கணினிமயமாகும் தஞ்சை மண்டல நகராட்சி நிருவாகம்

திரு. டி.ஜே. தினகரன்,
நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்,
தஞ்சாவூர்.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நகராட்சிகள் 7 மண்டலங்களையும் மற்றும் 5 மாநகராட்சிகளையும் உள்ளடக்கியது.

ஒவ்வொரு மண்டலத்திலும் 3 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கி அதிகபட்சம் 20 நகராட்சிகள் அடங்கியுள்ளது.

நகராட்சி நிருவாகத்தையும் பொதுமக்கள் நகர்ப்புற சேவையும் 1999ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவியின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II மூலம் கணினிமயமாக்குதல் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களை உள்ளடக்கிய தஞ்சாவூர் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநரகம் மாநிலத்திற்கே முன்னோடியாக நகராட்சிகளில் கணினிச் சேவையை அறிமுகப்படுத்தி- உலக வங்கி மற்றும் அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.



தஞ்சாவூர் மண்டலத்தில் 14 நகராட்சிகளும், தற்போது புதிதாகச் சேர்க்கப்பட்ட 5 மூன்றாம் நிலை நகராட்சிகளும் சேர்த்து 19 நகராட்சிகளைக் கொண்டதாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை மூலமாக ரூ.37.38 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு, தஞ்சாவூர் மண்டலத்திலுள்ள நகராட்சிகளின் நிருவாகம் கணினி மயமாக்கப்பட்டு கீழ்காணும் சேவைகள் பொதுமக்களுக்கு கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம், கணினி மூலம் நகராட்சி வசூல் மையங்களிலும் தேசிய மயமாக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மூலமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

★ தொழில் வரி, வரியில்லா இனம், உணவு கலப்படத் தடை உரிமம் மற்றும் அபாயம் மற்றும் அருவருக்கத்தக்க பொருட்கள் விற்பனை உரிமம் ஆகியவை தற்போது கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

★ புதிய கணக்கு முறை

★ திடக்கழிவு மேலாண்மை

★ கட்டட அனுமதி

★ அசையும் மற்றும் அசையாப் பொருட்கள்

★ இதர வருவாய்கள்

மேலும் பொதுமக்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்யத் தனியே இணையதளங்கள் உருவாக்கப் பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்புக்கென தனியே இணையதளம் ஏற்படுத்தியதும் தஞ்சாவூர் மண்டலமே.

அரசால், தற்போது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் வழங்கப்பட்ட மென்பொருட்களுடன் கீழ்காணும் மென்பொருட்கள் இம்மண்டலத்திலேயே உருவாக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் கணக்கெடுப்பு

★ இதர வருவாய்கள் வசூல்

★ தன் பதிவேடு

★ வழக்குகள்

★ சம்பளப் பட்டியல்

நகராட்சிகளில் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் பொறியாளர், நகரமைப்பு அலுவலர்கள், நகர்நல அலுவலர் மற்றும் மேலாளருக்கு கணினி வழங்கப்பட்டு அவை நகராட்சி ஆணையர் மற்றும் நகர் மன்றத் தலைவர்களுடன் உள் இணைப்பு மூலம் (LAN) இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக தஞ்சாவூர் மண்டலத்திலுள்ள நகராட்சிகள் அனைத்தும் தொலைதூர இணைப்பு மூலம் (Wide Area Network) மண்டல இயக்கத்தோடு ரூ.27.38 இலட்சத்தில் 64 KBPs இணையதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இப்பணி BSNL நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிதியுதவி செய்த உலக வங்கியின் பிரதிநிதி திரு. முகுந்தன் 7.11.2004 அன்று ஆய்வு செய்தார்.

இந்த மண்டல இணைப்பின் மூலம் (Regional Connectivity) அனைத்து நகராட்சிகளின் பணிகள் மற்றும் வரிவசூல் குறித்து மண்டல அலுவலகத்திலிருந்து உடனுக்குடன் ஆய்வு செய்ய இயலும்.

நகராட்சி அலுவலர்களின் பணிகள் இங்கிருந்தவாறு கண்காணித்து அறிவுரைகள் வழங்க இயலும். மேலும், ஆய்வுக்கூட்டங்கள் பெருமளவில் குறைந்திட வழி செய்கிறது.

நகராட்சி அலுவலர்களும் அங்கிருந்தபடியே அறிவுரைகள் பெற்றுச் செயல்பட ஏதுவாகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை செலவிடப்பட்ட மனித ஆற்றல் மற்றும் எரிபொருள் செலவினம் மீதமாகும்.

இத்திட்டத்தை மேலும் செம்மையாக்க நகராட்சி அலுவலர்களுடன் மண்டல இயக்குநர் நேரிடையே வீடியோ மூலம் கலந்தாய்வு நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கணினி மயமாக்குதலின் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக வீடியோ கலந்தாய்வு (Video Conferencing) உயரிய டிஜிட்டல் தொழில் நுட்ப கேமரா மற்றும் தொலைக்காட்சி ஒளி மற்றும் ஒலியுடன் மூலம் ISDN தொலைபேசி இணைப்பு அனைத்து வினாடிக்கு 384 KBPs வீதம் BSNL நிறுவனம் மூலம் ரூ.30.26 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. ❖

## கூடைப்பந்து

டாக்டர் நய் ஸ்மித் என்னும் அமெரிக்கர், 1891இல் கூடைப்பந்து ஆட்டத்தை அமைத்தார். முதலில் இரண்டு கூடைகளைச் சுவரில் அடித்து அவற்றை 'கோல்' (Goal) களாகப் பயன்படுத்தினர். தொடக்கத்தில் ஒரு குழுவில் 40 முதல் 50 பேர் வரை விளையாடினார்கள். 1892ஆம் ஆண்டு இவ்விளையாட்டுக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

கூடைப்பந்தாட்டக் களம் 25 மீட்டர் நீளமும், 14 மீட்டர் அகலமும் கொண்டதாக இருக்கும். இதன் எதிரெதிர்ப் பக்கங்களில் கம்பங்கள் நட்டு அதில் சுமார் 2 மீட்டர் நீளம், 1¼ மீட்டர் அகலமுடைய பலகைகளைப் பொருத்தியிருப்பார்கள். இப்பலகைகளின் நடுவில் ஒரு வளையம் இருக்கும். இவ்வளையம் தரையிலிருந்து மூன்று மீட்டர் உயரத்தில் இருக்கும். இந்த வளையத்திற்குள் பந்து போகும்படி பந்தைப் போடுவது 'கோல்' ஆகும்.



கூடைப்பந்தாட்டத்தை விளையாட இரு குழுக்கள் வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் 5 பேர் இருப்பர். ஒவ்வொரு குழுவினரும் எதிர்க் குழுவினரின் கூடையில் பந்து போடுவதுடன், தங்கள் கூடையில் எதிர் குழுவினர் பந்து போடாமலும் தடுக்க வேண்டும். பந்து காலில் படக்கூடாது. அதிகமான கோல்கள் போட்டவரே வென்றவராவர். நம் நாட்டிலும் இந்த ஆட்டம் எல்லா ஊர்களிலும் ஆடப்படுகிறது. இன்று ஒலிம்பிக் ஆட்டங்களில் கூடைப்பந்து முக்கிய இடம் பெற்றுள்ளது.

❖ ❖ ❖

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
### செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணையின்படி

# சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்கம்

மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு, மக்களிடையே நல்லிணக்கம் பேணிக் காக்கப்பட்டு, அமைதிப் பூங்காவாகத் தமிழகம் திகழ்கிறது. குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றம் புரிந்தோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் ஆற்றல் உள்ளதாக, குற்றங்கள் குறைய நடவடிக்கை எடுக்கும் திறன் படைத்ததாக, தமிழகக் காவல்துறை விளங்குகிறது.

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில், அன்றாடம் பெருகி வரும் வாகனங்கள், தினம் தினம் வந்து செல்லும் ஏராளமான மக்கள், கணினி யுக விஞ்ஞான வளர்ச்சி, உருவாகி வரும் பலவகைத் தொழிலகங்கள், தலைமை அலுவலகங்கள், பெருகி வரும் வியாபார நிறுவனங்கள் முதலான பல்வேறு காரணங்களால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் சென்னைப் பெருநகர் காவல்துறை மிகவும் திறமுடன் சமாளித்து வருகிறது.

சென்னை மாநகரை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளில் விமான நிலையம் மற்றும் பெரும் தொழில் வளாகங்கள் முதலியன அமைந்துள்ளன. மேலும், புதிய புதிய தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் முதலானவையும் தொடர்ந்து உருவாகி வருகின்றன. அது மட்டுமன்றி, நகர மக்கள் தங்களது வாழ்விடமாக சென்னைப் புறநகர்ப் பகுதிகளை நாடி, வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியேறுவதால் அப்பகுதிகளில் மக்கள் தொகை மிக விரைந்து பெருகி வருகிறது. எனவே, சென்னையை ஒட்டியுள்ள பகுதிகள் புறநகர் என்ற தன்மையிலிருந்து மாறி, மாநகரின் அங்கமாக உருவெடுத்து வருகின்றன. இந்த வளர்ச்சியோடு இணைந்து காவல்துறை சமாளிக்க வேண்டிய சவால்களும், பிரச்சினைகளும் வளர்ந்து வருகின்றன. இதை எல்லாம் கருத்தில் கொண்டு தான், கடந்த ஆண்டு, அதாவது 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சென்னையை ஒட்டியுள்ள செங்கை (கிழக்கு) காவல் மாவட்டத்தைச் சார்ந்த 31 காவல் நிலையங்களைத் தரம் உயர்த்தவும், உரிய அதிகாரிகள், காவலர் மற்றும் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கவும், தேவையான தளவாடங்கள் வாங்கவும் 22 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நான் ஆணையிட்டேன்.



மிக விரைவாக வளர்ந்து வரும் சென்னைப் புறநகர்ப் பகுதிகள் சென்னை மாநகரின் அங்கமாக வளர்ந்து உள்ளதால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் திறம்பட சமாளித்து, மக்களுக்குப் பாதுகாப்பையும், அமைதியையும் வழங்கிட, சென்னைப் பெருநகர் காவல் துறையின் அதிகார எல்லைக்குள், செங்கை (கிழக்கு) காவல் மாவட்டம் முழுமையும் உள்ளடக்கி விரிவு படுத்தவும், இப்பகுதிகளில் மொத்தம் உள்ள 41 காவல் நிலையங்களும் சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிடவும் நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இதனை அடுத்து, புதிதாக உருவாகும் சென்னைப் பெருநகர் காவல்

ஆணையரகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 155 காவல் நிலையங்கள் இயங்கும். இவற்றில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 34 ஆகும். சென்னையின் வடக்கே எண்ணூர் வரையிலும், தெற்கே வண்டலூர் வரையிலும், கிழக்குக் கடற்கரைச் சாலையில் முட்டுக்காடு வரையிலும், மேற்கே திருநின்றவூர் வரையிலும் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையரக அதிகார எல்லை விரிவுபடுத்தப்படும். அதன் காரணமாக, மாதவரம், அம்பத்தூர், புனித தோமையார் மலை ஆகிய இடங்களை தலைமை இடங்களாகக் கொண்ட மூன்று சட்டம் – ஒழுங்கு துணை ஆணையரக மாவட்டங்களும் ஏற்படுத்தப்படும். மத்திய சென்னை, அம்பத்தூர், ஆவடி உள்ளடங்கிய ஒரு துணை ஆணையரக போக்குவரத்து மாவட்டமும், தாம்பரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல் உட்கோட்டமும் ஏற்படுத்தப்படும்.

புதிய சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகத்தின் ஒட்டுமொத்தக் கண்காணிப்பு, செயலாக்கம் மற்றும் மேற்பார்வை ஆகிய பணிகளைச் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையாளர் கவனித்துக் கொள்வார். இவருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் இருந்து செயல்படும் வகையில் ஒரு கூடுதல் சென்னைப் பெருநகர் காவல்துறை ஆணையாளர் இருப்பார். சட்டம் – ஒழுங்கைப் பராமரிக்க வடக்கு இணை ஆணையர், மத்திய இணை ஆணையர் மற்றும் தெற்கு இணை ஆணையர் என மூன்று காவல் இணை ஆணையர்கள் இருப்பார்கள். வடக்கு இணை ஆணையரின் கீழ், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, புளியந்தோப்பு, மாதவரம் ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் – மத்திய இணை ஆணையரின் கீழ் திருவல்லிக்கேணி, கீழ்ப்பாக்கம், அண்ணாநகர், அம்பத்தூர் ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் – தெற்கு இணை ஆணையரின் கீழ் மயிலாப்பூர், தியாகராயநகர், அடையார், புனித தோமையார் மலை ஆகிய துணை ஆணையரக காவல் மாவட்டங்களும் இயங்கும். சாலைகளில் இயங்கும் வாகனங்களை முறைப்படுத்தி, சென்னைப் பெருநகரில் சீரான சாலைப் போக்குவரத்து வசதியை வழங்கிட போக்குவரத்துக் காவல் இணை ஆணையர் ஒருவர் இருப்பார். இவரின் கீழ் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு என மூன்று போக்குவரத்து காவல் துணை ஆணையர்கள் செயல்படுவார்கள். இதுவன்றி, தலைமையகம், நுண்ணறிவு, தலைமைச் செயலகப் பாதுகாப்பு, மத்திய குற்றப் பிரிவு, ஆயுதப் படை மற்றும் காவல் துறை வாகனங்கள் ஆகியவற்றைத் தனித் தனியே கவனிக்க 6 காவல் துணை ஆணையர்கள் இருப்பார்கள்.

இதற்கென, காவல் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் மாநகர காவல் ஆணையாளர் பதவி புதிதாக ஏற்படுத்தவும், மாநகர காவல் ஆணையரகத்தில் ஒரு போக்குவரத்துத் துணை ஆணையர் பதவியும், காவல் துறைக் கண்காணிப்பாளர் நிலையில் மூன்று துணை ஆணையாளர் பதவிகளும், துணைக் காவல் கண்காணிப்பாளர் நிலையில் ஒரு உதவி ஆணையாளர் பதவியும் கூடுதலாக உருவாக்க நான் உத்தர விட்டுள்ளேன். மேலும், புதிய ஆணையரக மாவட்டங்களுக்குத் தேவையான வாகனங்கள், அறைக்கலன்கள், கணினிகள் மற்றும் இதரத் தளவாடங்கள் வாங்கவும் 25.89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

எனது ஆணையின் பேரில் தற்போது புதிதாக உருவாகும் சென்னைப் பெருநகர் காவல் துறை ஆணையரகத்தில் மொத்தம் 4 காவல் மண்டலங்களும், 16 காவல் மாவட்டங்களும், 36 காவல் உட்கோட்டங்களும், 155 காவல் நிலையங்களும் அமைந்திருக்கும். இவ்வாறு விரிவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகம், இந்தியாவில் உள்ள மிகப் பெரும் மாநகர் காவல் ஆணையரகங்களில் ஒன்றாக அமையும். இதன் மூலம் புறநகர்ப் பகுதிகளுக்கு மாநகர காவல் முறையின் (City Pattern of Policing) பயன்கள் கிடைக்கும். இந்த விரிவாக்கத் திட்டம், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றவாளிகளை ஒடுக்குவதற்கும், போக்குவரத்து நெரிசலை சீரமைப்பதற்கும், ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் எடுக்க வழி வகுக்கும்.

உலக நாடுகளுக்கு, இந்தியாவின் கிழக்கு வாயில் ஆக சென்னை மாநகர் அமைய வேண்டும் என்பது எனது தொலைநோக்குத் திட்டம் ஆகும். இந்த நோக்கத்தை எய்தும் வகையில்தான் சென்னைப் பெருநகரில் ஒட்டுமொத்த வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறேன். மாநகரில் சட்டம் – ஒழுங்குப் பிரச்சினை எதுவுமின்றி அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை அமைவதே அனைத்து வளர்ச்சிப் பணிகளின் வெற்றிக்கு ஆதாரம் ஆகும். சென்னை மாநகர காவல் துறை ஆணையரக எல்லையை விரிவுபடுத்தி வலிவூட்ட, நான் எடுத்துள்ள இந்த நடவடிக்கை இதற்கு உறுதுணையாக அமையும்.

**– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 17.2.2005**




# சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்


**திரு. ஜி. சந்தானம்,** இ.ஆ.ப.,
உறுப்பினர் – செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை


தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு, நீண்டகாலத் திட்டம் தயாரித்தல், திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பெரிய மதிப்பீடுள்ள திட்டங்களைச் செயலாக்குதல், பெருநகர்ப் பகுதியில் ஒருங்கிணைந்த வளர்ச்சிகளை உறுதி செய்ய நெறிப்படுத்துதல் ஆகியப் பணிகளை மேற்கொள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1972–இல் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரகத் திட்டமிடல் சட்டம் 1971–இல் திருத்தம் செய்யப்பட்டு, 1975–ஆம் ஆண்டு இந்நிறுவனம் சட்டப்பூர்வமான அமைப்பாக உருவாக்கப்பட்டது.

அனைத்து நவீனகால வசதிகளைக் கொண்ட, ஆசியாவிலே பெரிய சந்தை வளாகம் அழுகும் பொருட்களுக்கும், விமான நிலையத்திற்கு ஈடான, மிகப் பெரிய பேருந்து முனையம் மற்றும் இந்தியாவிலேயே தனியார் ஒப்பந்த பேருந்துகளுக்கென அரசு உருவாக்கிய தனியார் ஒப்பந்த பேருந்து முனையம், ஆகிய திட்டங்கள் இக்குழுமத்தின் சிறப்பான செயல் திட்டங்களில் சிலவாகும். நகரின் விளிம்பைத் தொட்டுச் செல்லும், உள்வட்டச் சாலை, உருவாக இருக்கும் வெளிவட்டச் சாலை, தேசிய நெடுஞ்சாலைகளை விலக்கிச் செல்லும் இணைப்புச் சாலை, ஆகிய போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள், சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடன் இணைந்து திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளை ஒருங்கிணைப்பு செய்யும் இக்குழுமத்தின் மற்றொரு முக்கியப் பணியின், கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களாகும். தவிர மறைமலை துணை நகர், மணலி புதுநகர், ஆகிய நகர்களின் செயலாக்கம், இக்குழுமம் தயாரித்த முதன்மைத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டத் திட்டங்களாகும்.

சென்னை மாநகராட்சி, 15 நகராட்சிகள், 21 சிறப்பு நிலை ஊராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கும் 200–க்கும் மேற்பட்ட கிராம உள்ளாட்சிகளை உள்ளடக்கிய 1,170 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி சென்னைப் பெருநகராகும். வடக்கே மீஞ்சூர், தெற்கே வண்டலூர், மேற்கே பாக்கம் மற்றும் கிழக்கே உத்தண்டி கிராமம் வரையிலுள்ள வங்காள விரிகுடா கடற்கரை எல்லை இதன் எல்லைகளாகும். இப்பெருநகர்ப் பகுதிக்கு தொலை நோக்குப் பார்வையுடன், நகர மற்றும் நகர்ப்புற வளர்ச்சிகளால் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு முதன்மைத்



திட்டம் தயார் செய்வது இக்குழுமத்தின் அடிப்படையான முதன்மைப் பணியாகும்.

பெருநகருக்கான முதலாம் முதன்மைத் திட்டம் 1975–இல் அரசினால் ஒப்புதல் பெறப்பட்டது. நகரின் மையப்பகுதியில் செரிந்துள்ள அடர்த்தியான வர்த்தகச் செயல்பாடுகளை, நகரின் புறப்பகுதிக்குக் கொண்டு சென்று, திட்டமிட்ட நவீன அங்காடி வளாகங்களை உருவாக்கி அதில் வணிகச் செயல்பாடுகளை உறுதி செய்வது இத் திட்டத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். இதன் அடிப்படையிலேயே, அங்காடி வளாகங்களுக்கு அருகில் உள் வட்டச்சாலையை ஒட்டி, ஆசியாவிலேயே பெரிய பேருந்து முனையம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. உள்வட்டச்சாலை, வெளிவட்டச்சாலை, தேசிய நெடுஞ்சாலைகளை விலக்கிச் செல்லும் இணைப்புச் சாலை முதலியன முதலாம் முதன்மைத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களாகும்.

வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் முதன்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். சென்னைப் பெருநகரின் பொருளாதார வளர்ச்சிக்கு தகவல் தொழில் நுட்பத்துறையின் தற்போதைய தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, அரசு ஆணையின்படி தகவல் தொழில் நுட்பக் கட்டடங்கள் (ஐடி பில்டிங்) மற்றும் உயிரி தொழில்நுட்பக் கட்டடங்கள் (பையோடெக் பில்டிங்) போன்றவற்றிற்கு வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் சில அம்சங்களைத் தளர்த்தி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திட்ட அனுமதியை இக்குழுமம் வழங்கி வருகின்றது.

## பூகோள தகவல் அமைப்புத் திட்டம்

இதனைத் தொடர்ந்து, 2011–இல் பெருநகரின் தேவைகளை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இரண்டாம் முதன்மைத் திட்டத்தின் வரைவு அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு தற்சமயம் அதனை நடப்பு நிலவரத்திற்கு ஏற்றவகையில் புதுப்பித்துச் சமர்ப்பிக்க, அரசு பணித்துள்ளது. இப்பணி 2005 அரையாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு அரசிற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நகர்ப்புற நிலங்களைக் குடியிருப்புப் பணியின் உச்சநிலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த விழையும் புதிய நில உபயோகக் கொள்கை இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். பூகோள தகவல் அமைப்புத் திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகவல் அமைப்பு, முதன்மைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பில் முக்கியப் பங்கு வகிக்க உள்ளது.

## மெரினா கடற்கரை அழகுப்படுத்தும் திட்டம்

உலகிலேயே இரண்டாம் நீண்ட அழகான கடற்கரை சென்னையின் மெரினா கடற்கரையாகும். இதன் அழகிற்கு அழகு சேர்க்கும் வகையில் மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2003–இல் தொடங்கி வைக்கப்பட்டது. மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் விரிவான திட்டத்தை இக்குழுமம் தயார் செய்துள்ளது. இதன் பரிந்துரைப்படி தமிழக கடற்கரை மேலாண்மைக்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் தனியாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் முடிய உள்ள 3.2 கி.மீ. மணற்பாங்கான மெரினா கடற்கரைப் பகுதியை ஆண்டிற்கு ரூ.36 இலட்சம் செலவில் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

## கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்

சென்னை நகர விளிம்பில் கோயம்பேடு கிராமத்தில் 295 ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் அழுகும் பொருள்களான காய், கனி, மலர்களுக்கான மொத்த விற்பனை அங்காடி வளாகம் அனைத்து நவீன வசதிகளுடன் ரூ.40 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. குளிர்பதனக் கிடங்குகள், துணை மின் நிலையங்கள், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், தபால்தந்தி அலுவலகம், சிற்றுண்டியகங்கள், எடை இயந்திர நிலையங்கள், நகரப் போக்குவரத்து பேருந்து நிறுத்துமிடம் ஆகிய வசதிகளை உள்ளடக்கிய இத்திட்டம் இக்குழுமத்தின் செயல் திட்டங்களின் மணி மகுடமாகும்.

## கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய ஆசியாவிலேயே பெரிய புறநகர் பேருந்து நிலையம் 18.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இட நெருக்கடி நிறைந்த பகுதிகளில் செயல்பட்டுவந்துள்ள அனைத்துப் புறநகர் பேருந்து நிலையங்களின் செயல்பாடுகள் இங்கு மாற்றப்பட்டு அவ்விடங்களில் நெருக்கடி குறைக்கப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு இணையாக இப்பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

## ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்


தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கிவரும் சீரிய பணியை ஆற்றிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலின்படி, கோயம்பேட்டில் புறநகர் பேருந்து நிலையம் அருகிலேயே முதன் முதலாக தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கான பேருந்து முனையம் ரூ.3 கோடி செலவில் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22.09.2003 அன்று திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

## காய்கறிக் கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம் :

கோயம்பேடு மொத்த விற்பனை அழுகும் பொருட்களுக்கான அங்காடி வளாகத்தில் நாளொன்றுக்கு 80 டன் திடக் கழிவுகள் கிடைக்கின்றன. இவைகளை அப்புறப்படுத்தி அழிக்கும் பணி பெரும் சுமையான ஒன்றாகும். இந்நிலையில் இக்கழிவுகளை மூலப் பொருளாக்கி அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் மாதிரித் திட்டம் ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு செயலாக்கம் பெற்றுள்ளது. இந் நிதியாண்டின் இறுதிக்குள் இத்திட்டத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுவிடும். ஆண்டிற்கு 17.2 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்கும் வண்ணம் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 200 கிலோ வாட் மின் சக்தி உற்பத்தியுடன் 3 டன் இயற்கை உரக் கட்டிகளும் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும்.

## திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் – இரண்டாம் நிலை:

கடற்கரை நிலையத்திலிருந்து திருமயிலை வரை உள்ள 8.55 கி.மீ. தூரத்தில் ஏற்கெனவே முதல்நிலை திட்டம் செயலாக்கம் பெற்று பொதுமக்கள் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். இரண்டாவது நிலையில் திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீ. தூரத்தை மேம்படுத்தி இரயில் போக்குவரத்து ஏற்பாட்டினைச் செய்ய மத்திய மாநில அரசுகள் 33 : 67 என்ற விகிதாச்சாரத்தில் செலவிட ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.706.35 கோடிகளாகும். இரண்டாம் நிலையில் 3.317 கி.மீ. தூரம் தரையிலும் 7.85 கி.மீ. தூரம் பாலத்தின் மீதும் செல்வதாக அமையும். இதில் 9 நிலையங்கள்



அமைய உள்ளன. அவைகளில் 7 நிலையங்கள் பாலத்தின் மேல் அமையும். தடங்கல் இல்லாத இருவழிப் பாதையில் இப்போக்குவரத்து அமையத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, கடற்கரையிலிருந்து திருவான்மியூர் வரை இரயில் போக்குவரத்து இயக்கப்பட்டு வருகிறது.



### உள்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளைத் துரித வேகத்தில் மேம்படுத்துவதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வீட்டுவசதி, போக்குவரத்து, குடிநீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய அடிப்படைக் கட்டமைப்புகளை, தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் உதவியோடு ஓராண்டு, மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு செயல் திட்டங்களாக இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. சென்னைப் பெருநகரத்தில் வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி, சாலை வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2004–2005–ஆம் நிதியாண்டில் ஓராண்டுத் திட்டத்தின் கீழ் ரூ2007.12 கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### வரன்முறைப்படுத்தும் திட்டம்

31.03.2002–க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை 2000, 2001 மற்றும் 2002–ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து 59,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரன்முறை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.220 கோடியினை வரன்முறைப்படுத்தும் கட்டணமாக வசூல் செய்து, வட்டித்தொகை ரூ.8.19 கோடியுடன் ரூ.228.19 கோடியினை அரசின் தொகு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

### உள்ளாட்சி நிதி உதவித் திட்டப்பிரிவு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில், உள்ளாட்சி நிதி உதவித் திட்டத்தின் மூலம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதியில் அடங்கிய உள்ளாட்சிகளுக்கு, சேவைத் திட்டங்களை மேம்படுத்த, மானிய உதவி 1982 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் (அதாவது 1998–99 நிதியாண்டிலிருந்து) ரூ.150 இலட்சம் மானியம் ஒதுக்கப்படுகிறது. ஒரு திட்டத்திற்கு ஒரு நேரத்தில், திட்ட மதிப்பீட்டில் 90 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூ.10 இலட்சம் கொடுக்கப்படும். கீழ்கண்ட திட்டங்களுக்கு மானிய உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

1. சாலை மேம்பாடு
2. சுடுகாடு அல்லது இடுகாடு மேம்பாடு
3. தெருவிளக்குகள் அமைத்தல்
4. குடிநீர்ப் பணி
5. கழிவுநீர் அகற்றும் பணி
6. மழைநீர்க் கால்வாய் அல்லது கழிவு நீர்க்கால்வாய்
7. குப்பை அகற்றும் பணிக்கு வாகனம் வாங்குதல்

### சமுதாயம் சார்ந்த சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான அந்தந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் "சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம்" செயலாக்கப்படுகின்றது. சமுதாய மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு அதற்கான திட்டங்கள் வகுக்கப்பெற்று, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் நிதிப்பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.100 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகளின் திட்ட மதிப்பீட்டில் 80 சதவிகிதத்தை குழுமம் மானியமாக அளிக்கின்றது. மீதமுள்ள நிதி 20%–இல் (10%) உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும், சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடமிருந்தும் (10%) பெற்று நிறைவு செய்யப்படுகின்றது.


## செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

### மொத்த விற்பனை உணவு தானிய அங்காடி அமைத்தல்:

சென்னை நகரின் மொத்த வியாபாரப் பகுதியான வள்ளலார் நகரில் (ஜார்ஜ் நகரில்) நெரிசலைக் குறைக்கும் வகையில் ஏற்கெனவே காய், கனி மற்றும் மலர் ஆகிய அழுகும் பொருட்களுக்கு மொத்த விற்பனை அங்காடிகள் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோயம்பேடு மொத்த விற்பனை வணிக வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் உணவு தானிய அங்காடி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

### துரித இரயில் போக்குவரத்து நிலையங்களின் வான்வெளிப் பகுதியை வர்த்தகப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் திட்டம்

இரண்டாம் நிலையில் அமைக்கப்படவுள்ள துரித இரயில் போக்குவரத்து நிலையங்களின் வான்வெளிப் பகுதிக்ளை வர்த்தகப் பயன்பாட்டிற்கு உபயோகப்–படுத்துவதற்கானத் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிச் குழுமம் தயாரித்துள்ளது. அதன்படி இரண்டாம் நிலையில் அமைய உள்ள ஒவ்வொரு நிலையமும் கலையம்சத்துடன் எல்லாவித வசதிகளுடன் கூடிய அலுவலக / வணிக மையங்களைக் கொண்டதாக அமைய உள்ளது. ஒவ்வொரு நிலையமும் சுமார் 20,000 சதுர மீட்டர் வர்த்தகப் பயன்பாட்டிற்கான தளப்பரப்பினைக் கொண்டதாக அமையும். மொத்தத்தில் சுமார் 2,00,000 சதுர மீட்டர் தளப்பரப்பளவு இத்திட்டத்தில் வர்த்தகப் பயனுக்காக அமைக்கப்பட உள்ளது. இதற்கான பூர்வாங்கப் பணிகளை குழுமம் ஆரம்பித்துள்ளது. ஆலோசனை வல்லுநர்கள் இறுதி வரைபடங்களைச் சமர்ப்பிக்க உள்ளனர். இவ் வரைபடங்களின்படி திட்டம் செயல்படுத்தப்படும்.



### வெளிவட்டச் சாலை

நகரின் மையப்பகுதியின் நெருக்கடியைக் குறைக்கும் முகமாகச் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டப் பரிந்துரைகளின் ஒன்றான உள்வட்டச் சாலையினைத் தொடர்ந்து, வெளிவட்டச் சாலை அமைக்கும் பணியில் முனைப்புடன் நடவடிக்கைகளை குழுமம் மேற்கொண்டு வருகின்றது. வடக்கு எல்லையான மீஞ்சூரையும் தெற்கிலுள்ள வண்டலூரையும் இணைக்கும் வெளிவட்டச் சாலை 62 கிலோ மீட்டர் நீளத்தில் அமைய உள்ளது; இதற்கான நில எடுப்புப் பணி துரிதமாகச் செயலாக்கம் பெற்று வருகின்றது.

கடந்த டிசம்பர் 26–ஆம் நாள் சுனாமி பேரலைகளால் தமிழக கடற்கரைப்பகுதிகளில் ஏற்பட்ட பேரிடர் துயர் நீக்க, நன்கொடைகள் வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நாளிதழ்களில் 16.01.2005 அன்று வேண்டுகோள் வெளியிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளை ஏற்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தலைவரும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அமைச்சருமான திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் 19.01.2005–இல் ரூ.3 கோடிக்கான காசோலையை குழுமத்தின் சார்பில் வழங்கினார்.

சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு திட்டமிடல் முறைமை மற்றும் நகர வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மூலம் சென்னைப் பெருநகர் பகுதியின் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகிய பணித்தத்துவத்துடன் மேற்காணும் திட்டங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இக்குழுமம் செயலாற்றி வருகின்றது. ❖

# சுனாமி நிவாரண உதவிகளில், சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதம் (17–2–2005)**



சுனாமி தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிக்க உதவி செய்வது குறித்து சில பிரச்சினைகள் சம்பந்தமாக கடந்த 4.2.2005 அன்று நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தின் தொடர்ச்சியாக இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலான மீன்பிடி படகுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு வழங்கப்படும் மானியம் 35 சதவிகிதத்தில் இருந்து 50 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது என்றும், இந்த மானியத் தொகை மாநில அரசு மூலமாக வழங்கப்படும் என்றும் 17.2.2005 அன்று மத்திய அரசு அமைச்சரவைச் செயலாளர் தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மானியம் போக, படகு வாங்க தேவைப்படும், மீதி பணத்துக்கு வங்கிகளுக்குச் செல்வதோ அல்லது வேறு ஏதாவது வ்கையில் பணத்தை ஏற்பாடு செய்வதோ அந்தப் பயனாளியின் விருப்பத்தைப் பொருத்தது என்று இருப்பதாக அறிகிறேன். ஆனால், பயனாளிகளுக்கு தேவைப்படும் வங்கிக் கடனை மாநில அரசே ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 100 சதவிகித மானியம் வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

விசைப்படகுகளை பொறுத்தவரை வேறு விதமான அணுகுமுறையை மேற்கொண்டுள்ளீர்கள். விசைப் படகுகளுக்கான மத்திய அரசின் மானியம் பொதுத்துறை வங்கி மூலமே வழ்ங்கப்படும் என்று தலைமைச் செயலாளரிடம் மத்திய அமைச்சரவைச் செயலாளர் தெரிவித்திருப்பதாக அறிந்தேன்.

வங்கிகளுக்கு அந்த மனுக்களை மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும். ஏற்கெனவே மானியம் சம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ளதில் எந்த மாற்றமும் இப்போது செய்யப்படவில்லை என்பதையும் அறிந்தேன்.

சிறிய மீன்பிடிப் படகுகள் விஷயத்தில் காட்டும் அணுகுமுறை விசைப்படகு விஷயத்தில் காட்டாதது ஆச்சரியம் அளிக்கிறது. இந்த விஷயத்தில் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும்.

தங்கள் மாவட்டத்தின் அருகே புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்காலில் பின்பற்றும் நடைமுறையை ஏன் இங்கு பயன்படுத்தக்கூடாது என்று நாகப்பட்டினம் விசைப்படகுகாரர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இந்தப் பிரச்சினையில் புதுவை மாநில அரசு விரிவான உத்தரவை பிறப்பித்துள்ளதை தங்களது தனி கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரைக்கால் பகுதியில் பாதிக்கப்பட்ட விசைப்படகு மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு விட்டது.

இதேபோன்று எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறதோ அதனை வங்கிக் கடனுக்கு தொடர்புபடுத்தாமல் மீனவர்களுக்கே வழங்க வேண்டும் என்று நாகப்பட்டினம் மீனவர்கள் கூறுகிறார்கள்.



சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ரூ. 7 இலட்சத்து 17 ஆயிரத்து 559 – க்கான காசோலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம், 28.2.2005 அன்று செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. ராமதாஸ், இ.ஆ.ப., செய்தி – மக்கள் தொடர்புத்துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் சிறப்புச் செயலாளர் திரு. வ. கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த விஷயத்தை நான் மேலும் நீடித்துக் கொண்டு போக விரும்பவில்லை. எளிதாக தீர்வு காணக் கூடிய பிரச்சினை இது. சிறிய படகுகள் விஷயத்தில் இப்போது என்ன அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதோ அதே அணுகுமுறை விசைப்படகுகள் விஷயத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். விசைப்படகுகளுக்கான நிதியையும் மாநில அரசிடமே வழங்க வேண்டும். விசைப்படகு மீனவர்கள் வங்கிக் கடன் வேண்டும் என்று விரும்பினால் தேவையான ஏற்பாடுகளை மாநில அரசு செய்யும்.

வங்கிகள் மூலமாகவோ அல்லது அவர்கள் சொந்த முயற்சி மூலமாகவோ கடன் பெற்று விசைப்படகுகளைப் பழுதுபார்க்கவோ அல்லது வேறு புதிய படகுகளை வாங்கவோ விரும்பினால் அவர்களுக்கு வழங்கப்படும் மானியமானது பலனளிக்கும் சொத்தாக அமைய வேண்டும். தகுந்த பாதுகாப்புடன் நிரந்தரச் சொத்தாக இருக்கும் வகையில் வழங்கப்படும்.

நான் தெரிவித்த யோசனைகளை ஏற்று சிறிய படகுகள் விஷயத்தில் சில மாற்றங்களைச் செய்ததற்காக மீண்டும் ஒருமுறை தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய படகுகள் விஷயத்தில் காட்டப்பட்ட அதே அணுகுமுறையை விசைப்படகு விஷயத்திலும் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டு விடும். மறுவாழ்வுப் பணிகளிலும் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வசதியாக இருக்கும். பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால் மீண்டும் இந்த யோசனைகளை நான் தெரிவித்துள்ளேன்.

எனவே இப்போது தெரிவித்துள்ள இந்த யோசனைகளை ஏற்றுத் தீர்வு காணுவீர்கள் என்று நம்புகிறேன்.

❖ ❖ ❖





# கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டத்தை 24.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் இரண்டு தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும் என்று "உலக தென்னை மர தினமான" 2.9.2004 அன்று அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்ற தென்னங் கன்றுகளை அக்குழந்தைகளின் பெற்றோர் தங்களுக்குச் சொந்தமான விளை நிலத்திலோ அல்லது தங்களது வீட்டின் அருகிலோ வளர்க்கலாம். பெண் குழந்தைகளுடன் இணைந்து வளர்கின்ற இந்தத் தென்னங்கன்றுகள் ஐந்து ஆண்டுகளில் மரமாகி அதன்பின் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஆயிரம் ரூபாய் அளவிற்குத் தேங்காய் விளைச்சலைத் தரும். இவ்வருமானத்தை அந்தப் பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும், இதர முன்னேற்றத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்னும் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் புதுமைத் திட்டத்தை அறிவித்தார்கள்.


இதன்படி, 24.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரோஜா–ஆறுமுகம் அவர்களது மகள் யுவஸ்ரீ, தாமரைச்செல்வி–அருண்குமார் ஆகியோரது மகள் கனிகாஸ்ரீ, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜோஸ்லைன்–அமல்ராஜ் ஆகியோரது மகள் சிந்து, ஜெயலட்சுமி–செல்வராஜ் ஆகியோரது மகள் ஜெசியாள், மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்மலா–மலையப்பன் ஆகியோரின் மகள் ஆகிய ஐந்து பெண் குழந்தைகளுக்கும் தலா இரண்டு தென்னங்கன்றுகளை அக்குழந்தைகளின் பெற்றோர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின்படி சென்னை மற்றும் நீலகிரி ஆகிய இரு மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் 2.9.2004க்குப் பிறகு பிறக்கும் அனைத்துப் பெண் குழந்தைகளும் பயனடைவார்கள். இதன் மூலம் நடப்பு ஆண்டில் சுமார் 2,286 எக்டேர் நிலத்திற்குச் சமமான அளவில் தென்னை மர சாகுபடி அதிகரிக்கும். இந்தத் திட்டத்தின் மூலம், பெண் குழந்தைகளின் பொருளாதாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன், இந்தியாவிலேயே தென்னை சாகுபடிப் பரப்பளவில் இரண்டாவது இடத்திலும், தென்னை உற்பத்தியில் முதல் இடத்திலும் உள்ள தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும் இத்திட்டம் உதவும்.

* * *

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சென்னை மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்கள் பயன் பெறும் வகையில் சிறந்த வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய 28 பயிற்சிகள் கீழ்க்கண்ட 7 மிகச் சிறந்த நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



1) மத்திய பிளாஸ்டிக் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி (சிப்பெட்) கிண்டி (பிளாஸ்டிக் பிராசஸிங் டெக்னாலஜி, கேட் கேம், சிஎன்சி, ஆட்டோகேட் பயிற்சிகள்),

2) ஆடை வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனம் (ஏடிடிசி) கிண்டி, (அப்பேரல் மேனுபாக்சரிங் டெக்னாலஜி, பேட்டன் கட்டிங், புரொடக்ஷன் சூப்பர்வைசர், தையல் மிஷன் ஆப்பரேட்டர் பயிற்சிகள்)



3) இன்ஸ்டிட்டியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மண்ட் கேட்டரிங் டெக்னாலஜி மற்றும் அப்ளைடு நியூட்ரிசியன், தரமணி (புட் பிவேரேஜ், ஹவுஸ் கீப்பிங், கேட்டரிங் பேக்கரி மற்றும் கன்பெக்ஷனரி பயிற்சிகள்)

4) டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக், தரமணி (நகை உற்பத்திப் பயிற்சி, அழகுக் கலை, செக்ரேட்ரியல் பிராக்டிஸ் பயிற்சிகள்)

5) இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் லெதர் புராடெக்ட்ஸ், குரோம்பேட்டை (காலணி தயாரித்தல், தோல் பொருட்கள் உற்பத்தி பயிற்சிகள்)

6) அல்ட்ரா சிஸ்டம், அசோக் நகர் (கணினி வன்பொருள் பயிற்சி)

7) இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் பியூட்டி தெரப்பி, திருவல்லிக்கேணி (அழகுக் கலைப் பயிற்சி).

மொத்தம் 1,210 நபர்கள், 2005 பிப்ரவரி மாதம் 21, 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் அந்தந்த பயிற்சி நிறுவனங்களில் நேர்முகத் தேர்வு நடத்தி பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் பயிற்சி வகுப்புகள் 2005 மார்ச் முதல் வாரத்தில் தொடங்கப்படும். பயிற்சி நிறுவனங்களுக்கான பயிற்சிக் கட்டணம் தாட்கோவினால் வழங்கப்படும். மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக தலா ரூ.500 வழங்கப்படும். மேற்படி பயிற்சி முடித்தவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக்கவும், சொந்தமாகத் தொழில் நிறுவனங்கள் தொடங்கிட வழிவகுக்கும். ❖

# அனைத்து மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு அரசு, செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக்கூட்டம் 23–2–2005 அன்று, சென்னை, தரமணியில் அமைந்துள்ள





திரைப்படக் கல்லூரி அரங்கில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களால் மேற்கொள்ளப் பட்ட 2004ஆம் ஆண்டிற்கான பல்வேறு களவிளம்பரப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. ராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள், செய்தி– மக்கள் தொடர்புத்துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் சிறப்புச் செயலாளர் திரு.வ.கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர், அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாவட்டங்களில் மேற்கொண்ட பல்வேறு களவிளம்பரப் பணிகள், அரசுத் திட்டங்களை விளக்கிடும் வீடியோ படக்காட்சிகள், பல்துறைப் பணி விளக்க முகாம்கள், பொருட்காட்சிகள், திரையரங்க ஆய்வு மற்றும் நினைவகப் பராமரிப்பு உட்பட பல்வேறு விளம்பரப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், அவ்வப்போது உடனுக்குடன் கிராமப்புற மக்களுக்குச் சென்றடையும் விதத்தில், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களின் களப்பணிகள் அமைந்திட வேண்டும் என்றும், மாவட்டங்களில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளுவதில் அனைத்து அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், கள விளம்பரப்பணிகளை மேற்கொள்வதில் கையாளப்பட வேண்டிய புதிய அணுகுமுறைகள் குறித்தும், அரசுத் திட்டங்களை மக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய யுக்திகள் குறித்தும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் திரு. இரா. பரதன் அவர்கள், துணை இயக்குநர்கள் திரு. மு. அண்ணாமலை, திரு.சி.என்.ஏ.ராஜேந்திரன், திரு.நா.தில்லைகோவிந்தன், சார்புச் செயலாளர் திரு. கே. இராமச்சந்திரன், உதவி இயக்குநர்கள் திரு. கே. டி. புகழேந்தி, திரு. என். ஆர். ஹரிகுமார், திரு.கே.பி.ஆர். சுகுமாறன், திரு. பி. நாராயணமூர்த்தி மற்றும் அனைத்து செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களும் கலந்து கொண்டனர். ❖

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் வணிக வரித்துறை, சிறு தொழில் துறையின் மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறைகளின் பயன்பாட்டுக்கென மொத்தம் 52 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.



தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் 151–ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 19.02.2005 அன்று சென்னையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# காவல்துறையினர் குடும்பங்களுக்கு நிதியுதவி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (10.2.2005)



செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், மணலி புதுநகர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. இரா. பழனி 9.12.2004 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், மங்கலம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. ரவீந்திரன் 5.1.2005 அன்றும், சென்னை மாநகர காவல் ஆயுதப்படை, 33ஆவது அணி "E" நிறுமத்தைச் சேர்ந்த இரண்டாம் நிலைக் காவலர் திரு.ஆர். பாஸ்கர் 9.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, 7ஆவது அணியில் தற்காலிக ஹவில்தாராக பணியாற்றிய திரு. கிஷோர்குமார் 14.1.2005 அன்றும் சாலை விபத்து காரணமாக காலமானார்கள் என்ற செய்தியையும்,

கோயம்புத்தூர் மாநகர், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர்.போஸ் 17.1.2005 அன்று இரயில் தண்டவாளத்தைக் கடக்கும் போது இரயில் மோதி காலமானார் என்ற செய்தியையும்,

சென்னை மத்திய இரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ந. கஜேந்திரன் 4.12.2004 அன்றும், சென்னை, துறைமுகம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சி. சந்திரன் மற்றும் தருமபுரி மாவட்டம், மதிகோண்பாளையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. டி. சுரேந்திரன் ஆகியோர் 19.12.2004 அன்றும், திருவாரூர் மாவட்டம், ஆயுதப்படைப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ப.தீனதயாளன் 23.12.2004 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வடக்குக் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. கோ. முத்துசாமி மற்றும் சென்னை, தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பி. சீனிவாசன் ஆகியோர் 1.1.2005 அன்றும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ்.துரை 5.1.2005 அன்றும், தூத்துக்குடி மாவட்டம் பகவந்தனை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ப. நாகராஜன் 7.1.2005 அன்றும், சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கு. சுப்பராயன் 9.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. இரா. கரியமால் 10.1.2005 அன்றும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ்.தாமஸ் 12.1.2005 அன்றும், சென்னை, புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து

வந்த திரு. எஸ். மோகன் 16.1.2005 அன்றும், வடக்குக் கடற்கரை போக்குவரத்துக் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. கே. தவசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ராஜ்குமார் ஆகியோர் 17.1.2005 அன்றும், புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. என். இலட்சுமணன், 22.1.2005 அன்றும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. டி. ராஜன் 26.1.2005 அன்றும், நாமக்கல் மாவட்டம், பேளுகுறிச்சி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ரா. பரமசிவம் 28.1.2005 அன்றும் உடல் நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. க. வேதாச்சலம் 26.12.2004 அன்றும், நீலகிரி மாவட்டம், மேல் குன்னூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. மு. சந்திரசேகரன் 27.12.2004 அன்றும், தேனி மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வந்த திரு. மா. சேகர் 28.12.2004 அன்றும், இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர். ஜெயபாலன் 6.1.2005 அன்றும், சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.எஸ். ஜெயகுமார் 10.1.2005 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.பெ. சக்திவேல் 16.1.2005 அன்றும் மாரடைப்பால் காலமானார்கள் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

சாலை விபத்துகளிலும், உடல்நலக்குறைவாலும், மாரடைப்பாலும் காலமான காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன். □

# சிறப்பான நிவாரணப் பணி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பன்னாட்டு சுனாமி மாநாடு பாராட்டு

தமிழ்நாட்டில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாக்கிய தமிழக அரசுக்கு, தாய்லாந்தில் நடந்த பன்னாட்டு சுனாமி மாநாட்டில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

ஆசியாவின் கடலோர நாடுகளை, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி சுனாமி என்னும் ஆழிப்பேரலை தாக்கியதால், பெரும் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது.

இதையடுத்து, இனிவரும் காலங்களில் சுனாமி வராமல் தடுப்பது எப்படி ? என்பது பற்றியும், சுனாமி தாக்கினால் நிவாரணப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது ? என்பது பற்றியும் விவாதிக்க, பன்னாட்டு சுனாமி மாநாடு, தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் அண்மையில் நடைபெற்றது.

அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், அம் மாநாட்டில் பங்கேற்ற நிபுணர்கள், தமிழ்நாட்டில் சுனாமி தாக்கிய பகுதிகளில் நிவாரணப் பணிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதாகப் பாராட்டினார்கள் என்று அம் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றுத் திரும்பிய செஞ்சிலுவைச் சங்க நிருவாகி திரு. ராஜ மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு, சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம் என, அம் மாநாட்டில் அறிவுரை வழங்கப்பட்டதாகவும், திரு. ராஜமகேந்திரன் தெரிவித்தார்.

□ □ □

# திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்

**26**.12.2004 அன்று இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா அருகில் ஏற்பட்ட பூகம்பத்தினால் மிகப்பெரிய சுனாமி என்னும் ஆழிப் பேரலைகள் உருவாகி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் பாதிக்கப் பட்டபோது, திருவள்ளூர் மாவட்டத்தில் திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் பழவேற்காடு ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டன.




மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்



திருமதி. பா. வளர்மதி, அவர்கள் தமிழக அரசு தலைமைக் கொறடா திரு. பி.எம். நரசிம்மன், அவர்கள் சுனாமி நிவாரண உதவி ஒருங்கிணைப்பாளர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர் திருமதி. பி. சோசம்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் திரு. ஆதி ராஜாராம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொன்னேரி சார் ஆட்சியர் திருமதி. சுஜிதா மஸ்வைத்யன், ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் திருவொற்றியூரில் 7 திருமண மண்டபங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டன. அரசு மற்றும் தனியார் மருத்துவர்களைக் கொண்டு மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டன. அதேபோல் பழவேற்காடு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் பொன்னேரியில் 6 திருமண மண்டபங்களில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு வசதியும் மருத்துவ வசதியும் 4 நாட்களுக்கு வழங்கப்பட்டன.

சுனாமியால் திருவொற்றியூர் பகுதியில் 17 நபர்களும், பழவேற்காடு பகுதியில் 12 நபர்களும் ஆக மொத்தம் 29 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சுனாமியினால் உயிரிழந்தவர்களுக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் உயிரிழந்த 29 நபர்களுக்கு

தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் வழங்கினார்.



மேலும் சுனாமியால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 4,413 குடும்பங்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் ரொக்கப் பணமும், 60 கிலோ அரிசி, வேட்டி, சேலை, இரண்டு போர்வைகள் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டன. இதனுடைய மொத்த மதிப்பு ரூ.1 கோடியே 65 இலட்சத்து 72 ஆயிரம் ஆகும்.

அதேபோல் சுனாமியால் தொழில் பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 455 குடும்பங்களுக்கு தலா ரூ. 2 ஆயிரம் மற்றும் வேட்டி, சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி மற்றும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவைகள் வழங்கப்பட்டன. இதன் மொத்த மதிப்பு 2 கோடியே 91 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

ஆகமொத்தம், திருவள்ளூர் மாவட்டத்தில் சுனாமியால் முழுமையாக பாதிக்கப்பட்ட 4,143 குடும்பங்களுக்கும், தொழில் ரீதியாக பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 455 குடும்பங்களுக்கும், சுனாமியால் உயிரிழந்த 29 நபர்களின் குடும்பத்திற்கும் நிவாரண உதவியாக இதுவரை ரூ. 2 கோடியே 49 இலட்சத்து 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

சுனாமியால் வீடு இழந்த குடும்பங்களுக்கு திருவொற்றியூர் பகுதியில் கார்கில் நகரிலும், பழவேற்காடு பகுதியில் தோணிரேவு கிராமத்திலும் மொத்தம் 512 தற்காலிகக் குடிசைகள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குடிசைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா.-வளர்மதி அவர்களும், தமிழக அரசு தலைமைக் கொறடா திரு. பி.எம். நரசிம்மன் அவர்களும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் திரு. ஆதி ராஜாராம் அவர்களும், மாவட்ட ஆட்சியர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப. அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.எஸ்.கண்ணன் மற்றும் திரு. டி. ஆறுமுகம் அவர்களும், சார் ஆட்சியர் திருமதி. சுஜிதாமஸ் வைத்யன், இ.ஆ.ப. அவர்களும் வழங்கினார்கள்.


இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி அவர்கள், வட்டாட்சியர்கள் திரு. ஜேக்கப் அவர்கள், திரு. கேசவன் அவர்கள், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. குணாளன் அவர்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

**– எம். அசோகன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவள்ளூர்.

### வெப்ப இரத்த உயிரினங்கள்

மனிதனைப் போலவே உடல் வெப்பத்தை ஒரே சீரான நிலையில் வைத்துக் கொள்ளும் சில உயிரினங்கள் உள்ளன. சுற்றுப்புற வெப்ப நிலைக்கு ஏற்ப மாறாமல் ஒரே நிலையாக வெப்ப நிலையையுடைய உயிரினங்கள் “வெப்ப இரத்த உயிரினங்கள்” என அழைக்கப்படுகின்றன. குதிரை, நாய், பூனை போன்ற குட்டிப் போட்டுப் பால்கொடுக்கும் உயிரினங்களும் பறவைகளும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

# இந்தியாவிலேயே மிகப் பெரிய காற்றாலை



ஆசியாவின் மிகப்பெரிய காற்றாலை நிறுவனமான சுஸ்லான் (தனியார் நிறுவனம்) இந்தியாவிலேயே முதன் முறையாக 2 மெகாவாட் திறனுடைய மிகப்பெரிய காற்றாலையை திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, செட்டிகுளத்தில் நிறுவியுள்ளது. இந்தக் காற்றாலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 8–12–2004 அன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்கள்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய இக்காற்றாலையின் உயரம் 80 மீட்டர்; ரோட்டார் விட்டம் 88 மீட்டர் ஆகும். இந்தக் காற்றாலை சுழலும் போது பிளேடு உயரம் சேர்ந்து 124 மீட்டர் வரை உயரம் இருக்கும். கின்னஸ் சாதனையில் பதிவு செய்யப்பட்டுள்ள குதுப்மினார் உயரமான 72 மீட்டரை விட 1.75 மடங்கு இது அதிகமாகும். இந்த 2 மெகாவாட் காற்றாலையின் மொத்த எடை 260 டன் ஆகும். டர்பைன் 70 டன், பிளேடுகள் 32 டன். நீளமான டவர் 160 டன் எடை கொண்டதாகும். குஜராத்திலிருந்து கன்னியாகுமரிக்கு 2,100 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து கொண்டு வரப்பட்டது. 150 அடி நீள டிரெய்லரில் இதன் பிளேடுகள் கொண்டு வரப்பட்டன.

இந்த ராட்சத 2 மெகாவாட் காற்றாலை ஆண்டுக்கு 72 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்கும் திறன் வாய்ந்தது. ஆண்டுக்கு 260 மெகாவாட் மின்சாரம், காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குகிறது. இந்தியாவில் மட்டும் இந்தத் தனியார் நிறுவனம் 9,000 எக்டேர் நிலத்தில் காற்றாலைகளை நிறுவி உள்ளது.

உலக அளவில் தமிழ்நாட்டைக் காற்றாலைத் துறையில் முன்னிறுத்துவதுடன் தேசிய அளவில் தொழில் நிறுவனங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் காற்றாலைகள் தொழில்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளன. இந்த அளவில் முன்பு குஜராத் மாநிலம் டெக்ஸ்டைல் மாநிலமாக இருந்தது. தமிழ்நாட்டில் மின்சாரம் தட்டுப்பாடின்றி கிடைப்பதால் தமிழ்நாடு, டெக்ஸ்டைல் மாநிலமாக வேகமாக மாறி வருகிறது.

இந்தக் காற்றாலைகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதால் வறண்ட நிலப்பகுதிகள் வேகமாகச் சிறு நகரங்களாக உருவாகி வருகின்றன. நாட்டின் வளர்ச்சிக்குக் காற்றாலை எரிசக்தி பெருமளவில் உறுதுணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**– உல. இரவீந்திரன்**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

* * *



# பால் உற்பத்தித்திறனை அதிகரித்திட வம்சாவழி சோதனைத் திட்டம்

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு பால் மிகவும் அத்தியாவசியமானது. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப பால் உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறு பால் பெருக்கத்தை அதிகரிக்க விவசாயிகளிடையே அதிக அளவில் பால் தரும் இன பசுக்களை அறிமுகப்படுத்தி உற்பத்தித் திறன் உள்ள இனவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் காளைகளைப் பரிசோதனை செய்து தேர்வு செய்யும் திட்டம்தான் வம்சாவழி சோதனைத் திட்டமாகும். அந்தத் திட்டம் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 1976ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போது நாட்டின பசுக்கள், எருமைகள் மட்டுமே இருந்தன. அவைகள் மிகக் குறைந்த அளவே பால் கொடுக்கும் திறன் கொண்டவையாக இருந்தன. கறவையின மாடுகளின் பால் உற்பத்தித் திறன் அதிகமாவதால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு குறைகிறது.

கறவைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டுமானால் அதிக உற்பத்தித் திறன் உள்ள முர்ரா இன காளைகளைக் கொண்டு எருமைக் கிடாரிகளையும், ஜெர்ஸி, ஹோல் ஸ்டீன், பிரீசியஸ் போன்ற பசு இனங்களின் காளைகளைக் கொண்டு பசு இன கிடாரிகள் உருவாக்குதல் மிகவும் அவசியம். இதற்கு இன விருத்திக்குப் பயன்படுத்தும் காளைகள் பால் உற்பத்தித் திறன் அதிகம் உள்ள கிடாரிகளை உருவாக்கும் தகுதி உடையவையா என பரிசோதிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு காளைகளைப் பரிசோதனை செய்து தேர்வு செய்யும் திட்டம்தான் வம்சாவழி சோதனைத் திட்டம் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் இந்திய பால் வள நிறுவனம் தீவிர பால்பெருக்குத் திட்டத்தை செயல்படுத்தும் இணையங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தை வம்சாவழி சோதனைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காகத் தேர்வு செய்தது.

எருமையின காளைகளுக்கு இத்திட்டம் ஈரோடு மற்றும் சேலம் மாவட்டத்திலும், பசுவின காளைகளுக்கு கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சி, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இத்திட்டம் 1986–இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஆறாவது மற்றும் ஏழாவது தொகுப்புக் காளைகளுக்கான வம்சாவழி சோதனைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. ஆறாவது தொகுப்பில் 10 காளைகளும், ஏழாவது தொகுப்பில் 20 காளைகளும், சோதனையில் உள்ளன. ஆறாவது தொகுப்பில் 6,350 சினை ஊசிகளும், ஏழாவது தொகுப்பில் 15,950 சினை ஊசிகளும் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் பிறந்த கிடாரி கன்றுகளின் பால் கறக்கும் அளவுகள் பதிவு செய்யப்பட்டு வந்தது. பிறந்த அனைத்து கிடாரிகளின் பால் அளவுகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் அதிக பால் உற்பத்தி செய்த கிடாரிகளின் தந்தை காளைகள் எவை என புள்ளியியல் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு தேர்வு செய்யப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட காளைகளின் மூலம் பெறப்பட்ட சினை ஊசிகள் மாநிலம் முழுவதும் உள்ள எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்ய விநியோகிக்கப்படும். இத்திட்டம் ஈரோடு மாவட்டம் வேட்டைக்காரன் கோயில், அய்யம்புதூர், ஒட்டர்காட்டு பாளையம், நாகதேவன்பாளையம், கணபதிபாளையம், காசி பாளையம் மற்றும் வடுகபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சுமார் 600–க்கும் மேற்பட்ட கிடாரி கன்றுகள் மற்றும் சிறந்த காளைகள் வம்சாவழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் 725 கூட்டுறவுச் சங்கங்களை கொண்டதாகும். இதன்மூலம் நாள் ஒன்றிற்கு 2,25,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. இதில் உள்ளூர் விற்பனை 44,000 லிட்டர். சென்னைக்கு அனுப்பப்படுவது 35,000 லிட்டர், கேரள இணையத்திற்கு அனுப்பப்படும் பாலின் அளவு 20,000 லிட்டர் ஆகும். மேலும் தமிழ்நாட்டில் முதன்முறையாக டெல்லியில் உள்ள மதர் டைரிக்கு வாரம் இருமுறை இரயில் மூலம் திடப்படுத்தப்பட்ட பால் சுமார் 80,000 லிட்டர் அனுப்பப்பட்டு வருவது, இந்த ஒன்றியத்தின் சிறப்பு அம்சமாகும். மேலும் பால் உற்பத்தியைக் கொண்டு வெண்ணெய், நெய் மற்றும் பால் பவுடர் போன்றவை தயாரித்து பல்வேறு மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஈரோடு பால் பண்ணையில் தயாராகும் பால் பவுடர் தரம் வாய்ந்தது என்பதற்குச் சான்றாக ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் அளிக்கப் பட்டுள்ளது. நாடு தழுவிய பாலின் தர விவரங்களின் தகவல் தொகுப்புத் திட்டத்தில் 15 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் தேசிய பால்வள வாரியத்தினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் கால்நடை தீவனத் தொழிற்சாலைகள் மூலம் தரமான கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான தரமான கால்நடைத் தீவனங்களை நேரடியாக விற்பனை செய்தும், வம்சாவழி சோதனைத் திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு அதிக அளவு பால் உற்பத்தி செய்யும் ஒன்றியம் என்ற பெருமைக்குத் தயாராக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்றால் அது மிகையாகாது.

**– எம்.ஆர்.லிங்கம்**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு.

* * *

## குளிர் இரத்த உயிரினங்கள்

அரணை, பாம்பு, ஓணான், ஆமை, முதலை, தவளை, தேரை போன்ற ஊர்வனவும், மண்புழு, ஈ, எறும்பு, தேள், சிலந்தி போன்ற முதுகெலும்பற்ற உயிரினங்களும், மீன்களும் ''குளிர் இரத்த உயிரினங்களாகும்''. சுற்றுப்புற வெப்பநிலைக்கேற்ப இவற்றின் உடல் வெப்பநிலை மாறுபடும் தன்மையுடையதாகும்.


# தேனி மாவட்டத்தில் முதன் முதலாக வானிலை ஆய்வுக்கூடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சி காரணமாகத் தேனி மாவட்டம் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை ஆய்வுக்கூடம் அமைக்கப் பட்டுள்ளது.

வானியல் துறையின் துணை இயக்குநர் ஜெனரல் திரு. எஸ். ஸ்ரீதரன், சென்னை மண்டல வானியல் மையத்தின் இயக்குநர் திரு. எஸ். நடராஜன் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. இராமசாமி ஆகியோரின் சீரிய முயற்சியால் பெரியகுளம் தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வானிலைக் கூடமொன்று அமைக்க உடன்படிக்கை ஏற்பட்டது.

தேனி மாவட்ட ஆட்சியர் திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப., அவர்களால் 3.1.2005 அன்று இவ்வானிலைக் கூடம் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி வளாகத்தில் தொடங்கப்பட்டு முதல் வானிலை காரணிகள் காலை 8.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட தோட்டக்கலைக் கல்லூரியில் பணிபுரியும் விஞ்ஞானிகளையும், மாணவர்களையும் கல்லூரி முதல்வர் முனைவர் செ. அன்பு அவர்கள் வரவேற்று பேசினார். இத்தகைய ஆய்வுக்கூடம் தேனி மாவட்டத்தில் முதன்முதலாகப் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

வானிலைக் கூடத்தில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பமானிகள், குளிர் குமிழ் மற்றும் காய்ந்த குமிழ் வெப்பமானிகள், சாதாரண மற்றும் தானியங்கி மழைமானிகள், காற்று திசை காட்டும் கருவி,





காற்றின் வேகத்தை அறியும் கருவி, காற்றழுத்தமானி ஆகிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை சென்னையைச் சார்ந்த உதவி வானிலை வல்லுநர் திரு. வி. கோவிந்தன் மற்றும் குழுவினர் மேற்பார்வையில் வானிலைக் கூடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கருவிகள் மூலம் தினசரி பதிவாகும் உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெப்பம், காற்றின் ஈரப்பதம், பனியை ஏற்படுத்தும் வெப்பத்தின் அளவு, மழையளவு, மழையின் தீவிரம், காற்றின் திசை, காற்றின் வேகம் மற்றும் காற்றழுத்தம் ஆகியவற்றைக் கண்டறியலாம். இந்த வானிலைக் காரணிகள் தேனி மாவட்டத்தில் வானிலை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரிக்க பெரிதும் பயன்படுகின்றன.

வானிலைக் காரணிகள் தினமும் காலை 8.30 மணியளவிலும் மாலை 5.30 மணியளவிலும் எடுக்கப்பட்டுச் சென்னையிலுள்ள மண்டல வானிலை மையத்திற்கு கணினி மூலம் மின் அஞ்சலாகவோ, தந்தி மூலமாகவோ அனுப்பி, பல்வேறு இடங்களிலிருந்து பெறப்படும் இத்தகைய புள்ளி விவரங்களைக் கொண்டு வானிலை முன் அறிவிப்பு செய்யப்படுகின்றது.


இந்தியாவில் அறுவடைக்கு முன் வானிலைக் காரணிகளால் ஏற்படும் சேதாரம் 10 சதவிகிதத்திலிருந்து 100 சதவிகிதமாகவும், அறுவடைக்குப் பின் ஏற்படும் சேதாரம் 10 சதவிகிதமாகவும் உள்ளது. எனவே, இத்தகைய வானிலைக் காரணிகளை முன்கூட்டியே தெரிந்து அறிவித்தால் விவசாயிகள் பெரிதும் பயனடைவர். குறிப்பாக, விவசாயிகள் விதைப்பு, அறுவடை போன்ற முக்கியப் பணிகளைத் துரிதப்படுத்தவோ அல்லது தாமதித்துச் செய்யவோ இத்தகைய வானிலை முன்னறிவிப்பு பயன்படுகின்றது.

மேலும், வானிலைக் காரணிகளை முன்கூட்டியே தெரிந்து எச்சரிக்கை செய்வதால் இடுபொருள்களான விதை, உரங்கள், களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி மருந்துகள், எரிபொருள், தண்ணீர் போன்றவற்றின் செலவுகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும், மழையின் அளவு, மழை பெய்யும் காலம் போன்றவற்றைத் தெரிந்து முன்னறிவிப்புச் செய்வதால் விவசாயிகள் அதற்கேற்றாற் போல் தங்கள் வேலைகளைக் குறிப்பாக நிலம் தயாரித்தல், உரமிடுதல், களையெடுத்தல், தானியங்களைப் பிரித்தெடுத்தல், உலர வைத்தல் போன்றவற்றை அமைத்துக் கொள்ளலாம். தேனி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வானிலை ஆய்வுக்கூடம் பொதுமக்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும் பெரும் பயனாக அமையும் என்பது உறுதி.

– ச. செல்வராஜ்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.



# சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி



சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் 1909ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு உதவுவதற்காகவே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இப்போது இம்மையம் மாணவச் சமுதாயத்திற்குப் பலவித சேவைகளை ஆற்றி வருகிறது. அவைகளில் சில பின்வருமாறு:–

இம் மையம் 1985 முதல் மாணவச் சமுதாயத்திற்கு; மத்திய, மாநில அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் பயிற்சிகளை நடத்தி வருகின்றது. மேலும் மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்தபின் எளிதில் வேலைவாய்ப்புப் பெறக்கூடிய வகையில் பலவகையான பயிற்சிகளையும் நடத்தி வருகின்றது.

ஐ.ஏ.எஸ். அதிகாரியாகி மாவட்ட ஆட்சியாளராக வேண்டும் என்பது பல மாணவர்களது கனவு. மத்திய தேர்வாணை நடத்தும் அகில இந்தியக் குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு என்ற பல படிக்கட்டுகளைத் தாண்டினால்தான் ஐ.ஏ.எஸ். போன்ற அனைத்திந்தியப் பணிகளில் சேரமுடியும்.

இத்தேர்வு எழுதுவதற்குப் பட்டம் பெற்றிருந்தாலே போதும், என்றாலும்கூட. கடும் உழைப்பும் இடைவிடாத முயற்சியும் இருந்தால் மட்டுமே இத்தேர்வுகளில் வெற்றி பெற முடியும். இந்திய ஆட்சிப் பணிகளில் முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவுகளை எடுத்து நிருவகிக்கும் பணிகளை மேற்கொள்ளும் சிறந்த நிருவாகிகளைத் தேர்வு செய்வதற்கேற்ற வகையில் இத்தேர்வு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தேர்வுக்குப் பயிற்சி அளிக்க பல தனியார் நிறுவனங்கள் கணிசமான கட்டணம் வாங்கிக் கொண்டு பயிற்சி அளிக்கின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் வரும் மே மாதம் 15ஆம் தேதி நடைபெறவுள்ள சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு (UPSC Civil Service Pre-Exam - 2005) – எழுதும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினத்தைச் (SC/OBC/Minorities) சேர்ந்த 50 மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்க மத்திய அரசு (Ministry of Social Justice & Empowerment, Govt. of India, New Delhi.) நிதியுதவியுடன் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் சேர்ந்த மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வும் அதையடுத்து நேர்முகத் தேர்வு மூலமாகவும் 50 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 23.2.2005 அன்று முதல் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு முதல்நிலைத் தேர்வை சிறப்பாக எழுதுவதற்கேற்ப பயிற்சி அளிக்கப்பட்டதுடன் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள், முதல் நிலைத்தேர்வு எழுதுவதற்கு நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஐ.ஏ.எஸ். போன்ற அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வுகளில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ச்சி பெறுவது என்பது தனிப்பட்ட முறையில் அவர்களது வாழ்க்கை உயர்வுக்கான வெற்றி; அதேசமயம், உயர் நிருவாகப் பணிகளில் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் இடம் பெறுவது நமக்குப் பெருமை அளிக்கும் விஷயம் என்கிறார் சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மைய இயக்குநர் திருமதி சுசீலா மாரியப்பன்.

**கல்வித்தகுதி**

இளங்கலைப் பட்டம் பெற்று பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 50,000/–க்குள் இருக்க வேண்டும். வரும் மே மாதம் 15ஆம் தேதி நடைபெறவுள்ள சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வு (UPSC Civil Service Pre-Exam - 2005) எழுத விண்ணப்பித்தவர்களுக்கு இந்த பயிற்சிக் காலங்களில் உள்ளூர் 35 மாணவர்களுக்கு ரூ.225/– வீதமும், வெளியூர் 15 மாணவர்களுக்கு ரூ.700/– வீதமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

மேலும் சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம் மார்ச் மாதம் கீழ்க்கண்ட பயிற்சியினை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

1. வேலையில்லா 60 பட்டதாரி பெண்களுக்கு நூற்பாலை மற்றும் தோல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப் பயிற்சியின் மூலம் பெண்களின் சுயவேலைவாய்ப்பு தொடங்குவதற்கு பெறும் பயன் உள்ளதாக இருக்கும். இப் பயிற்சி National Institute of Fashion Technology and Central Leather Research Institute நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சிக்கு மாநில அரசின் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ளன.

2. எளிதில் வேலைவாய்ப்பு பெறக்கூடிய வகையில் கால் சென்டர் நிருவாகப் (Call Centre Executive Training) பயிற்சி நடத்தப் படவுள்ளது. இப் பயிற்சியில் 50 மாணவர்கள் (ஆண், பெண்) தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவர். இப்பயிற்சி மாநில அரசின் – பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை துறையின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ளன.

3. விமானப் பயணச்சீட்டு மற்றும் பயண மேலாண்மை (Air Ticketing & Travel Management) என்ற மூன்று மாத காலப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகளில் சேர ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். பயிற்சிக் கட்டணம் ரூ.3,000/–. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ரூ.2,000/–. மூன்று மாத காலப் பயிற்சிக்கு பின் Campus Interview மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏர் இந்தியாவில் உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது.


4. மேலும் சென்னைப் பல்கலைக்கழக தொழில் நிருவாகக் கூட்டு (University Industrial Consultancy) மையத்தின் கீழ் 20 பல்வேறு விதமான கணினி பயிற்சிகள் (Computer Training) குறைந்த கட்டணத்தில் நடத்தப் படுகின்றன. (viz. Tally, 2D, 3D Aanimation, Graphic Designing & Editing, Web Developer, E-commerce, Network Admn. C++ etc.). மேற்கண்ட பயிற்சியின் விவரங்களை அறிய இயக்குநர், சென்னைப் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை மையம், சேப்பாக்கம், சென்னை–5. 25392255 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். ❖

## கோதுமை



இந்தியாவில் அரிசிக்கு இணையாக உணவுக்காகப் பயன்படும் கோதுமை 7,000 ஆண்டுகளுக்கு முன்பே பயிரிடப்பட்டதாம். இந்தியா, அபீசீனியா, ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்துதான் கோதுமைப் பயிர் உலகின் பிற நாடுகளுக்குச் சென்றுள்ளது. கோதுமையில் 30 ஆயிரம் ரகங்களும், வெள்ளை, மஞ்சள், சிவப்பு என நிறங்களும், மிருது, கடினம், மிகக் கடினம் என பல தரங்களும் உள்ளன.

# பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வி பயில உண்டு உறைவிடப் பள்ளிகள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது சீரிய முயற்சியால், கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (Kasturba Gandhi Balika Vidyalaya - KGBV) திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி புகட்டும் 37 உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential Schools) இந்த நிதியாண்டில் (2004–2005) நிறுவப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தமிழக மக்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றவர்களாக விளங்கிட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டி, கல்வித் துறைக்கு, குறிப்பாக, ஆரம்பக் கல்விக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. 2004–2005ஆம் ஆண்டில் பள்ளிக் கல்விக்காக மட்டும் 4,203 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சர்வ சிக்ஷா அபியான் (Sarva Shiksha Abhiyan), அதாவது, அனைவருக்கும் கல்வித் திட்டம் தமிழகத்தில் மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்படுவதை மத்திய அரசு தொடர்ந்து பாராட்டி வருகிறது. மேலும், இந்தியாவிலேயே கல்வியறிவைப் புகட்டும் இயக்கத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்று மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகமே தெரிவித்துள்ளது.

முறை சார்ந்த பள்ளிகளுக்கு (Regular Schools) செல்ல முடியாத பெண் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி வழங்கும் வகையில், இந்தியா முழுவதிலும் கல்வியில் பின்தங்கியுள்ள ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகள் தங்கிப் பயிலும் வகையில் அறிமுகப்படுத்தப்படும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) என்னும் திட்டத்தின்கீழ், ஆரம்பக் கல்வி புகட்டும் உண்டு உறைவிடப் பள்ளிகளை (Residential Schools), தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய ஊராட்சி ஒன்றியங்களில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டார்கள். இதுகுறித்து, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் அவர்களுக்கு 29.9.2004 அன்று கடிதம் எழுதினார்கள்.

தமிழகத்திலுள்ள பெண்கள் அனைவரையும் கல்வியறிவு பெற்றவர்களாக உருவாக்கிட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, தமிழகத்திலுள்ள கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், ஆரம்பக் கல்வி புகட்டும் 37 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா பெண் குழந்தைகள் உண்டு உறைவிடப் பள்ளிகளை (KGBV Schools) அமைத்திடவும், இதற்கென, 2004–2005ஆம் ஆண்டிற்கு 8.59 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்சிங் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தமிழகத்திலுள்ள கல்வியில் பின்தங்கிய 28 ஊராட்சி ஒன்றியங்களில், பெண் குழந்தைகள் தங்கிப் பயிலுகின்ற 37 உண்டு உறைவிடப் பள்ளிகள் உடனடியாக அமைக்கப்படும். இதன்மூலம் முறைசார்ந்த பள்ளிகளுக்குச் சென்று பயில இயலாத பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வி பெற்றிட வாய்ப்பாக இது அமையும்.

❖ ❖ ❖

# தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 14.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 1992 ஆம் ஆண்டு கள்வர்களால் தாக்கப்பட்டு, தனது இடது கால் மற்றும் இடதுகை எலும்பு முறிவு ஏற்பட்டுப் பலத்த காயமடைந்த, தற்போது நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி நிறுவன அனல்மின் நிலைய காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வரும் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களுக்கு செயற்கை கால் மற்றும் செயற்கை முன் கை பொருத்திக் கொள்ளவும் மற்றும் இதர மருத்துவச் செலவுகளுக்காகவும், தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதியிலிருந்து 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

கடந்த 1992ஆம் ஆண்டில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி நிறுவன அனல் மின் நிலைய காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றிய போது, நெய்வேலி அருகே உள்ள விஜயரங்கம் என்ற கிராமத்தில் திருட்டுக் கும்பல் ஒன்று பதுங்கியிருப்பதாகத் தகவலறிந்து அந்தக் கும்பலைப் பிடிக்கச் சென்றபோது கள்வர்களால் கடுமையாகத் தாக்கப் பட்டதில் இடது கால் மற்றும் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு பலத்த காயமடைந்து, பின்னர் அந்தக் காலில் தகடுகள் பொருத்தி அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்காக அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது கடமையில் இவர் காட்டிய அளவற்ற ஈடுபாட்டையும், துணிவையும் பாராட்டியதுடன், கள்வர்களால் தாக்கப்பட்ட இவருக்கு 1994ஆம் ஆண்டு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவியும், காவல் துறையிலிருந்து கருணைத் தொகையாக 20,000/– ரூபாயும் வழங்கினார்கள். இந்த உதவி தனக்குப் பேருதவியாக இருந்தது என்ற போதிலும், தற்போது போதிய பண வசதியற்ற காரணத்தால் செயற்கைக் கால் மற்றும் முன் கை பொருத்திக் கொள்ள இயலாத நிலையில் இருப்பதாகவும், இதற்கென 1.5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி உதவிட வேண்டும் என்றும் வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருந்தார். இந்த மனுவைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் உடனடியாக செயற்கைக் கால் மற்றும் செயற்கை முன் கை பொருத்திக் கொள்ளவும், மருத்துவச் செலவுக்காகவும் தற்போது மேலும் 1.5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் அவர்களுக்கு14.2.2005 அன்று தமிழ்நாடு காவலர் நல்வாழ்வு நிதியிலிருந்து 1.5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட தலைமைக் காவலர் திரு. எஸ். சுப்பிரமணியன் தனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். ◆

விழாக்காலம் - கோ-ஆப்டெக்ஸ் காலம்



# கோ-ஆப்டெக்ஸ்
## காலத்திற்கேற்ற புதுமையுடனும் பாரம்பரியப் பெருமையுடனும்... 1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை உங்களுக்காகவே வழங்குகிறது.

- காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
- சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
- ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
- கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
- உறையூர் பருத்தி சேலைகள்
- சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
- மதுரை சுங்கடி புடவைகள்
- சென்னிமலை ஏற்றுமதி தரம் பாய்ந்த படுக்கை விரிப்புகள்
- கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
- குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
- தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்






**இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.**

*வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள். முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.*

ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05,WPP-518

